ஆக்கியோன்:
புலியூர்க் கேசிகன்

# திருக்குறளும் அறிவுத் திறனும்

2 6 DEC 1964

கற்பகாம்பிகை
பதிப்பகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு
மவுண்ட் ரோடு சென்னை-2

கற்பகாம்பிகை வெளியீடு 2.
முதற்பதிப்பு: தை 1962.
பதிப்பு : உரிமையுடையது.
விலை ரூபா: 2-00.

மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், சென்னை-2.

26 DEC 1964

# பதிப்புரை

தமிழ்த் தெய்வமாகிய முருகப் பெருமானின் அருளால் நாங்கள் தொடங்கிய 'கற்பகாம்பிகை பதிப்பகத்தின் முதல் நூல் அந்தப் பெருமானைப் போற்றும், முருகன் பரிபாடலாக வெளிவந்தது.

எங்களுக்கு வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் என்றும் விளங்கியவர்களும், இன்றும் தோன்றாத்துணையாக இருந்து எங்களை இயக்கி வருகிறவர்களும், உயர்திரு. மலைக்குடி S. சூர்யநாராயண அய்யர் ஆவார்கள். அவர்களின் திருப்பெயரை வழுத்தியே இந்நூலையும் தமிழன்பர்களுக்கு வழங்குகின்றோம்.

திரு. புலியூர்க் கேசிகன் எழுதிய திருக்குறள் விளக்க வரிசை நூல்களுள் இது முதலாவது ஆகும். அடுத்துத் 'திருக்குறளும் பேச்சுத்திறனும்' முதலான நூல்களும் தொடர்ந்து இவ் வரிசையில் வர விருக்கின்றன.

தமிழ் அன்பர்கள் இதனையும் எங்கள் பதிப்பகத்தின் மற்றைய நூல்களையும் விருப்பமுடன் வாங்கியுதவி, எங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தருள வேண்டுகின்றோம்.

பதிப்பகத்தார்

## நூலின் உள்ளே . . . .


1. அறிவுத்திறன் .... 5
2. கல்வியும் அறிவும் ... 15
3. கல்லாமையின் துயரம் ... 36
4. கேள்வி ஞானம் ... 54
5. அறிவு வளம் .... 68
6. கீழ்த்தரமான அறிவு ... 83
7. குற்றத்தை நீக்குதல் ... 105
8. பேதைமையின் இயல்பு ... 120

26 DEC 1964

# 1. அறிவுத்திறன்

அறிவுத் திறன் வாழ்க்கைக்கு இன்றியமையாத மூலப்பேராற்றலாக விளங்குவது இதனை அடைவதும், நாளுக்கு நாள் பெருக்கிக்கொள்வதும் மனித இனத்தின் முதற்கடமை என்று கூறலாம். மனிதனை, மனிதன் என்ற ஒரு தகுதிக்கும், பிற உயிரினங்களை எல்லாம் ஆள்கின்றவன் என்ற நிலைமைக்கும் உரியவனாகச் செய்ததும், செய்வதும் இந்தத் திறன் ஒன்றேதான். இப்படிப்பட்ட ஓர் அரிய திறனைப்பற்றி ஆன்றோர்கள் கருதாமலிருப்பார்களா? காலகாலங்களாக அவர்கள் இதனை வரையறுக்கவும், இதனைப்பற்றிய சிறப்புக்களை அறிவுறுத்தவும், இதனை வளர்க்கவும் இடையறாது முயன்று வருகின்றனர். அந்த முயற்சிகள் தம்முடைய முழுப்பயனையும் தந்துவிடவில்லை என்றாலும், அவற்றால் அறிவுடையோர் பிறரினும் சிறந்தவர் என்ற உண்மை விளக்கமாவது உலகிலே நிலைபெற்றுள்ளது எனலாம். இந்தத் திறனைப்பற்றிச் சான்றோர் உரைத்த கருத்துக் களுள், திருக்குறளின் ஆசிரியர் பெருந்தகை எடுத்துக் கூறுவனவற்றை அறிந்து பயனடைய முற்படுவதே இந்நூலின் நோக்கமாகும்.

கண் ஒன்றைக் காட்டுகிறது. ஆனால் அது, தான் காண்பது யாதென்பதனை அறியமாட்டாத புலன். மூளைக்குச் செய்தியைத் தருவதுடன் அதன் வேலை

முடிந்து விடுகிறது. கண்டது யாது என்பதனைப் பற்றிய முடிவுகளைச் செய்வது மூளையின் வேலை யாகிறது.

மூளையின், இப்படிச் செய்திகளைச் சேகரிப்பதும், வகைப்படுத்துவதும், தொகுத்து வைப்பதுமான செயல்கள் எல்லாம் அதனுடைய சொந்த ஆற்றலினால் நிகழ்ந்து வருவதாகவும் சொல்லமுடியாது. மூளையும் கண்களைப்போலத் தன் வேலையைச் செய்வதுடன் நின்று விடுகிறது. அதன் பலாபலன்களைப் பற்றி எல்லாம் அது கவலைகொள்ளுவதில்லை.

நூலகத்தில் ஏராளமான அறிவுநூல்கள் தொகுக்கப் பெற்று நிறைந்தும் விளங்கலாம். எனினும் அதனை வேண்டியபடி பயன்படுத்திக் கொள்வது கற்றறிந்த அறிவுடையவனே அல்லாமல் நூலகம் ஆகமாட்டாதன்றோ? இதனைப்போலவேதான் மூளையும் விளங்குகிறது.

இந்த மூளையினிடத்தே பணிகொண்டு இயக்கும் ஆற்றலாக விளங்குவது மனம் என்பது. இதனை உள்ளம் எனவும் சிந்தை எனவும், சொல்லுவார்கள். நுட்பமான பொறியினை இயக்குகின்ற ஒருவனைப்போல இது விளங்குகிறது. புலனுணர்வுகளின் செய்திகளைச் சேகரித்து, அவற்றின் செயல்களை வகுத்துச் செய்யு மாறு ஏவி, அவற்றைக் கட்டுக்குள் நெறியோடு செல்லுமாறு செய்கிறது இந்த மனம்.

இயக்குவானும் பொறியைச் சரிவர இயக்குதல் என்ற பணியினைச் செய்துவருகின்றவனே யாவான். அவன் செய்யவேண்டிய செயலையும், அதனால் வரும் பலாபலன்களையும் எண்ணி ஆராய்ந்து அவனையும்

ஏவிப் பணிகொண்டு, நன்மையைப்பெருக்கிக்கொள்ளு கின்ற ஒருவனைப்போல விளங்குகிறது அறிவு.

இந்த அறிவு இயல்பாகவே மனிதனுக்கு அமைந் திருப்பதுதான். எனினும், அறியாமையும், உலகத்துப் பாசங்களும், ஆசைக் கோளாறுகளும் இதனை மூடி மறைத்துக்கொள்கின்றன. பாசம் மூடிக்கிடக்கின்ற பசுநீர்ப் பொய்கைபோல இந்த அறிவும் இவற்றால் மூடி • மறைக்கப்பட்டுத் தன்னுடைய ஒளிகுன்றி ஒடுங்கிக் கிடக்கின்றது. இதனை மூடியிருக்கின்ற மாயைகளான இவற்றையெல்லாம் அகற்றவேண்டும். தூசுபடர்ந்த பளிங்கினைத் துடைத்தாலன்றி அதன் தெளிவினைக் கொண்டு பயன்பெற முடியாததுபோல, இவற்றை அகற்றினாலன்றி அறிவினால் ஆகும் உண்மையான பயனையும் நாம் நுகர்வதற்கு இயலாது.

இந்த அறிவினை முறையே செலுத்துவதுதான் ஆன்மா என்பது. ஆன்மாவை உயிர் என்றும் சொல்லாம். உயிரின் இயக்கம் அறிவின் இயக்கத் தோடு இணைந்ததாக நிலவுகிறபோது அந்த இயக்கத் திற்கு உரியவன் சான்றோனாகின்றான். அவன், வாழ்வின் துயரங்களினின்றும் விடுதலைபெற்று, இன்ப நல்வாழ் வினையும் அடைகின்றான்.

உயிரின் இயக்கத்தை உருவாக்காது, உடலின் இயக்கத்தை மட்டுமே உருவாக்கிக் கொண்டவன் ஆசாபாசங்களுக்கும் முக்குண விகாரங்களுக்கும் இரையாகித் தானும் கெட்டவனாகித் தன்போன்ற பிறருக்கும் கேடிழைப்பவனாகி விடுகின்றான்.

இந்த உண்மைகளைத் தத்துவமுறையிலும் அறிவியல் மரபிலும் நன்கு ஆராய்ந்து கண்ட மெய்ஞ் ஞானச் செல்வராக விளங்கியவர்கள் நம் முன்னோர்கள். அந்த ஞானச்செழுமையின் சாரமாக விளங்குவது திருக்குறள். எனவே, அதன்கண் காணும் அரிய செய்திகள் நமக்கு நல்ல வழிகாட்டிகளாக அமையும் என்பது உறுதியாகும்.

மேலைநாட்டு டார்வின் என்னும் பெரியார் ஒருவர் உயிரின வளர்ச்சியை நன்கு ஆராய்ந்து உலகிற்கு உணர்த்தினார். அவருடைய அரிய முடிவுகள் அன்றைய உலகினர்க்குப் பெரிதும் வியப்பினையே தருவதாக இருந்தன. ஆனால், அவருக்கும் பலநூறு ஆண்டுகட்கு முற்படவே இந்த உயிரினப்படிமுறை வளர்ச்சியைக் கண்டறிந்து நம் முன்னோர்கள் உரைத் துள்ளனர்.

'புல்லாகிப் பூடாகி' என்னும் திருவாசத் தொடர் உயிரினங்களின் புலனறிவுத்திறனை ஒட்டியமைந்த வளர்ச்சியினை நமக்குக் காட்டவில்லையா?

விலங்கினங்களுட் சில மிகவும் புத்தியுள்ள செயல் களைச் செய்ததனையும் செய்வதனையும் நாம் அறிந் திருக்கின்றோம். இவைகளை எல்லாம் உணர்வுகள் என்றே கொள்ளவேண்டும். அறிவுத் திறன் என்று மயங்கிவிடலாகாது.

இடுக்கலான ஒரு வழியிடையே நிற்கும் சிறு குழந்தையைக் காணும் பசுவொன்று, அந்தக் குழந் தைக்கு ஊறின்றிக் கடந்துச் செல்வதனை நாம் காணலாம். இதுபோற் காக்கைகள் உணவைக் கண்டதும் கரைந்து தம் இனத்தைக் கூட்டி விடுவ

ளைதயும் பார்க்கலாம். தூக்கணாங் குருவியின் கூடும், கறையானின் புற்றும், தேனீயின் தேன்கூடும் மனித னாலும் செய்யமுடியாத நுட்பம் உடையவைதாம். எனினும், இவையனைத்தையும் கொண்டு அவை மனிதனினும் அறிவுத்திறன் பெற்றவை எனக் கருதி விடலாமா? இவையெல்லாம் சூழ்நிலைகளின் தொடர் பால் உருவான உணர்வு. இயற்கையுணர்வு என்றும் இதனைக் குறிப்பிடுவார்கள். இவற்றினும் தனிப்பட்டது, சிறப்புடையது அறிவுத்திறன் என்பதனை நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

வயிறு பசியின் உணர்வை அறிவிக்க, நாமும் உணவை நாடிச் செல்லுகின்றோம். சுவையான மண மான பல்வகை உணவுவகைகளை உண்டு பசியினைப் போக்குகின்றோம். நாளைப் பசிக்கும் வேண்டுமே எனச் சேமிக்கவும் செய்கின்றோம். இதனைச் சற்றுச் சிந்தியுங்கள்.

இயற்கையின் அமைதியினாலே, உடலின் இயக் கத்திற்கான சக்திகளைத் தருவதற்கான உணவின் தேவையினை உணர்த்துவதே பசியாகும். அது எழுந் ததும் உணவை நாடுதலும் இயற்கையின் தூண்டு தலே. சுவையான உணவுவகைகளை விரும்பிச் சாப் பிடுவதும், சுவையற்ற வகைகளை வெறுப்பதும் பழக்க வாசனையினாலே வந்தமைந்த இயல்புகள். சேமித்து வைப்பது நாளைக்கு வேண்டுமே என்ற நினைவின் செயல்.

இவைகளை மனிதன்மட்டும் செய்து வரவில்லை; உயிரினம் அனைத்துமே செய்துவருகின்றன. எனவே, இத்தகைய இயற்கைத் தூண்டுதல்களை நாம் •அறிவுத்

திறன் என்று கூறமுடியாது. அறிவுத்திறன் இவற்றி னும் வேறுபட்டது.

சட்டங்களைப் பயின்று வழக்காடுவதும், இலக்கி யங்களைப் பயின்று இனிமையுறப் பேசுவதும், விஞ் ஞான நூல்களைக் கற்று விளக்கமுற ஆராய்வதும் எல் லாம் தேடிச்சேமித்த செய்திக்கோவைகளின் பயனே எனலாம். அவை, அறிவுடைமையால் நிலைபெறுவன என்றாலும், அவற்றைமட்டுமே அறிவாகக் கொள்ள முடிவதில்லை. சிறந்த கல்வி, நினைவாற்றல் என்று வேண்டுமானால் நாம் அவற்றைக் கொள்ளலாம்.

ஒப்பிட்டுக் காணும் தன்மைதான் அறிவு என்று கூறலாமோ? அதாவது, தான் தற்போது கண்ட ஒன்றை முன்னர்த் தான் கண்டதாக நினைவிலே எழு கின்ற பிற ஒன்றுடன் ஒப்பிட்டுக் காண்பதுதான் அறிவுடைமையா? அப்படியானால், நாய்கள் மனிதரி னும் மிக்க அறிவுடையன என்ற முடிவுக்கு நாமும் வரவேண்டியவர்களாகி விடுவோம். இந்த ஆற்றல் அவற்றுக்கும் உளதல்லவா?

'இன்னின்னவற்றை, இப்படிஇப்படிச் செய்தால், இன்னின்ன விளைவுகளை எதிர்பார்க்கலாம்' என்று திட்டமிட்டுச் செய்து வருவதுதான் அறிவுத் தன் மையா? ஆனால், இதே திட்டமிடும் தன்மை கூடுகட்டும் பறவைகளிடமும் வளைதோண்டும் எலிகளிடமும்கூட இயல்பாகவே அமைந்திருக்கின்றதே!

அப்படியானால், அறிவுத்திறன் என்பதுதான் யாது? சிக்கலான இந்தக் கேள்விக்கு விடைகாண ஓரளவுக்கு நாம் முயல்வோம். அதற்கு முதற்படி யாகப் பகுத்தறிவு என்ற சொல்லை நாம் ஆராயலாம்.

இந்தச் சொல் இரண்டு பதங்களைக் கொண்டது. அவை பகுத்தல், அறிதல் என்பன. பகுத்தல், ஒன்றை அதனைக் கண்ட அளவோடேயே கொள்ளாது, அதனைப் பலபடியாகவும் பகுத்தல். உதாரணமாக, 'மனிதன்' என்றதும் அவனுடைய உடலமைப்பு, கவர்ச்சி, உள்ளத் திண்மை, குணம், அறிவுத்திறன் என்ற பல்வேறு சாயைகளிலும் அவனைப் பகுத்துக்கொண்டு ஆராய முற்படுகின்ரேமே அதுதான் பகுத்தல். இரண்டாவது அறிதல். இது 'அறி' என்ற பகுதியைக் கொண்டது. அதாவது, அப்படிப் பகுத்தபின் அந்தந்தப் பகுதியின் கீழ் அவன் பொருந்துகின்ற உண்மையான நிலைமையை ஆராய்ந்து அறிவது. ஆகவே, எதனையும் பகுத்து அறிதல்தான் பகுத்தறிவு என்று ஆகிறது. ஆங்கிலத்தில் சொல்வதானால் 'Analatical mind' என்று சொல்லுகிறார்களே அதுதான் உண்மையான பகுத்தறிவு ஆகும்.

கிராம மக்களிடையே வழங்கும் சில சொற்கள் அறிவின் பல சாயைகளையும் நம் கண்முன் கொண்டு நிறுத்துவனவாயிருக்கின்றன. அவை, பழக்க வாசனை, சேர்க்கை வாசனை, பரம்பரை வாசனை, இயற்கை வாசனை, புத்தி நுட்பம், குறுகுறுத்த புத்தி, கோணல் புத்தி, இடும்புப் புத்தி, நிமிர்ந்த புத்தி, கல்வி வாசனை என்பன.

பழக்க வாசனை என்பது அவனவன் பழக்க வழக்கங்களின் காரணமாக அவனவனிடம் படிந்து விடுகின்ற மனப்போக்கு. சேர்க்கை வாசனை என்பது, சூழ்நிலைகள் நண்பர்கள் போன்ற சேர்க்கைகளின் காரணமாக ஒருவனிடம் உருவாவது. பரம்பரை வாசனை என்பது குலமரபு காரணமாக ஒருவனிடம்

ஏற்படுகின்ற மனப்போக்கு. இயற்கை வாசனை என்பது, இவற்றிலே சேராத ஒருவகைத் தனித் தன்மை. புத்தி நுட்பம் என்பது நுட்பமான கூர்த்த அறிவு. இதனைக் கூர்மையான அறிவு என்றும் சிலர் சொல்வார்கள். குறுகுறுத்த புத்தி என்பது எப் போதும் எதனையாவது எண்ணிக்கொண்டே, அதிலும் விபரீதமாக நினைத்துக் கொண்டே இருக்கும் ஓர் இயற் கை. கோணல் புத்தி, ஏறுமாறாகவே எப்போதும் நினைக்கும் விபரீதமான மனவியல்பு. இன்னும், எத் தனையோ பல சாயைகள்! இவற்றுள் அறிவுத்திறன் என்பது எது? அறிவின் சாயைகள் இவை என்றாலும், அறிவுத்திறன் என்று இவற்றுள் எதனையும் சொல்ல முடியாது.

ஆகவே, இவற்றினும் மேலாக, எதனையும் பல வேறு நிலைகளினின்றும் பகுத்துப் பகுத்து உண்மை யை அறிந்து, பொய்ம்மையைக் களைந்து, துணிந்து செயற்படுகின்ற பகுத்தறிவே அறிவுத்திறன் என்று நாம் கொள்ளலாம். அப்படியானால், இந்த அறிவு வளர்ச்சிக்குப் பாடுபடுவோரை, அறிவுத்திறன் வாழ்க் கைக்கு முதன்மை என்போரை, நாத்திக வாதியர் என்று சிலர் பழிப்பது எதனால்? இதனை நாம் கவனிக்க வேண்டும்.

மத தத்துவம் பொதுவாகத் தர்க்க ரீதியான கற்பனையைத் தனக்கு அடிப்படையாகக் கொண்டது. இதனை எந்த அறிஞரும் மறுக்கத் துணிவதில்லை. காலஞ் சென்ற **அபுல் கலாம் ஆசாத்** அவர்கள் ஓரிடத் தில் சொல்லியிருக்கிற உவமானம் இதனை நன்கு விளக்குவதாகும்.

"ஒரு புத்தகம்; அது ஒரு நல்ல நாவல்; முன்னுகச் சில பக்கங்களும் பின்னுகச் சில பக்கங்களும் அதிற் காணுமற் போய்விட்டன. இடைப் பகுதியைப் படித்து அறிந்தான் ஒருவன். முன் பகுதி இப்படித்தான் இருந்திருக்கவேண்டும்; பின்னர் இப்படித்தான் முடிதல் வேண்டும் என்று அவன் தன் மனத்திலே ஒரு முடிவுக்கு வந்தான். இதேபோல, உலக வாழ்வை அநுபவித்த அநுபவிக்கிற மனித இனமும், இதற்குமுன் 'எங்கிருந்து வந்திருப்போம்?' எனவும், இனி 'எங்குச் செல்லப் போகிறேம்?' எனவும் செய்த கற்பனைக் கட்டுக் கோப்புக்களே மதங்கள் எல்லாம்." என்பார் அவர்.

ஆகவே, இந்தக் கட்டுக்கோப்பிலே இருப்பவர்கள், உலக வாழ்வை மட்டுமே லட்சியமாகக் கொண்டவர்களை, உலகாயதர்களை, 'நாத்திகர்கள்' என்று பழிக்கின்றனர். இந்தப் பழிப்புரையில் நாம் எங்ஙனம் அக்கறை காட்ட முடியும்? அறிவுத் திறனுனது நம்மிடையே வளரவேண்டுமானுல் அதற்கு நாம் செய்யவேண்டிய காரியங்கள் பலவாகும். அவற்றுள், முதலிலே நம்மிடம் உள்ள அறியாமையை நாம் அறவே அகற்றிக் கொள்ள முயலுதல் வேண்டும். அதற்குக் கல்வியின் உதவி மிகவும் தேவை. ஆன்றேர் அநுபவங்களும் அறிவுரைகளும் நமக்கு வழிகாட்டியாக உதவும். அடுத்தது கேள்வி. இப்படிக் கேட்டறிவது சொல்பவர்கள் நேரில் இருந்தால்தான் இயல்வதாகும். இது அனைவருக்கும் இயலாதாகவே முன்னேர் எழுதி வைத்தவற்றைக் கற்பதிலே ஈடுபடுகின்றேம். இத்தகைய தெளிந்த கல்வியால் மனமாசுகளை அகற்றிப் பகுத்து அறியும் திறனுடன் கூடிய மனித இனம்,

குறிப்பாக நம் தமிழ் இனம் அறிவுத்திறனைப் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும்.

ஒன்றை 'அது தனக்கு எவ்வாறு பயன்படுகிறது என்று மட்டுமே கருதுவது அறிவன்று. அதன் அமைப்பு, அது உருவான வகை, அதனை முறையே எங்ஙனம் பயன்படுத்தினால் பெரும்பயன் கிடைக்கும் என்று எல்லாம் அறிந்து, உணர்ந்து, அமைத்து வாழ்வதே அறிவுடன் கூடி வாழ்வதாகும். வித்தின் பயனையும் தன்மையினையும் உணராமல் குற்றியுண்பது அன்றைய பசியைப் போக்கிவிடுமேனும், அது அறிவுடைமை யாகாது என்று அறிதல் வேண்டும்.

இனி, வள்ளுவர், அறிவுத்திறனின் வளர்ச்சிக்குச் சொல்லியுள்ள பல குறள்களையும் நாம் தனித்தனியாக எடுத்து ஆராயலாம். அவை தனித்தனிச் சுவையினை உடையன; தனித்த செறிவும் உடையன. எனவே, மேற்போக்காகப் படித்துவிடாமல், ஒவ்வொரு சொல்லை யும் நன்றாகச் சிந்தித்துச் சிந்தித்துத் தெளிவாக உணர முற்படுவோமாக.

★

# ௨. கல்வியும் அறிவும்

'மனிதன், சமுதாயத்திலே ஓரளவிற்காவது மதிப்புடன் வாழவேண்டுமானால், அவனுடைய அறிவுத் திறன் நன்றாக இருக்கவேண்டும். அறிவுத்திறன் பெருக வேண்டுமென்றாலோ, அவன் நல்ல முறையிலே கல்விப்பயிற்சி உடையவனாக இருக்கவேண்டும். இது தெளிவாகும்.

கல்வி, முறையான சிறந்த கல்வி, நாட்டில் எங்கணும் பரவாவிடில், அறிவு வளர்ச்சியும் அங்கு இராது. அந்நாட்டிலே நல்ல வாழ்வும் ஒருபோதும் மலராது. இதனையும் நாம் அனைவரும் உணர்தல் வேண்டும்.

ஆனால், 'கல்வி' என்ற பெயரால், இந் நாளிலே கணக்கற்ற மாணவர் பெறுவது எல்லாம் சிறந்த கல்வியாகுமா? எனில், இதனைப்பற்றி நாம் சொல்லித் தானாக வேண்டும்.

கல்வியின் நோக்கம் என்ன? பட்டம் பெறுவதோ, பிழைப்புக்கு உதவி எனக்கருதிப் பயில்வதோ கல்வியின் முழுநோக்கம் ஆகாது. அவையும் கல்வியினால் வந்து கிடைப்பனவே. ஆயினும், அவையே கல்வியின் நோக்கமாகி விடுவதும், அவற்றுக்காகவே •கற்பதும்

கற்பிக்கப் படுவதும் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு நன்மை தருவதன்று.

கல்வியின் உண்மையான நோக்கம், மனிதனின் மனத்திலே படர்கின்ற மாசுகளை எல்லாம் அகற்றி, அவனை நல்லவனாக, நேரான வாழ்விலே நாளும் செல்பவனாக ஆக்கி, அவனுக்கும் அவன்மூலம் அவனுடைய நாட்டிற்கும் நன்மை விளைவிப்பதாக இருத்தல் வேண்டும். இது பற்றியே, முன்னாளில், படிப்போடு மாணவரின் ஒழுக்கமுறையும் மிகவும் கண்டிப்பாகக் கவனிக்கப்பட்டது. இளமைப் பருவத்திலே படியாத ஒழுக்கம், வாழ்விலே என்றுமே பின்னர் வந்து படிவதில்லை. ஆகவேதான், அதற்கு முதன்மை காட்டாத ஒரு கல்வியினை, உண்மையான கல்வி என்று கூறவே சான்றோர் தயங்குகின்றனர்.

இந்நாளைய மாணவருட் சிலரின் ஒழுக்கப் போக்கினைக் கவனிக்கின்ற எந்த அறிவுடையவனுக்கும், இப்படியேநம் கல்விமுறையானது ஒழுக்க வரம்பின்றிப் போய்க்கொண்டே இருந்தால் இதன் விளைவு எங்குப் போய் நிற்குமோ என்ற கவலை ஏற்படாமலிருக்காது.

கல்விக்கூடம்தான் நாளைய மனிதனை உருவாக்குகின்றது. அங்கே படிகின்ற நல்ல பழக்கமோ தீய பழக்கமோதான் வாழ்வு முழுமையும் ஒருவனிடத்தில் நிலைபெறுகிறது. இதனை அறியாதவரல்லர் நம்மவர்கள். எனினும், கல்விநிலை இன்று மிகவும் கவலைப் படத்தக்க வகையிலேயே போய்க்கொண் டிருக்கிறது.

ஒழுக்கத்தைப் பேணுதற்கும், அறிவை வளர்ப்பதற்கும் பயன்படவேண்டிய கல்வி, 'பட்டதாரிகள்' என்ற ஒரு தனி இனம் உருவாவதற்கும், வேண்டாத ஒழுக்

கங்களும், கட்டுப்பாடற்ற தன்மையும், எவரையும் மதியாத செருக்கும் வளர்வதற்கும் உதவுவதென்றால், நம் நாட்டின் வருங்காலத்தைப் பற்றி நாம் எப்படி நினைப்பது?

கல்வியாவது யாது?

நமக்குத் தெரியாத பல விஷயங்களையும், நம் முன்னோரின் அநுபவங்களையும், படைப்புக்களையும் நாம் முயன்று அறிந்து, நம் வாழ்விற்கு அவற்றை உபயோகமாக்கிக் கொள்ள உதவுவதே கல்வி. அதனை ஒவ்வொருவரும் முயன்றே அறிய வேண்டும். இதனாலேயே அது கல்வி என்றும் கூறப்பட்டது.

இது, அறிவிலே ஒப்புமை கண்டு தெளிவதற்கும், முன்னோரை ஒட்டி நாமும் முடிவுகளை வகுப்பதற்கும், அவர் தவறியவற்றிலே நாமும் சிக்கிவிடாமல் விழிப்பாயிருப்பதற்கும் உதவ வேண்டும். அறிவின் விளக்கம் கல்வி என்ற துணை இல்லாமல் என்றுமே சிறப்பாயிராது. சிறப்பாயிராது என்று சொன்னதன் கருத்து, அது கேள்வியினாலும் விளக்கம் அடையலாம் என்பதனாலேதான்.

இனிக், கல்விபற்றிக் குறள்மணிகள் கூறும் செய்திகளை எல்லாம் நாம் காண்போம்.

### 1. கசடறக் கற்பதே கல்வி!

மனிதன் இயல்பிலேயே அறியாமையாகிய கசடினால் மூடப்பெற்றிருப்பவன். இதனைப் 'பாசம்' என்பர் தத்துவநூலார். அந்த அறியாமை நீங்கி, அறிவு விளக்கம் பெறப்பெறத்தான் மனிதன் மனிதத் தன்மையை அடைகிறான். முற்றும் அறியாமையை அகற்றிக்கொள்வது என்பதும் எளிதன்று. என்றாலும்,

முடிந்த அளவிற்காவது அகற்றிக்கொள்ள மனிதன் முயலவேண்டும் அல்லவா? அறவே அறியாமை நீங்கியவன் கடவுளுக்குச் சமானமாகிறான் என்பார்கள். இதுபற்றியே, கடவுளை 'அறிவன்' என்றும், 'பேரறிவு உடையோன்', 'முற்றறிவுடையோன்' என்றும் ஆன்றோர்கள் போற்றுவார்கள்.

கல்வியின் நோக்கம் இப்படி மாசினைப் போக்கிக் கொள்வதற்காகவே என்றிருக்கவேண்டும். அதற்கேற்ற நூல்களைத் தெரிந்தெடுத்தே நாம் கற்கவும் வேண்டும்.

'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்!' இப்படி ஒரு பழமொழி நிலவுகிறது. அவன் பண்டிதன் ஆகலாம்; ஆனால், அவன் கற்றவன் ஆகமுடியாது. வாய்சாலகமாக அவன் பேசலாம்; ஆனால், வாய்மை உடையவனாக அவன் விளங்க முடியாது.

ஆகவே, கற்கும் நோக்கம் மனத்திலே படர்கின்ற படர்ந்திருக்கின்ற மாசுகளை அகற்றுவதற்கே என்று அறிந்து, அந்த உறுதியுடன் கற்று, அனைவரும் அறிவுடையோர் ஆதல் வேண்டும்.

இப்படிப்பட்ட கல்வியைக் கற்றவன் அதற்கேற்ற படியே வாழவும் வேண்டும். வாழ்விலே மேற்கொள்ளாத கல்வியால் எத்தகைய பயனுமே இல்லை.

கசடறக் கற்றபின், அந்தக் கசடற்ற நிலைக்குத் தகுதியுடையவனாகத் தன்னை நிலை பெறுத்தலும் வேண்டும். அந்த உறுதியும் தெளிவும் அவசியம் வேண்டும். கல்வியைப் பற்றிய சிறந்த கருத்து இதுதான். கற்றபின், மயக்க உணர்வுகள் பல வகையாலும் தன்னை வந்து ஆட்கொள்ளுகின்ற போதெல்

லாம், அவன் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். 'தான் மனத் தெளிவுடையவன்' என்று உறுதிகொள்ள வேண்டும். அந்தத் தெளிவைப் பாழாக்கும் எந்தத் தீயநினைவுகளும் தன் உள்ளத்தை ஆட்கொள்ள அவன் இடந்தருதல் கூடாது. இதனை வற்புறுத்துவது போலவே, குறள் ஒரு சிறந்த சட்டத்தை நமக்கு வகுத்துரைக்கிறது.

கற்கக் கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

'மனத்திலேயுள்ள குற்றங்கள் நீக்குவதற்காகக் கற்க வேண்டியவற்றை ஒருவன் கற்பானாக; அப்படிக் கற்றபின், (அதாவது அவன் மனக் குற்றம் நீங்கியவனாயினபின்,) அதற்குத் தகுதியான வகையிலேயே அவன் நிலைபெறுவானாக."

கற்றவன் அந்தத் தெளிவிற்கு ஏற்ற வாழ்க்கையினையே உடையவனாதல் வேண்டும். படித்தும், பண்பாடற்றவனாயிருந்தால், 'படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோயில்' என்றாற்போல, அவன் படித்த படிப்பும் கேலிக்கிடமாகிவிடும்.

இஃதன்றி, இதன் பொருளை மற்றொரு வகையாகவும் சிலர் உரைப்பர். 'கற்பவற்றைப் பிழையின்றிக் கற்றபின், அதற்கேற்ப நிற்பாயாக' என்பது அது. கற்பவற்றினை அவற்றின் தகுதி அறிந்து கற்றுக் கொள்ளாதபோது அதனைப் பிழையறக் கற்றலும் வீணேயல்லவோ? இதனை நாம் நன்றாக மனத்திற்கொள்ளல் வேண்டும்.

இன்றைய நாளிலே, கல்வித்துறையாளர்கள், குழந்தைகட்கு நேர் முறையிலேயே கற்பிக்க

வேண்டுமே தவிர, எதிர் முறையிலே கற்பித்தல் கூடாது என்பர். உதாரணமாக 'உண்மை பேசுதல் நல்லது; அது உயர்வு தரும்.' என்று குழந்தைகளின் மனத்திலே பதியுமாறு செய்யவேண்டுமே தவிரப், 'பொய் சொய்லாதே; அது தவறு' என்று சொல்வது முறையாகாது. இவை போல, மனத்திலே நல்ல செயலைகளைச் செய்யும் ஆர்வமும், நல்ல பண்பாடு களும் பதியுமாறு, அதற்கு வேண்டிய நூல்களையே தெரிந்து எடுத்து நாம் கற்கவேண்டும்; கற்பிக்கவும் வேண்டும். குப்பைகளை எல்லாம் கற்பது கூடாது; அப்படிக் கற்பிப்பதும் அறிவுடைமையாகாது.

## 2. உயிரின் இரு கண்கள்

உகத்திலே வாழ்கின்ற உயிரினங்களுக்குக் 'கண்' இன்றியமையாத ஓர் உறுப்பாகும். கண் அற்றவரின் அல்லல்களை நாம் நன்ருக அறிவோம். ஊனக்கண்களின் இன்றியமையாமையே இத்துணை அளவுக்கு இருக்கு மாளுல், அவற்றினும் சிறந்த ஞானக்கண்ணின் பெருமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

அந்த ஞானக்கண்கள் தாம் யாவை?

ஒரு மனிதனின் வாழ்வியலை எடுத்துக் கொண் டால், அதனை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்து விடலாம். பிற உயிரினங்களைக் காட்டினும் மனிதன் வேறுபாடு உடையவன். அவற்றுக்கு இல்லாத, ஆருவது அறிவு என்று போற்றப்படும், "அறிவுத் திறன்" இவனிடம் உள்ளது. இந்த அறிவினை, இவன் முறைப்படி கையாள்வதன் மூலமாக, இவன் தன்னையும் மனிதன் என்று உயர்த்துக் கொள்ளலாம். இன்றேல், இவனும் விலங்கினங்களுள் ஒன்ருகவே, விலங்குமன நிலையிலேயே விளங்குவான்.

அறிவின் இயக்கமே மனிதனின் இயக்கம். இதனை எவரும் எள்ளளவும் மறந்துவிடுதல் கூடாது. அந்த அறிவு இரண்டுவகையாக விளங்கும். ஒன்று, ஒருவன் தன் உள்ளத்தினுள்ளேயே எண்ணிஎண்ணி ஆராய்வதும், ஆராய்ந்து தெளிவதும்; மற்றொன்று, அவன் உள்ளத்து எண்ணங்கள் பேச்சாகவும் எழுத்தாகவும் செயலாகவும் சொல்லாகவும் வெளியே வெளிப்படுவது.

இந்த இரண்டின்பாலும் தூய்மையும், இரண்டும் ஒன்றுகலந்து இயங்குகின்ற இணைந்த ஒரு கூட்டுறவும் நிலவுதல் வேண்டும். எண்ணம் தெளிவாயிருந்து பேச்சும் செயலும் தெளிவு கேடாயிருப்பது பயனற்றதாகும். எண்ணத்திலே தெளிவின்றி அவை தெளிவுடையனவாக அமைந்தாலும், அது உளங் கலந்த செயலல்லவாதலால் பயனற்ற செயலாகிவிடும்.

இதனை நாம் நன்ருகக் கவனிக்கவேண்டும். இவை வாழ்வின் இரு ஞானக்கண்கள் என்பதையும் நாம் உணர்தல் வேண்டும்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

"வாழும் உயிருக்கு, எண்ணென்று ஆன்ருேராற் சொல்லப்படுவதும், மற்று, எழுத்தென்று ஆன்ருேராற் சொல்லப்படுவதும் ஆகிய இவ்விரண்டுமே 'கண்' என்று சான்ருேராற் சொல்லப்படுவதாகும்."

'எண்' என்பது, இங்கே தெளிவான எண்ணங்களைக் குறிக்கும் 'எழுத்து என்பது, அந்த எண்ணங்கள் ஒருவனிடமிருந்து எழுந்து செயற்படும் நிலையினைக்

குறிக்கும். ஒலி எழுத்து, வரி எழுத்து என அவை அவன் கருத்தைமட்டும் பிறர் அறிய உரைக்கும் போதும், 'எழுச்சி' என அவன் செயலிலே ஈடுபடும் போதும் அது இவ்வாறு பெயர்பெறும்.

'தெளிவான சிந்தனையும், அவற்றின் எழுச்சியுமே மனிதவாழ்வுக்கு இரு கண்களாகும்' என்பது, இந்தக் குறளின் சுருக்கமான தெளிவான அறவுரையாகும். முன் குறளிலே, மனத்தின் மாசுகள் நீங்கவே கற்க வேண்டும் என்றனர். இங்கே, அப்படிக் கற்றவர் தம் எண்ணத்தினும், அதனையொட்டி எழும் பேச்சினும், செயலினும் நேர்மையும் தூய்மையும் உடையவராக விளங்குதல் வேண்டும் என்கின்றனர். அறிவுத் திறனின் சிறப்பே இந்த அமைதியாகும்.

### 3. கண்ணும் புண்ணும்

'கண்' பார்க்கும் ஓர் உறுப்பு. 'கண் உடையவர்' என்றால், அவர் உலகின் பலவகையான பொருள் களையும் சம்பவங்களையும் பார்க்கின்ற சக்தியுடையவர் என்று பொருள். 'பார்வை' கண்ணின் தொழிலானு லும், அந்தப் பார்வையின்மூலம் ஒன்றை அறிவதும் அறியாததும் அதனை ஏற்கும் உள்ளத்தின் தகுதியைப் பற்றி நிற்பதேயாகும்.

உள்ளமானது ஒன்றைக் காண்பதற்குக் 'கண்' தான் காட்டி நிற்குமேயொழியத் தானே எதனையும் அது காண்பதில்லை. இதனால், கண் காண்பதும், கண் நோக்கிலே வெளிப்படும் உள்ளத்து உணர்ச்சி பாவங் களும் ஆகிய எல்லாம், கண்வழியாக இயங்கும் உள்ளத்தின் உணர்வுகளே என்பதனை நாம் அறியலாம்.

ஆகவே, 'கண்ணுடையார்' என்று ஒருவரை நாம் சொல்லவேண்டுமென்ருல், அவர் தெளிவான உள்ளம் உடையவராகிக் கற்ருேர் ஆகவும் இருத்தல் வேண்டும். கல்வி அறிவிஞல் தம் மனமாசுகள் நீங்கப் பெருதவரோ, கட்புலன் என்பவை இருந்தும், அவற்ருலாகும் பயனைச் சரியாக நுகர்வதற்கு இயலாதவராகவே போய்விடும் தம் அவலமான நிலையிஞல், கண் இருந்தும் இல்லாதவரேயாகின்றனர். இதுபற்றியே, இத் தகையோரைக் 'கண்ணிருந்தும் குருடாகத் திரிபவர்' என்பர் சான்ருேர். திருவள்ளுவரோ, 'அப்படிக் கல்லாதவரின் முகத்திலே இருப்பன கண்கள் அன்று; அவை வெறும் புண்கள்' என்கிருர்.

'புண்கள்' உடலுறுப்புக்களிலே ஏற்படும் சிறுசிறு சிதைவுகள். அதஞல், மனிதன்படும் வேதனைகள்தாம் மிகுதியாகும். கல்லாதவர், தம் கண்களை நேரிதாகப் பயன்படுத்தாதவராகத் தவருகவே தம்மையும் அறியாது பயன்படுத்துதலிஞல், அவர்க்கு நல்லன காட்டி நன்மை விளைவிக்கவேண்டிய அக் கண்கள், அவருக்குப் பலவிதக் கொடுமைகளையும் கொணர்ந்து, அவரை வேதனைப்படுத்தும் புண்களாகிவிடுகின்றன.

கண்ணுடையர் என்பர் கற்ருேர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

"கல்வி உடையவர்களே கண் உடையவர் என்று சொல்லப்படுகிறவர்கள்; அப்படிக் கல்லாதவரோ, தம் முகத்திலே இரண்டு புண்களைப் பெற்றவரைப் போல, கண்கள்தரும் பயனை இழந்து துன்பத்தின் வேதனைக்கு உள்ளாகிறவர்கள் ஆவார்கள்"

## 4. கலத்தலும் பிரிதலும்

கற்றலின் காரணமாக ஒருவன் தன் புலன்களை நேரிதான வழிகளிலே திறன்பட இயக்கும் உயரிய ஆற்றலைப் பெறுகின்றான். புலன்கள், தம் போக்கிலேயே சென்று அவனுக்கு ஒருபோதும் தீமைகளை விளைவிப்பதில்லை. அவற்றைத் தன் தெளிந்த அறிவினாலே அடக்கிச் செயற்படுத்தும் வல்லமை கற்றவனுக்கு எப்போதுமே உண்டு. இதுபற்றியே, கற்றவர் 'புலவர்' என்று போற்றப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட புலவர்கள், இவ்வுலகத்திலே ஈடுபட்டுச் செய்கின்ற தொழில்கள் எல்லாம் எப்படி விளங்கும்? அதாவது, பிறர் செய்யும் தொழில்களுக்கும், இவர்கள் செய்யும் தொழில்களுக்கும் உள்ள வேறுபாடுகள்தாம் என்ன?

அறிவாற் சிறந்த இவர்கள், எந்தத் தொழிலையும், நன்கு அதன் சாதகபாதகங்களை ஆராய்ந்து செய்பவர்களாக இருப்பார்கள். அதனால், அந்தத் தொழில்கள் எல்லாம், அவர்களுக்கு உவப்பைத் தருவனவாக முடிவில் விளங்குமே அல்லாமல், என்றும் எவ்வகைத் துயரமும் தருவதாக முடியவே முடியாது. தொழில், ஒருவனுக்கு இன்பந் தருவதும் துன்பம் தருவதும், அந்தந்தத் தொழிலை அறிவுடனே செய்வதையும், அறிவீனமாகச் செய்வதையும் பொருத்ததே யாகும். 'புலவர்கள்' கல்வியறிவினால் தெளிந்த புலன் உணர்வைப் பெற்றவர்களாதலினாலே, அவர்களின் செயலிலே தெளிவும் நேர்மையும் விளங்க, எல்லாம் அவர்கள் மகிழும்படியாக இனிதாகவே முடியும் என்க. எந்தச் செயலாவது தமக்கு உவப்பினைத் தராது,

என்று அவர்களின் உள்ளத்திலே ஒரு சிறிதேனும் ஐயம் தோன்றிய மாத்திரத்திலே, அவர்கள், அதனைத் தம் செயல் திட்டத்தினின்றும் அறவே ஒதுக்கி விடுவார்களே அல்லாமல், அதனைச் செய்து, தாம் ஒருபோதும் அதனால் வந்துறும் துன்பத்திற்கு ஆளாக மாட்டார்கள் என்பதும் அறிதல்வேண்டும்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

"எந்தக் காரியமும் மகிழ்ச்சிதரத்தக்கதாக முடியுமாறு நிறைவேற்றுதலும், அவ்விதம் தராதென்ற எண்ணந்தோன்றியதும் அதனை விட்டு நீங்குதலும், எவ்வாறு தொழில் செய்பவனின் தொழில் திறனைக் காட்டுமோ, அதுபோன்றதே, புலவர்கள் உலகிலே செய்யும் செயல்கள் எல்லாவற்றின் தன்மையுமாகும். அதாவது, 'அவர்கள்' தாமும் உலகமும் இன்புறும் வகையால் நிறைவு எய்தும் செயல்களிலேதான் ஈடுபடுவார்களே யல்லாமல், தமக்கோ பிறர்க்கோ துன்பம் நேர்வனவற்றில் ஈடுபடமாட்டார்கள் என்பது கருத்து.

**5. கடையரும் உடையரும்**

கல்வியினால் ஒருவனிடம் பகுத்தறிகின்ற அறிவுத் திறன் பெருகும்; மனமாசுகள் நீங்கும்; செயலிலும் பேச்சிலும் ஒருவகைத் தெளிவு காணப்படும். அவன் உறுதியுடையவனாக, நெஞ்சிலே நிமிர்வு உடையவனாகப் பலரும் பாராட்டும் வண்ணம் சிறப்புடன் வாழ்பவனாவான்.

கல்லாதவனோ, எதனையும் தெளிவாக உணர்கின்ற மனோசக்தியைத் தான் பெறாத காரணத்தால், ஒரே சந்தேகப் பேர்வழியாகி, 'எதனால்,' என்ன,

எப்போது யாது தனக்கு நேர்ந்துவிடுமோ?' என்ற தீராத அச்சத்தின் காரணமாகக் கோழையாகித் தாழ்மை உணர்ச்சியுடனேயே சதா காணப்படுவான். அவனுக்கு எந்தவிதமான செயலும் முறையே செப்பமாகக் கூடிவராததனால், அவன், எவ்வகையிலும் சிறந்தவன் என்ற நிலையும் என்றும் கிடையாமலும் போய்விடும்.

இப்படிப்பட்டவனும் தன்னுடைய இழிநிலைமையை உணரவேண்டும். உணர்ந்து தானும் எப்பாடுபட்டாவது கற்றுக்கொள்ள முன்வரவேண்டும். அப்படி அவன் கற்றுச் சிறந்தபொழுதிலே, அவனுடைய பழைய தாழ்வுமனப்பான்மை அவனை விட்டு அறவே நீங்கிவிட, அவனும் மனிதத்தன்மை, அதாவது அறிவுத் திறன் உடைய நிலையைப் பெற்றுவிடுகிறான்.

ஆனால், அந்தத் தாழ்வுமனப்பான்மையைப் போக்கும் வழியை அறிந்தும், அதன்பால் மனஞ் செலுத்தாமல், அதற்கான கல்வியிலே ஈடுபடாமல் இருக்கின்றவர்களின் கதியோ அதோகதிதான். அந்தத் தாழ்வுநிலையைப் பார்க்கினும் கேடுகெட்ட தாழ்வு நிலைக்குத்தான், அவர்களை, அவர்களது அறியாமையானது இறுதியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

"கல்வியறிவைப் பெறுவதற்கு முன்காலத்திலே, தாம் வாழ்விலே எவ்விதமானவொரு பற்றுக்கோடும் இல்லாதவரே போலத் தாழ்வுமனப்பான்மையுடன் விளங்கியவரும், கல்வியை முயன்று கற்றனராகல்

வாழ்வை வாழ்வாக உடையவராவர். அங்ஙனம் கல்வியின் தேவையை உணர்ந்தும், கல்லாதவரோ வென்றால், மிகக் கீழ்த்தரமான குணம் உடையவ ராவார்.''

அதாவது, 'கல்வியினால் வாழ்வு பெறலாம்' எனத் தெரிந்த பின்னரும், அதனைக் கல்லாது விடுபவர் மனிதப் பண்பினராகார்; அவர் மிகவும் கீழ்த்தரமான வரே யாவார்'' என்பது கருத்தாகும்.

இதனால், 'இளமைப் பருவத்திலே கல்லாதவரும் கூடத், தாம் சமூகவாழ்விலே அடைய நேர்கின்ற தலை குனிவை உணர்ந்தபின், வயதுவந்த பின்னராவது முயன்று கற்கவேண்டும்' என்ற சிறந்த அறவுரையும் கூறப்பட்டது. 'ஏக்கறுதல்—தாழ்மையாக ஒழுகுதல். கல்வியினால் சிறந்தோர் பெறும் நல்வாழ்வும் சிறப்பும் கண்டு, அவர்முன் தாம் தலைகுனிந்தே வாழ வேண்டிய வராதலும், எதனிலும் தெளிந்த அறிவுடன் செயலைச் செய்ய முடியாமல் தாழ்வு மனப்பான்மையுடன் ஒழுகு தலும் ஆகும்.

### 6. ஊறுகின்ற அறிவு

மக்களுடைய அறிவு எப்படிப்பட்டது? இதனைப் பற்றி உளநூல் அறிஞர்கள் பலரும் பலப்பல உண் மைகளை வரையறுத்திருக்கின்றனர். உடல் நூலார் பலவிதமாக ஆராய்ந்து, மூளையின் இயக்கத்தையும், அதன் தொடர்புடைய எண்ணற்ற நரம்புக்கோளங் களின் இயக்கங்களையும் வரையறுத்து இருக்கின்றனர். சில சமயங்களில், இவ்வளவு வரையரைகளையும் கடந்து, மனித உள்ளம் செயற்படும்போது, அவர்களும் அதற்கொரு விதியினை உரைக்க இயலாது திணறு

கின்றனர். மக்களின் உள்ளப்பண்புகளை உன்னித்துக் கண்டு, நுணுகி ஆராய்ந்து, தம் திருக்குறள் பெரு நூலை வகுத்த வள்ளுவனார், மனித உள்ளத்தின் பண்பினை மிகச் சுருக்கமாகவும், ஆனால், மிகத் தெளிவாகவும் வரையறுத்துள்ளார் என்றால் அது நாம் பெற்ற பேறேயாகும்.

ஆற்றிலே நீர் வற்றியபோது மக்கள் மணலிலே ஊற்றுத் தோண்டி நீர் முகந்துகொள்வதை நாம் அறிவோம். தென்பாண்டிப் பகுதிகளிலே, கோடை காலங்களில், இத்தகைய மணற்கேணிகள் மிகவும் சர்வசாதாரணமாக எங்கும் காணப் படுவனவாகும்.

எவ்வளவு தோண்டுகிறோமோ அவ்வளவுக்கு அங்கே நீர் நிறைந்து கிடைக்கும். நீரின் அளவும் தோண்டிய அளவாகவே காணப்படும். இவ்வாறு தோண்டுவதற்குத் தக்கவாறு ஊறுகின்ற மணற்கேணியைப் போன்றதுதான் மனிதனின் அறிவும் என்கிறார் வள்ளுவர்.

நீர் மணலிலே சுவறி நிற்கிறது. மணலை அகற்றினாலன்றி அந்த நீரை நாம் அடையமுடியாது. ஒருசார் நாம் மணலைத் தோண்டிக் கேணி அமைக்கும்போது, சுற்றிலும் உள்ள நீர் ஊறிவந்து அந்தக் கேணியிலே நிரம்புகின்றது. கேணியின் ஆழத்துக்குத் தக்கவாறு இப்படி ஊறிவரும் நீரும் வந்து நிறையும்.

இப்படிப்பட்ட அறிவுப்பண்பு உடையவர்தாம் மனிதரும் ஆவர். அவருடைய அறிவின் தெளிவு மேலே தெளிவாகப் புலப்படாமல், அறியாமை என்னும் மணலிடையே சுவறி மறைந்து கிடக்கின்றது. 'கல்வி'

என்னும் முயற்சியினாலே நாம் அறியாமையாகிற மணலைத் தோண்டத் தோண்ட, நாற்பாலும் சுவறி நிற்கும் அறிவாகிய நீரும் உள்ளக் கேணியிலே வந்து நிரம்புகின்றது.

மணலுள் சுவறிக் கிடந்த நீர் பயன் தராதது போலவே, கல்வியால் கசடறப்பெறாத அறிவும் ஏதும் பயன் தராது, பாழாகவே, மயக்கத்திலேயே அழுந்திக் கிடக்கும் இயல்பினதாகிறது. இந்த உண்மையை அனைவரும் நன்றாக உணர்தல் வேண்டும்.

'கல்வி' என்பது மனிதனின் உள்ளத்தினுள்ளேயே புதைந்து கிடக்கும் அறிவுச் செல்வத்தை, அவன் எளிதிலே பயன்படுத்திக் கொள்ளுமாறு, அதனை மேலாக மூடி மறைத்திருக்கும் மயக்கமாகிய மணற்பரப்பை அகற்றுவதேயன்றி, எங்கிருந்தோ கொண்டுவந்து எவராலோ திணிப்பதன்று.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.**

'தோண்டின அளவாகவே நீர் ஊறுகின்ற மணற் கேணியைப் போன்றவர்களான மனிதர்களுக்கு, அவர்கள் கற்கும் அளவிற்கு ஏற்பவே அறிவும் ஊறிச்சுரந்து நிரம்பிப் பயன்தருவதாக அமையும்.'

## 7. கல்வியும் நாடும்

'**நாடு**' என ஒன்று மதிக்கப்படுவது எதனால்? அது, அதன்கண் வாழ்கின்ற மக்களினால்தான்' என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே!' என்ற புறநானூற்றுச் சான்றோர் வாக்கும், 'நல்லார்

ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்பதும் இதனை வலியுறுத்தும்.

'மனிதன் நல்லவனுவதும் கெட்டவனுவதும் அவனுடைய அறிவின் தெளிவைப் பொறுத்தே அமைவது' என்பதை நாம் முதலிலேயே கண்டோம். அங்ஙனமாயின், 'அறிவுத் தெளிவினைத் தருவதான கல்வியுடைமையே மக்களை நல்லவராக்கும்' என்பதும் நாம் தெரிந்திருக்க வேண்டியதாகும். ஆகவே, 'ஒரு நாடாயினும் சரி, ஊராயினும் சரி, அது உண்மையிலேயே நாடாகவும் ஊராகவும் சான்றோரால் மதிக்கப்படல் வேண்டுமானுல், பிறவசதிகள் எல்லாம் உடையனவாயிருந்தால் மட்டும் போதாது, கற்றவர் மலிந்ததாகவும் அவை விளங்குதல்வேண்டும் என்கிறது திருக்குறள்.

கற்ற சான்ருேர் இல்லாத நாடும் ஊரும், விலங்கினங்கள் கூடிவாழும் காட்டுக்குத்தான் ஒப்பாகுமேயன்றி, அறிவுடைய மக்கள் வாழ்வதாகாது.

இதனை அறிந்திருந்தும், தான் சாகுங்காலம் வரையினும் ஒருவன் கலலாதவனுகவே இருந்தானுயின், அவனை என்னவென்று சொல்வது? அவன் 'பிறந்ததன்' பயனைத் தன் அறியாமையினுலே போக்கடித்துக் கொண்டவன்' என்று நாம் கூறலாமா? அல்லது, 'கடையரே கல்லாதவர்' என்று அவனையும் நாம் ஒதுக்கலாமா?

அப்படிப்பட்டவர்களை நோக்கி, மிகவும் இரக்கப்பட்டுப் பேசுகின்ருர் வள்ளுவர். கல்வியின் சிறப்பினைச் சான்ருேர் பலகால் எடுத்துக் கூறியும், அவர்களின் சொற்களைப் புறக்கணித்துத் தம் அறியாமையே பெருக்கிக் கடையராக வாழ்ந்து மடியும் பலரின்

வருந்தத்தக்க நிலைமை வள்ளுவரைப் பெரிதும் வாட்டியிருக்க வேண்டும். அது அவர் குறளினும் எதிரொலிக்கிறது.

**யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு?**

'எல்லாந்தான் நாடாகி விடுமா? அல்லது, எல்லாந்தான் ஊராகி விடுமா? கற்றோர் இருப்பதல்லவோ ஊரும் நாடும் ஆகும். இருந்தும், ஒருவன், தான் சாகும்வரையும் கல்லாதவனாகவே வாழ்ந்து மடிகின்றானே? என்னே இந்த மக்களின் இயல்பு?

கல்லாதவரை நோக்கி, வள்ளுவர் அநுதாபத்துடன் கூறும் இந்தக் குறள், அவருடைய தூய அன்பின் நிலைக்களமான பொதுநல மனோபாவத்தை நன்கு காட்டுவதாகும்.

## 8. ஒருமையும் எழுமையும்

ஒருமுறை ஒன்றை நாம் பெற்று அநுபவித்தால், அதன் இனிமையும் பயனும் அந்தச் சமயத்தோடு நம்மைவிட்டு மறைந்து விடும். அடுத்து, அதே இனிமையையும் பயனையும் நாம் பெற விரும்பினால், மீண்டும் அந்தப் பொருளைப் பெற்றுத் துய்த்தல் வேண்டும்.

உதாரணமாக, சனிக்கிழமை காலையிலே நாம் சுவைத்து மகிழ்ந்த மாம்பழத்தின் சுவையையும், பயனையும், அந்தச் சனிக்கிழமை மாலையிற்கூட நாம் மீண்டும் மாம்பழம் பெற்றுச் சுவைத்தாலன்றி அநுபவிக்க முடியாது.

இந்தப் பொதுவிதி எல்லாவிதமான பொருளுக்கும் பொருந்தும். இதன்கண் எவ்விதமான வேறு

பாடும் கிடையாது. மண், பொன், பெண் என்ற மூன்றும் கூடத், தாம் அடையாத காலத்துப் பெரும் தாபத்தை ஒருவருக்கு ஊட்டுவனவேனும், அடையப் பெற்றபின் அவர்பால் ஒருவிதமான நிறைவைத் தந்துவிடும். மீண்டும், அதனை அநுபவித்தாலன்றி அவர் அதனால் இன்புறுவதில்லை.

கல்வியின் நிலைமை இதற்கு முற்றிலும் வேறானது. ஒருமுறை ஒருவன் கற்ற கல்வியானது, அவனுக்கு ஓரே ஒரு முறைதான் பயன்தரும்' என்று கூறமுடியாது. பத்து ரூபா வைத்திருப்பவன் அந்தப் பத்து ரூபாவைச் செலவிட்டதும் அது தீர்ந்து விடுவது போல, ஒருமுறை கற்ற கல்வியும் ஒருமுறை பயன் பட்டதும் தீர்ந்து விடாது. அது என்றும் எடுக்க எடுக்கக் குறையாதது; பெருகி வருவது; அழியாதது.

இதுபற்றியே, வள்ளுவர், கல்வியின் சிறப்பை மேலும் வலியுறுத்துபவரேபோல, 'ஒருவன் ஒருமுறை கற்ற கல்வியானது அவனுக்கு என்றென்றைக்கும் பாதுகாவலாக விளங்கி, அவனை அறியாமைப் படுகுழியிலே வீழ்வதனின்றும் காப்பாற்றும்' என்கின்றார்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

'ஒருமை, எழுமை' என்பன, இங்கே ஒருசமயம், பலசமயங்கள் என்று பொருள்படுவன. ஏமாப்பு —பாதுகாவல். கல்வி பாதுகாவலாக அமைவது, ஒருவனைத் தீயவழிகளிலே ஈடுபடவிடாது தடுத்தலால். எழுமை—எழுபிறப்பு எனவும் உரைக்கப்படும்.

9. உலகு இன்புறக் காண்பார்

கற்று அறிந்தவர், கல்லாதவர் ஆகிய இவ்விருவரும் இன்பத்தை அனுபவிப்பதிலேகூட வேறுபட்ட

நிலைகளிலே இருந்துதான் அனுபவிப்பார்கள் என்கிறார் வள்ளுவர்.

கல்வியினாலாகிய உள்ளத்தெளிவு இல்லாதவர்கள், தாம் இன்புறவேண்டும் என்று நினைப்பார்களே யல்லாமல், அதனால் பிறர்படும் வேதனைகளை நினைப்பதில்லை. தம் சொந்த இன்பத்திற்காக அவர்கள் பிறரை வருத்தவும், பிறர் பொருளைத் தவறான வழிகளிலே தாம் முயன்று அடையவும் தயங்குவதில்லை.

'தம்மைப் போலவே பிறரும் எண்ணுவார்களே' என்ற, உள்ளத்தெளிவு இல்லாததன் காரணமாகவே அவர்கள் அவ்வாறு தம் இன்பத்தினையே முற்றிலும் குறிக்கோளாகக் கொண்டு, பிறர் பற்றிய கவலையே அற்றவராகச் சுயநல சொரூபமாக வாழ்கின்றனர்.

ஆனால், கற்றறிந்தவரோ இப்படிப்பட்டவர்கள் அல்லர். அவர், தம்மைப்பற்றிய சுயநல இச்சைகளை அடக்கிக்கொள்பவர் ஆவர். உலகத்தவர் பலரும் இன்பமான வாழ்விலே வாழக்கண்டு, அதனால் தம் உள்ளத்திலே இன்பங்கொள்வதை விரும்புபவர் அவர்கள்.

உலகத்தார் இன்புறக் காணவேண்டும் என்பதற்காக, உலக நன்மைக்காக, இரவும் பகலும் அயராது உழைப்பவராகவும் கற்றவர் விளங்குவார்கள். இத்தகைய பொதுநல மனோபாவம் கல்வியினாலேயே வந்து அமையும் என்கிறார் வள்ளுவர்.

**தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

"உலகமானது இன்புற்று வாழ்வதைக் கண்டு தாம் அந்தக் காட்சியினால் இன்புறவேண்டும் என்ப

திலே ஆசை கொள்பவர்களே கற்றறிந்தவர்கள் ஆவார்கள்."

'கற்றவர்களிற் சிலரே உலக இன்பத்தைக் கருதாது, தம் சொந்த நன்மைகளைக் கருதித் தாம் கற்ற கல்வியின் துணையால் மக்களை மயக்கி ஏமாற்றி வாழுகின்றனரே?' என்று கேட்கலாம். 'கல்வி' என்பது, மனமாசு அகற்றித் தெளிவுதரும் அறிவுச் செப்பமே தவிரப் போலியான வாதத் திறமையன்று. இதனை மனத்திலே கொண்டால், அவ்வாறு கல்வியின் காரணமாக மக்களுக்குத் தீமை செய்பவர்கள், உண்மையான கல்வியுடையவராகார்கள் என்று, அவரை நாம் ஒதுக்கிவிடலாம். அவர்கள், தாம் கற்ற கல்வியை விலையாக்கி, அறியாத மக்களை அதனுள் வீழ்த்தித் தமக்கு அவர்களை இரையாக்கிக் கொள்ளு பவர்களே யல்லாமல், உண்மையான அறிவுபெற்ற தூய கல்விமான்கள் ஆகார்.

## 10. விழுச் செல்வம்

ஒருவனுக்கு எத்துணையோ வகையான செல்வங் கள் வந்து சேரலாம். மண், பெண், பொன் என்ற முப்பெருஞ் செல்வங்களும் வந்து குவியப் பெற்றவ னாகவும் அவன் விளங்கலாம். ஆனால், அவன் ஒன்றை மட்டும் என்றுமே மறந்துவிடலாகாது.

இவை யாவும் காலப்போக்கிலே அழிவெய்தும் செல்வங்கள். எவ்வளவோ நிலப்பரப்புக்களுக்கு ஒரு காலத்தில் சொந்தக்காரரா யிருந்தவர்கள், காலப் போக்கில் சோற்றுக்கும் விதியற்று வாடி நலிகின்றதை நாம் தினந்தினம் காண்கின்றோமே! பொன்னிலே கிடந்து புரண்டவர்கள், அந்தப் பொன்னால் எதனையும்

சாதிக்கமுடியும் என்று கண்மூடித்தனமாக ஒரு காலத்தில் நடந்தவர்கள், கடைசியிலே தீண்டுவாரற்றுக் கெட்டொழிந்த கதைகள்தாம் கணக்கிலவே! நமக்கு எல்லாவகையாலும் ஏற்றவளாயிருந்தாலும், காலனும் நோயும் நாம் விரும்பியவளைக் கொள்ளை கொள்வதினின்றும் நம்மால் தடுக்க முடியவில்லையே?

ஆகவே, அழியும் இத்தகைய செல்வங்களிலே உள்ளத்தை ஈடுபடுத்தி, அழியாத செல்வமாகிய கல்விச்செல்வத்தை எவரும் புறக்கணித்துவிடக் கூடாது. கல்விச் செல்வம் இருந்தால், அவன் பெற்ற பிற செல்வங்களும்கூட அதனால் மேலும் சிறப்புப்பெறும் என்க.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

'ஒருவனுக்குக் கேடேஇல்லாத தூய்மையான சிறந்த செல்வம் கல்வி ஒன்றேயாகும்; பிறவெல்லாம் அவ்வளவு நிலைத்த சிறப்பு உடையன ஆகா.'

இனி, பிற செல்வங்கள் ஒருவனிடம் பெருகிய போது, அவன் ஆணவத்தால் தட்டுக்கெட்டவனாகித், தனக்கும் பிறர்க்கும் கேட்டினையே மிகுவித்தலும் கூடும். ஆனால், கல்விச் செல்வமோ, அங்ஙனம் விளைகிற கேடில்லாத உயர்ந்த செல்வமாகும். இவ்வாறும் பொருள் கொள்ளலாம்.

★

# 3. கல்லாமையின் துயரம்

கற்பவைகளைக் கற்கவேண்டும் என்றும், அதனால் மனத்தூய்மையும், செயலிலே தெளிவும் பெற்று மக்கள் நல்ல பண்புடைய வாழ்வினராக வாழலாம் என்றும், அறிவுத்திறனுக்கு உதவியான கல்விபற்றி முன்பகுதியிலே விளக்கப்பட்டது. அத்தகைய கல்வியின் தேவையை மேலும் வற்புறுத்துவதற்காக, இந்தப் பகுதியுள், கல்லாதவர் சமூகத்திலே ஒதுக்கப் படும் நிலைகள் பலவும் எடுத்துக் கூறப்படுகின்றன.

'உண்மையே பேசவேண்டும்' என்று சொன்னாலே போதும் என்றாலும், 'பொய்ம்மையே தொழிலாகக் கொண்ட ஒருவன், அதனால் அடைந்த பல்வேறு துயரங்களையும் எடுத்துச் சொல்வதன்மூலம், பொய்ம்மையை ஒழித்து உண்மையேபேசுதல் வேண்டுமெனக் கேட்போருக்கு எளிதிற் புரியுமாறு வற்புறுத்தலாம் அல்லவா! இதே முறைதான் இங்கும் வள்ளுவரால் கையாளப்படுகிறது. அந்த முறையையொட்டிக் 'கல்லாமையால் ஒருவனுக்கு வந்தடைகின்ற குறைவுகளை' இந்தப் பகுதியினாலே நாம் அறிந்துகொள்வோம்.

## 1. அரங்கமும் நூலும்

'வட்டாடுதல்' என்பது, சாதாரணமாகச் சிறுமியர் விளையாடும் ஒரு சிறு விளையாட்டு ஆகும். இன்றுங்

கூடச் சிற்றூர்ச் சிறுமியர் மிக உற்சாகமாக வட்டாட்டம் ஆடுகின்றனர். ஆனால், அதற்கும் சில அடிப்படையான முறைகள் இல்லாமலில்லை. முதலில், ஆடுவதற்கு உதவியாகத் தரையிலே அரங்கம் ஒன்றினை இழைக்கவேண்டும். அதன்பின்னர்தான் வட்டாடுதற்கு இயலும்

அரங்கம் இல்லாமல் வட்டாட முடியுமா என்றால், முடியாது. இது சிறுகுழந்தைக்குங் கூடத் தெரியும். 'அரங்க மிழைக்காமலே வட்டாடலாம்' என்று ஒரு குழந்தை தன் தோழியரை அழைத்தாலோ, மற்றைக் குழந்தைகள் எல்லாம் அதனைச் சூழக் குழுமி நின்று, அதன் அறியாமைக்குக் கைகொட்டி நகை யாடத் தொடங்கிவிடும்.

இதேபோலத் தானும் கற்றோரைப்போலப் பேச வேண்டும்; தன் பேச்சையும் பலரும் கேட்கவேண்டும்; தன் எண்ணத்தைக் கூறும் உரிமையும் தனக்கு வேண்டும்; என்று எல்லாம் எண்ணுபவன், முதலிலே, அதற்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளல் வேண்டாமோ? அவனுள் நூலறிவு நிரம்பியிருந்தால் அல்லவோ, அவன் கல்வி கற்று மனத்தெளிவு பெற்றிருந்தா லல்லவோ, அவன் நன்றாகப் பேசமுடியும். அவன் பேச்சைப் பலரும் விரும்பிக் கேட்கவும் செய்வார்கள். இத்தகைய அடிப்படையான, நிரம்பிய நூலறிவில் லாது பேசத் தொடங்கியவனின் நிலைமையும், அரங்கம் இழைக்காது வட்டாடத்தொடங்கிய அசட்டுக் குழந்தையின் செயலைப்போலப் பிறரின் நகைப்பிற்கே இடமாவதாகும் எனலாம்.

3

**அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய**
**நூலின்றிக் கோட்டி கொளல்**

'கோட்டி கொளலாவது' தான் இன்னதுதான் பேசுகிறேம் என்ற வரையரை ஏதுமின்றி, மனம் போனவாறெல்லாம் வரைகடந்து பேசுதல். அதன் காரணம் நிரம்பிய நூலறிவில்லாமை என்பதாம்.

சமூகத்திலே வாழும் மக்கள், தங்கள்தங்கள் பிர சினைகளைக் கூடிப்பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய இன்றியமையாத நிலையிலே உள்ளவர்கள். அதனல், கருத்தைத் தெளிவாகப் பிறர் புரிந்துகொள்ளும் வகையிலேயும், பிறர் ஏற்றுக் கொள்ளும் வகை யிலேயும் எடுத்துக்கூறத் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு, நூலறிவு இன்றியமையாதது என்பது இதன் கருத்து.

## 2. பொருளற்ற ஆசை

பெண்மை இன்பம் ஆண்பெண்களின் பருவ மலர்ச்சியின் பின்னரே, அவர்களுக்குள் எழுகின்ற இணைநோக்க ஆர்வத்தின் காரணமாகக் கலந்து நுகரப் படுவது ஆகும்.

இந்த இன்பநுகர்ச்சியிலே, பெண் அதற்கேற்ற பக்குவமடைந்தவளாயிருப்பது முதன்மையான ஒன்று. மலரின் மலர்ச்சி, அது தன் இனப்பெருக்கத்திற்குத் தயாராகி விட்டதென்பதைக் காட்டுவதுபோலப் பெண்ணின் மலர்ச்சிப்பருவமும் அவள் இணைச்சேர்க் கைக்குத் தயாராகிவிட்டாள் என்று காட்டுவதாகும்.

அந்தப் பருவம் வந்ததும், அவள் கருவிலே உயிர் அணுக்கள் தோன்றுகின்றன. தாய்மையை ஏற்க

அவள் தகுதியாகிருள் என்பதைக் காட்டும் பல உறுப்பு வளர்ச்சிகள் அவள் உடலிற் பொலிவுடன் தோன்றுகின்றன. ஆண்களைத் தன்பாற் கவருகின்ற புதுமலர்ச்சியும் பூரிப்பும் அவளிடம் முகிழ்த்து ஒளி செய்கின்றன.

இந்தப் பல்வகை வளர்ச்சிகளுள், அவளுடைய மார்பகங்கள் இரண்டும் வளர்ச்சி அடைவதும் ஒன்று. அது, "அவள் இனச்சேர்க்கைத் தகுதியை அடைந்து விட்டாள்' என வெளிப்படக் காட்டுவதுடன், அவள் தாயாகித் தன் குழந்தைக்கு அமுதூட்ட உருவாகிக் கொண்டு வருவதுமாகும். பெண்மையற்ற அலிகள் பால் இந்த வளர்ச்சிகள் தோன்ரு என்பர்.

இத்தகைய பக்குவநிலைத் தோற்றமான மார் பகங்கள் இரண்டும் அறவே எழாதவளான பெண் ஒருத்தி, தான் ஓர் இளைஞன்மீது காமுற்றுத் திரிவ தனுல் யாதாவது பயன் உண்டாமோ? எந்த இளைஞனுவது அவளை விரும்புவானே? அப்படியே, அவளை விரும்பிஞலும், அவனுல் இன்பத் தின் பயனை அவளிடம் முற்றவும் நுகர முடியுமோ?

இதுபோலவேதான், படியாத ஒருவன் தானும் பேசவேண்டும் என்று ஆசைப்படுவதுமாகும். பேச வேண்டும் என்ருல், அதற்குத் தக்க பக்குவநிலையான கல்வியுடைமை அவன்பால் விளங்கவேண்டும். அது விளக்கமுருத வரையிலே அவன் பேசமுற்படுவது எல்லாம் பெண்தன்மை பெருத சிறுமியோ, அல்லது அலியோ இனச்சேர்க்கை இன்பத்தினை விரும்புவது

போலப் பயனற்றதேயாகும். மேலும், பலரின் நகைப் பிற்கும் அது இடமாகும்.

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று

'கல்வி யறிவில்லாத ஒருவன், தானும் பலர்முன் சொல்லாட வேண்டுமென விரும்புதலானது, முலை யிரண்டும் இல்லாதாளான பெண் ஒருத்தி, ஓர் இளைஞனைக் காமுற்றுத் திரிவது போலாகும்.' அவள் எண்ணம் நிறைவேருததுடன், அவள் பிறராற் பழிக்கவும் நகைக்கவும் படுவாள் என்பது கருத்து.

### 3. கல்லாதவரும் நல்லவர்

கற்ருேர் பலரும் கூடியிருக்கின்ற ஓர் இடத்திலே, கல்லதாளுகிய ஒருவன் தன் பாழ்வாயைத் திறந்து, ஏதாவது தத்துப்பித்தென்று உளறிக் கொட்டிவிடுதல் கூடாது. அவன் யாதும் பேசாது மௌனமாகவே இருந்தால், அவனையும் நல்ல தகுதியுடையவளுகப் பலரும் கருதுவர். ஆனல், அவன் வாயை திறந்தாலோ, அவன் நிலைமை தெள்ளத்தெளியப் பலருக்கும் வெளிப்பட்டு விடுதலால், அவன் அவமானத்துக்கே உள்ளாக நேரும்.

இதனை வள்ளுவர் மறக்கவில்லை. கல்லாதவர் களுக்கும் அவர் ஒரு யோசனை கூறுகின்ருர்.

'இதோ பாருங்கள்; கற்ருேர் முன்னிலையிலே நீங்கள் சொல்லாடாது இருந்தீர்களாளுல், நீங்கள்கூட மிகவும் நல்லவர்களே' என்கின்ருர்.

கல்லா தவரும் நனிநல்லர் கற்ருர்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

'கற்றோர் முன் சொல்லாதிருந்தால்' என்று சொன்னதனால், கல்லாதார்முன் அவர்கள் பேசி மகிழ் வதைப் பற்றி எவ்விதத் தடையும் கிடையாது என்பது கருத்து. 'நனி நல்லர்' என்பது, அவர்கள் தம் தகுதி யறிந்து ஒதுங்கிய நல்ல பண்பைக் குறிக்குமே தவிர, அவர்களின் அறிவுத்தகுதியைக் குறியாது.

## 4. கல்லாதான் ஒட்பம்

'கல்வியறிவு வேறு; இயல்பாக ஒவ்வொரு வருக்கும் உளதான இயற்கை அறிவு வேறு. இந்த இயற்கைஅறிவு கல்லாதவருக்கும் சிலசமயம் சிறப் பாகப் புலனாகி வெளித்தோன்றலும் கூடும். அதனால், அவரைப் பேசுதலே கூடாது என்றது முறையா?' என்றும் சிலர் கேட்கலாம்.

சமூகத்திலே, கல்வியானது ஒருவனுக்குப் பிறர் மதிக்கும் ஒருவிதத் தகுதியைத் தருகிறது. அவனு டைய கல்வியின் நிறைவை அறிந்த பலரும், அவன் கருத்தானது தெளிந்த ஒரு முடிவாகவே இருக்கும் என்ற காரணத்தால், அதனை ஆராயாமலேகூடச் சில பொழுது ஏற்கின்றனர். அவனும், தன் கருத்தைத் தான் கற்ற கல்வியின் துணைகொண்டு, முற்ற முழுக்க ஆராய்ந்து தெளியாமல், தன் கருத்தினால் விளையும் பல்வேறு சாதகபாதகங்களைக் கருதிப் பாராமல் எதனையும் பிறருக்கு வெளியிடவும் செய்யான்.

கல்லாதவனின் நிலைமையோ இதற்கு நேர் முரணானது. அவன் கல்லாதவன் என்ற நிலையினால், அவனுடைய பேச்சுக்கள் பலவற்றிற்கும் பிறர் மதிப்பு வைப்பது இல்லை. அவனுடைய பேச்சுக்களும் அப்

படிப் பிறர் ஏற்றுப் போற்றும் செப்பம் உடையன வாகப் பெரும்பாலும் இருப்பதும் இல்லை.

இதன் காரணமாகக் கல்லாதவன் ஒருவனுடைய இயற்கையான உலகியல அறிவானது மிகவும் நன்ரு கவே இருந்தபோதிலும், அதனைக் கவர்ச்சிகரமாகப் பிறருக்குத் தெரிவிக்கும் ஆற்றல் அவனிடம் இல்லா மையால், அறிவுடையவர் அதனைக் கொள்வதில்லை.

'உதாரணமாகக் குரலினிமை இருப்பதனுல் மட்டுமே ஒருவன் பாடுவதை எவரும் கேட்டு இன்புறு வதில்லை. குரலினிமையோடு, முறையான இசைப் பயிற்சியும், பாடும் பாடலின் பொருள்இனிமையும் சேருமாறுல்தான் அவன் பாட்டுப் புகழ்பெறும்.

இதே போலத்தான் இயற்கை அறிவும், கல்வி யென்னும் பயிற்சியினுல் செம்மைப் படுமாறுல், அதற்கும் மக்களிடையே சிறந்த மதிப்பு ஏற்படுகிறது. கல்வி இன்றேல், களிம்பு மூடிய செம்பினைப்போல அதுவும் ஒளியற்றதாகி மழுங்கிவிடுகிறது.

கல்லாதான் ஒட்பம் கழியநன் ருயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அல்லவோ அறிவு உடைமையாகும்?' அங்ஙனமிருக்கக், கல்லாதான் என் பதற்காக, அவன் பால் தோன்றும் அறிவுச் சிறப்பையும் அறிவுடையோர் தள்ளலாமா? இப்படி ஓர் ஐயம் நமக்குத் தோன்றலாம். அது உண்மை தான். எனினும், அறிவுடையோர், அந்த அறிவும் பண்பட்டு அவன் வாய்மொழிமூலம் தெளிவுற வந்தால்

தானே அதனை அறியவும், அவனைப் பாராட்டவும் முடியும்.

இனி, அவனுடைய அறிவு நன்றாயினும், அதனை மட்டும் அறிவுடையோர் ஏற்றுக்கொள்வாரேயன்றி, அவனைத் தம்முள் ஒருவனாக ஏற்றுக்கொள்ளார்; குருட்டுப்பூனை விட்டத்திலே பாய்ந்தது என்றாற்போல அதனை அதிசயமாகப் பாவிப்பார்களேயன்றி, அவன் திறனாகப் பாவிக்கமாட்டார்கள் எனவும் பொருள் கொள்ளலாம்.

### 5. சொல்லாடச் சோர்வு படும்

கல்வி அறிவில்லாத ஒருவன், எப்போதும் தன்னுடைய நிலைமையை அறிந்து அறிஞர் கூட்டத்திலிருந்து ஒதுங்கிவிடுதலே முறையாகும். அஃதன்றி, அவன், கல்வியறிவு உடையவருக்கு மட்டும் என்ன அவ்வளவு தகுதி? அது எனக்கேன் இல்லை? என்ற இறுமாப்புடன், தனக்கும் தகுதி இருப்பதாகத் தானே பாவித்துக்கொண்டு சொல்லாடினால், அவன், அதனால் புகழ்பெற மாட்டான். அதற்கு மாறாக, அவன்சொல் எவராலும் மதிக்கப்பெறாது சொற்சோர்வு படுதலும் நேரும்.

இதனை நன்கு விளக்குவதுபோலக் கிரேக்க நாட்டு அறிஞரான ஈசாப்பு ஒரு நீதிக்கதையைச் சொல்லியிருக்கிறார்.

ஒருதவளைக்குஞ்சு தன் தாயிடம், ஒருநாள், "அம்மா நான் ஒரு மாட்டைப் பார்த்தேன். அது எவ்வளவு பெரிதாயிருந்தது தெரியுமா?" என்றதாம்.

அதன் தாய்க்கு அது பொறுக்கவில்லை. வயிற்றை உப்பிக்கொண்டே, 'இவ்வளவு பெரிது இருக்குமா?"

என்றதாம். குஞ்சு, 'அதைவிடப் பெரிது' என்று சொல்லத், தவளை மேலும் மேலும் வயிற்றை உப்பிக் கொண்டே போகக், கடைசியில் அதன் வயிறுவெடித்து அது செத்துப் போயிற்றாம்.

"அவரவர் தத்தம் தகுதியறிந்துதான் எதனிலும் தலையிடவேண்டுமே தவிர, இருக்கின்ற தகுதியைப் பெரிதாகப் பாவித்துக்கொண்டு அகங்காரம் கொண்டால், அதனால் அழிவுதான் நேரும்" என்பது இதன் கருத்து.

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

'கல்லாத ஒருவன் கற்றவர்போல ஒரு தகுதியைத் தன் தலைமேலும் போட்டுக் கொண்டவனாகச் சொல்லாடினால், அந்தப் போலித்தகுதி அப்போதே கெட்டு ஒழியும்' என்பது கருத்து.

இனி, 'நல்ல செயல்களுங்கூடக் கல்லாத ஒருவன், தான் அதனை மேற்கொண்டு செய்யப் போவதாக, அதன் பொறுப்பைத் தானே தன்மேற் கொண்டு, அதுபற்றிய ஒத்துழைப்பைப் பிறரிடமிருந்தும் பெறுவதன் பொருட்டாகச் சொல்லாடலிலே ஈடுபட்டனன் என்றால், அவனுடைய தகுதியற்ற தன்மையின் காரணமாக, அவன் குறித்த செயலின்மீது மக்களுக்குள்ள ஆர்வங்கூடத் தளர்ந்து போகும்' என்றும் கூறலாம்.

இது, அவன் அந்தச் செயலினால் வருகிற நன்மைகளை முறைப்பட எடுத்துச் சொல்லி, அதனை நிறைவேற்றுவதற்கான வழிதுறைகளை விளக்கிக்காட்டி, மக்களை அதனிடத்தே ஈடுபடச்செய்வதற்கு மாறாகத் தன் பேச்சுக்கோளாறினால் அவர்களுக்கு அச்செயலின்

பால் வெறுப்பும் ஐயமும் ஏற்படச் செய்து விடுகின்ற தனுல் எனலாம். அதனுல், அச்செயலை விரும்பியவரும் கூட இவனுடைய ஆர்த்தமற்ற பேச்சினுல் அதனின் றும் ஒதுங்கிவிடநேரும் என்பதும் தெளிவாகும்.

இதனுல், ஒரு செயலை மேற்கொண்டு சொல்லாடு கின்ற தகுதி, கற்ற அறிவுடையோனுக்கு மட்டுமே வாய்ப்பதாகும் என்பதனை அறிதல் வேண்டும். கல்லானும் அதனைக் கற்றவன்பால் ஒப்பித்து எளிதில் நிறைவேற்றிக் கொள்ளலாமே தவிரத் தானே மேற் கொண்டால் வருவது துயரமாகவே முடிவில் அமையும் என்பதனையும் நினைதல் வேண்டும்.

**6. களர் போன்றவர்**

சில நிலங்களிலே பயிர் நன்ருக விளைந்து பயனும் நன்ருக வந்து வாய்க்கும். சில நிலங்களோ வெறுங் களர்நிலமாகி வீதுபோட்டாலும் முளைகூடக் கிளம்பாத வெறும்பாழாகிக் கிடக்கும்.

பொதுப்பட இரண்டும் நிலம் என்றே சொல்லப் பட்டாலும், அவையவை தருகின்ற பயனுல், அவை இரண்டுக்குள்ளும் பெருமளவுக்கு வேறுபாடு உண்டு. நல்ல நிலத்திற்கு உயரிய மதிப்பு உண்டு; களர் நிலத்தை ஒருவரும் தீண்டுவது இல்லை.

இதேபோல, மனிதராகப் பிறந்தவர்களையும், அவரவர்கள் வாழும் பயனேடமைந்த வாழ்வியலுக்கு ஏற்பப் பிரித்துக் கொள்ளலாம். கற்றவரோ, வாழ்விலே எல்லாவிதமான சிறப்பும் பெற்றுப் பலராலும் போற்றப்படும் புகழாளராக நன்முறையில் வாழ்கின்ற னர். கல்லாதவரோ, உண்டு உறங்கித் தாமும் எவ்வித மான சிறப்பும் பெருது, பிறர்க்கும் எவ்விதமான

நன்மையும் புரியாது வீணே வாழ்ந்து மாய்கின்றனர்.

இவ்விருவரையும் எடுத்துக்கொண்டால், கற்ற வரை நல்ல விளைநிலத்திற்கும், கல்லாதவரைக் களர் நிலத்திற்கும் இணையாகக் கூறலாம்.

"களர் நிலம், எவ்வாறு நிலம் என்ற பெயரோடு வழங்கப்பட்டதென்றாலும், நிலம் என்னும் தகுதிக்குச் சற்றும் உரியதாகாதோ, அதேபோலக் கல்லாதவரும் 'உளர்' என்ற அளவேயல்லாமல் எவ்வகையானும் மதிக்கப்படார்" என்பது குறள் கூறுவதாகும்.

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

'பயவாக் களர்' என்பது, எதுவும் விளையாத உவர் நிலம்.

கல்லாதவர்கள், 'உலகிலே இவர்களும் இருக் கின்றனர், என்ற எண்ணிக்கையளவிலே கூறத் தகுதி யுடையவரே யன்றி, எதுவும் பயன்தராத களர் நிலம் போல ஒதுக்கப்படத் தக்கவரேயாவர் என்கிறது குறள்.

ஆனால், இத்தகைய களர் நிலமும் நல்ல முறை யிலே பண்படுத்தப்பட்டால், அதுவும் ஏதாவது விளை கின்ற பயன்படும் பூமியாகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இதேபோலக் கல்லாதவரும், தம் முயற்சியினால் தம் குறைபாட்டை நீக்கிக் கொண்டன ரென்றால், அவரும் மக்களாகிவிடுவர் என்பது இதன் கருத்து.

### 7. மண் பொம்மை

இந்த காலத்திலே, பெரியவர்கள் அனைவரும் வருந்தும் செய்தியொன்று படிப்புச் சம்பந்தப்பட்ட

வகையிலும் நிலவுகிறது. அது என்னவென்றால், இந்தக் காலத்திலே எவரும் நூற்களை மேற் போக்காகக் கற்கிறார்களேயல்லாமல், ஆழமாக ஊன்றிக் கற்பதில்லை' என்பதாம்.

பெரியவர்கள் சொல்லுகின்ற இந்தக் குறைபாடு நம்மிடையே இல்லாமலில்லை. பழைய நாளிற்போலத் தாம் படிக்கும் ஒவ்வொரு நூலையும், நுட்பமாக ஆராய்ந்து படிப்பதென்ற வழக்கமே இந்தக் காலத்தில் எவரிடமும் இல்லாமற் போய்விட்டது.

முன்காலத்து அறிஞர்கள், நம்மினும் குறைந்த எண்ணிகையுள்ள நூல்களைக் கற்றிருக்கலாம். 'ஏதோ, எனக்குக் குறளிலும் தொல்காப்பியத்திலும் கம்ப ராமாயணத்திலும் பயிற்சியுண்டு' என்று, அவர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், நமக்கோ இந்நாளிற் பெயர்தெரிந்த இலக்கியங்கள் மிகப்பல. அவற்றிலே, அங்கோர் அடியும் இங்கோர் சொல்லு மாகப் பேசி நாம் அனைத்தையும் அறிந்ததாகப் பெருமைப்படுகிறோம். ஆனால், எந்த நூலையும் நன்றாகக் கற்றோம் என்ற தகுதி நமக்குக் கிடையாது.

கல்வித் துறையிலே, நுட்பமாக ' எதனையும் நுழைந்து பார்த்து உண்மை கண்டு தெளியும் அறிவுடைமையே சிறப்பாகும். அஃதின்றேல், அவன், பல நூற்பயிற்சி உடையவனெனப் பெருமைப்பட்டுக் கொள்வதெல்லாம் போலிப் பெருமையே யாகும். 'கற்றவன்' என்ற உயிர்ப்பு ஆற்றல் அவனிடம் விளங்கவே விளங்காது.

சுருக்கமாகச் சொல்வதென்றால், அப்படிக் கற்றவ ரென்று கொள்ளும் போலிப் பூரிப்பாகிய எழிலும்,

அவர்கள் நலமும், எல்லாம் மண்ணினுற் சிறப்பாக வனேந்து ஒப்பனைசெய்யப்பட்ட ஒரு பொம்மையைப் போன்றதே என்று கூறலாம். எப்படி, அந்தப் பொம்மை தன் எல்லாப் புனைவுகளினுலும் சிறந்த மனி தனைப் போலவே தோன்றினுலும், அந்தப் பொம்மை யிலே மனிதத்தன்மை சற்றும் கிடையாதோ, அதற்கு எவ்விதமான தனித்தகுதியும் எப்படிக் கிடையாதோ, அதேபோல்த்தான் நுட்பமான அறிவில்லாதவனின் உடலழகும் பிறவும் போலியாகக் கொள்ளப்படும்.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

''நுட்பமாகவும், மாட்சியுடையதாகவும் நூற் களிலே நுழைந்து பார்க்கும் நுண்ணறிவுத் திறன் இல்லாதவனுடைய தோற்றப்பொலிவுகள் எல்லாம், மண்ணினுற் சிறப்பாகப் புனையப்பெற்ற பாவையின் அழகும் புனைவும் போல்வதேயாகும்'' என்கிறது குறள்.

## 8. வளமும் வறுமையும்

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பார் வள்ளுவர். பொருளற்றவர் இவ்வுலக வாழ்விலே எவ்விதமான வாழ்க்கை இன்பத்தையுமே அநுபவிக்க முடியாது. இதனை நாம் நன்கு அறிவோம். இதனுலேயே அவரும் இப்படிக் கூறினுர்.

பொருளற்ற துயரவாழ்வு நிலையை, 'வறுமை' என்று குறிப்பார்கள். அதாவது, வறட்சியான நிலைமை என்று அதற்குப் பொருள். அந்த வறட்சி அந்தக் குடும்பத்து நல்வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் எவ்வளவுதூரம் பாதிக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இந்த வறுமையானது நல்லவர்களிடம் விளங்குமானால், அவர்கள் வருந்தி வாடுவார்கள் என்பது ஒரு புறம் உண்மையேயானாலும், அவர்களால் பிறருக்கு எத்தகைய தீமையும் விளையாது. ஆனால், அதே நிலையிலே தீயோர் படும் வறுமையோ, அவரைத் தீய செயல்களுக்குத் தூண்டிவிடுதலால், அதனால் பலரும் துன்புற நேரும்.

'நல்லார்க்கும் வறுமையோ?' என்று நாம் பரிதாபப்படுவோம். அவர்கட்கு நம்மிற் சிலர் மனங் கனிந்து உதவவும் முன்வரலாம்.

'பொருளுக்கு இத்துணை மதிப்பு இருக்கிறதே? அப்படியானால் கல்லாதவர்களிடம் செல்வம் நிறைய இருக்குமானால், அவர்கள் தம்மிடம் கல்வி இல்லாத நிலைமையையும் மறைத்து நல்வாழ்வு வாழலாமோ?' என்று சிலர் கேட்கலாம்.

அது தவறு. அவர்களிடம் செல்வம் சேர்ந்தால் அதனை நல்லவழியிலே பயன்படுத்த வேண்டும் என்ற நல்லறிவில்லாத அவர்கள், அதனைப் பெரும்பாலும் தீயவழிகளிலேயே செலவிடத் தொடங்குவர். அதன் பயனாக, அவர்களுக்கும் பிறருக்கும் தொல்லைகள்தாம் மிகுதியாகுமேதவிர நன்மை எதுவும் விளையாது.

நல்லவர்களின் வறுமை அவர்கட்கு மட்டுமே இன்னாததாயிருக்கும்; ஆனால், கல்லாதவர்களின் செல்வமோ பலருக்கும் கேடாக முடியும்.

**நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கட் பட்ட திரு.**

'கல்வியிற் சிறந்த நல்லவர்கட்கு ஏற்பட்ட வறுமையைக் காட்டினும், கல்லாதவர்கட்கு ஏற்பட்ட

செல்வமானது சமூகத்திற்கு மிகுதியான துன்பம் தருவதாகும்' என்பது குறள்.

'இந்தத் துன்பம் அவரவர்கட்கு மட்டுமே' என்று சொல்வதினும், உலகுக்கு என்று பொதுப்படச் சொல்வதே சிறப்பாகும். இதனால், செல்வத்தின் உண்மையான பயனை அநுபவிப்பதற்கும் கூடக் கல்வி யறிவு இன்றியமையாதது என்பதுதெளிவாகும்.

## 9. குடிப் பிறப்பு

குடிப்பிறப்பின் தகுதியை ஒட்டிச் சிலர் உயர்வு பெறுவதும் உண்டு. பரம்பரை பரம்பரையாகச் சிறப்புடைய குடும்பத்திலே பிறந்தவர்களிடம், அந்தக் குடும்பத்தின் சிறந்த பண்புகள் நிலவும் என்பதனால், இந்தமாதிரியான ஒரு மதிப்புத் தருவதும் உலக வழக்கமாகிவிட்டது.

இதேபோலக் கீழ்த்தரக் குடியிலே பிறந்தவர்களைக் கீழானவராக மதிப்பதும் இயல்பு. தனிப்பட்ட அவரவர் குணங்களையும் தகுதிகளையும் கருதியே மனிதரை மதிப்பிடவேண்டியது முறை என்றாலும், சமூகத்தின் இந்த மரபினை எளிதில் நம்மால் ஒதுக்கவும் இயலாது. அதன்பால் முற்றவும் உண்மையில்லை என ஒதுக்குவதும் பொருந்தாது.

இப்படித் தான் பிறந்த குடியினால் வரும் உயர்வு தாழ்வுகளும், கல்வி உடைமையாலும், இல்லாமை யாலும் மாறுதல்பெறும் என்கிறது குறள்.

**மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு.**

'மேலான குடியிலே பிறந்தவரேயாயினும் கல்வியறிவில்லாத ஒருவர், கீழான குடியிலே பிறந்தாலும் கற்றவரைப் போன்று அவ்வளவு பெருமை உடையவராகார்' என்கிறது குறள்.

மேற்குடி, கீழ்க்குடி என்பது, இங்கே அவரவர் முன்னோர் செய்த உலகம் உவக்கும் செயல்களின் காரணமாக வழிவழிவரும் சிறப்பும், உலகம் வெறுக்கும் செயல்களின் காரணமாக வரும் இழிவும் கொண்டு கருதப்படுவதாகும். இஃதன்றிப், பிறப்பால் உயர்வு தாழ்வு சுட்டப்பட்டதாக எவரும் கருதுதல் கூடாது.

## 10. விலங்கு மனிதர்

விலங்கினம் ஐந்து வகையான அறிவுகளை உடையது. அதனின்றும் மனிதன் உயர்ந்தவன் எனத் தகுதிபெறுவதற்குக் காரணம், அவற்றுக்கு இல்லாத ஆறுவதான அறிவுடைமை அவனிடம் இருப்பதனாலேயாகும்.

இந்தப் பகுத்தறிவினைப் பெற்ற மனிதன் அதனை முறையாகப் பயன்படுத்த வேண்டும். பகுத்தறிவைப் பண்படுத்திப் பயனுடையதாக்குவது, நூலறிவினால் அதனைச் செப்பமும் தெளிவும் பெறச் செய்வதனால் ஆகிவருவதாகும்.

இதனைச் செய்யாத மனிதன் விலங்கினத்திற்கும் தனக்கும் வேறுபட்ட தன்மை எதுவும் இல்லாதவனாகி விடுகிறான். செய்த மனிதனே சிறந்த மனிதனாகிப் புகழ்பெறுகிறான்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

விலங்கினங்களை நோக்க மனிதர் எவ்வளவு உயர்வு உடையவர்களோ, அவ்வாறே கல்லாதவர்களை நோக்கக் கற்றவர்களும் உயர்வுடையவ ராவார்கள்.

'கல்லாதவன் விலங்குக்குச் சமானம்' என்பதே இதன் கருத்து.

இந்தக் கருத்தினை நாம் நன்ருகப் புரிந்து கொள்ள வேண்டுமானுல், சற்றே உலக நாகரிக வரலாற்றின் ஏடுகளைத் திருப்பவேண்டும். ஆதியிலே, மனிதன், விலங்கோடு விலங்காக வேட்டையாடி உண்டு மிருகத்தன்மையுடன் வாழ்ந்தானே அந்தப் பழைய கற்கால நாகரிகத்தை நினைக்கவேண்டும். அப்போதுதான் பகுத்தறிவு பெற்ற மனிதன், அதனை முறையே பண்படுத்தாது போனுனென்ருல், அவன் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பது நமக்கு நன்கு விளங்கும்.

கல்வியறிவு பரவாத பகுதிகளிடையே வாழும் மக்கள் இன்றும் எவ்வாறு வாழ்ந்து வருகின்றனர் என்பதைக் காட்டுப் பிரதேசங்களிலே, உலக சமூகத்தினரின் தொடர்பேயின்றி வாழுகின்ற குடியினரைப் பற்றிப் படிப்பதிலிருந்து ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம்.

அந்த நிலையிலே ஆதி நாளில் இருந்தவர்கள் தாம் நாமும். இன்று, நாம் நம்மை நாகரிக சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிருேம் என்ருல், அதற்கு உதவியது யாது? இதனை நன்ருக எண்ணிப் பார்க்கவேண்டும்.

காலகாலங்களாக் கணக்கற்ற அறிவுடைய பெருமக்கள், தம் பகுத்தறிவின் திறனுற் கண்ட

உண்மைகளும், உபதேசித்த அறவொழுக்க மரபுகளுமே நம்மை இன்று நாகரிகம்பெற்ற மக்களாக்கியிருக்கிறது.

அந்த உண்மைகள் பலவும் நமக்கு வழிவழிச் செல்வமாகக் கிடைத்திருந்துங்கூட, அவற்றைக் கற்று அறியவேண்டும், அறிந்து மேலும் நம் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை நம்மிடம் இல்லாதுபோனல், நம்மை என்ன சொல்வது?

நாம், விலங்கினத்து வாழ்வை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம் என்றுதானே சொல்ல வேண்டும்? இதுபற்றியே, குறள், 'கல்லாதவரை விலங்கினத்தைச் சேர்ந்தவர்' என்று இடித்துக் கூறுகிறது. 'இதனை உணர்ந்தாவது கல்விப்பயிற்சியிலே ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டும்' என்பதே குறளாசிரியரின் கருத்தாக இருக்கலாம்.

★

# 4. கேள்வி ஞானம்

ஒவ்வொரு மனிதனும், இயற்கையாகத் தன் அறிவை மூடிக்கொண்டிருக்கின்ற அறியாமையைப் போக்கிக்கொள்வதற்காகக் கல்வியறிவை முயன்று பெறுதல் வேண்டும் எனவும், அப்படிக் கல்வியறிவைப் பெருதவர்கள் இந்த உலகவாழ்விலே படுகின்ற அவல நிலைகளையும் இதுவரை நாம் பார்த்தோம்.

இனி, அறிவு விளக்கத்தின் மற்ருேர் அம்சமான கேள்விஞானத்தைப் பற்றி இப்பகுதியில் ஆராய்வோம். பொதுவாகக் கல்வியறிவின் சிறப்பானது விளக்கிக் கூறப்பட்டபோதிலுங்கூட, அந்தக் கல்வியறிவைப் பெறுகின்ற பாதையிலே, தானே தன் அறிவின் துணைகொண்டு கற்றுத் தெளிவதைக் காட்டினும், சான்ருேரின் வாய்மொழியாகக் கேட்டும், தன் உள்ளத்து எழுகின்ற ஐயங்களை அவர்களால் தெளிவிக்கக் கேட்டும் பெறுகின்ற கேள்வியறிவே மிகவும் திட்பமானதாதலின், அதனை இந்தப் பகுதியினுள் காண்போம்.

பொதுவாக ஒரு நூலைப் படித்துத் தெரிவதினும் அதனைத் தக்காரின் வாய்மொழியாகப் பாடங் கேட்பதுதான் சிறந்தது. இது எவ்வாறு என்று நீங்கள் கேட்கலாம்.

நூல்கள் எல்லாம் அவற்றை இயற்றுவோரால் கல்வியுடையவரை மனத்துட்கொண்டே செய்யப்படு கின்றன. நூலாசிரியன்மார் பலரும், கற்றவர் தம் நூலின்கண் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்களை மகிழ்வுடன் பாராட்டினால் இன்புறுவார்கள். அதனால், அவர்கள், ஒரு நூலைச் செய்யும்போதும் கற்றவர்களையே மனத்திற்கொண்டு அவர் உவக்கும் வகையிலேயே திட்பநுட்பம் செறிந்ததாகத் தம் நூலை அமைக்கின்றனர்.

இதனால், ஒரு நூலின்கண் கூறப்பட்டிருக்கும், கருத்தின் உண்மைகளையும், இனிமைகளையும், சாதாரண அறிவுடைய அனைவரும் அறிந்து எளிதிலே அனுபவித்து விடமுடியாது. ஆனால், கற்றவரிடம் பாடம் கேட்கும்போதோ, அவர் அந்த நூலினைத் தம் நுண்ணறிவினால் ஆராய்ந்து, தம்மிடம் பாடங் கேட்ப வரின் அறிவுநிலைக்கு ஏற்றவாறு 'பக்குவமாக விளக்கி உரைக்கின்றார். அப்போது, நூலினை அறிந்து அதனாற் பெருகிற பயனும் மிகுதியாகின்றது

மேலும், எல்லாரும் தம் உள்ளக் கருத்துக்களை எழுதிவைப்ப தென்பதும், அதனை நாம் படிப்பதென் பதும் இயல்வதுமன்று. பற்பல சான்றோர்களும், தலைவர்களும் தம் சிறந்த கருத்துக்களைப் பேச்சாகவே வழங்குவார்கள். அவர்கள் பேச்சின் கவர்ச்சியினால் அக் கருத்துக்கள் நம்பால் எளிதிலே வேரூன்றிவிடவும் செய்யும். இதனால் எல்லாம், 'கேள்விஞானம்' மக்கள் வாழ்விலே, மக்களின் அறிவுத்திறனின் வளர்ச்சியிலே, முதன்மையான ஓர் அங்கமாகும் என நாம் உணரலாம்.

இனி, அதனைப்பற்றிய திருவள்ளுவரின் கருத்துக்களை இப்பகுதியிற் காண்போம்.

## 1. செல்வத்துள் செல்வம்

'மாடு மனை வீடு வாசல்' என்று, செல்வங்கள் பல வகைப்படும். இவையன்றியும் 'மண் பெண் பொன்' எனவும் செல்வங்கள் பேசப்படும். மற்றும், புகழ் செல்வாக்கு என்ற வகையானும் செல்வங்கள் கூறப்படும்.

இப்படிப் பலவகையான செல்வங்கள் இருந்த போதினும், அவற்றுள் எல்லாம் செல்வம் என்ற சிறப்புக்கு உரியது செவிச்செல்வமே யாகும் என்கிறது குறள். அந்தச் செல்வமே செல்வத்துள்ளெல்லாம் முதன்மையான செல்வமுமாகும்.

கேள்விஞானம் இல்லாதவன் பிற செல்வங்களைப் பெற்றாலும், அவற்றை முறையே அநுபவிக்கும் வகைகளை அறியான். ஆதலின், அவற்றை அநுபவிக்க உதவும் கேள்வியே அவனுக்குத் தலையான செல்வமும், அச் செல்வங்களுள் சிறந்த செல்வமும் ஆகும் எனக் கூறப்பட்டது.

> செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
> செல்வத்துள் எல்லாம் தலை.

'செல்வங்களுக்குள் செல்வமாக விளங்குவது செவிச்செல்வமே ஆகும். அச்செல்வமே செல்வங்களுக்குள் எல்லாம் தலையான சிறந்த செல்வமுமாகும்' என்பது இதன் பொருள்.

'செல்வத்து' என்ற சொல்லுக்கு, 'செல்வம் வந்த காலத்து ஒருவனுக்கு' என்ற பொருளைக் கொள்வதும்

ஒன்று. அப்போது, 'செல்வம் வந்த காலத்து, ஒருவனுடைய உள்ளத்திலே அவன் செல்வமாகக் கருதித் தேடவேண்டியது கேள்விஞானமாகிற செவிச் செல்வமேயாகும்; ஏனென்றால், அதுவே செல்வத்துளெல்லாம் தலையானது' என உரைக்கவேண்டும்.

## 2. உணவிற் சிறந்தது

மனித வாழ்விலே இன்றியமையாத ஒன்று உணவு. உணவுதான் மனிதனின் உடல்வளர்ச்சிக்கும், உடல் செயற்படுவதற்கும் வேண்டிய சக்திகளைத் தந்து உதவுகிறது. உணவின்றேல் மனித உடல் மிகச்சீக்கிரமே நலிந்து மெலிந்து அழிந்துபோய் விடும்.

உயிரோ, உடலின் வளர்ச்சியைப் பொறுத்தே இயங்குவது. 'உடம்பாரழியின் உயிரார் அழிவர்' என்பது சான்றோர் வாக்கு. அதனால், 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என, உயிரை வளர்க்க உடலையும் பேணி வளர்த்ததாகத் திருமூலர் கூறுவர்.

இத்தகைய முதன்மையான உணவையுங்கூட, நல்ல உரைகளைக் கேட்கும்போது ஒதுக்கிவைத்து விடலாம் என்கிறது குறள். செவிக்கு உணவாகிய நல்ல பேச்சு உள்ளத்தோடு இரண்டறக்கலந்து, மனிதனின் உயிர்நாளங்களிலே புகுந்து, புத்துணர்ச்சியை எழுப்பி, அவனைப் புதுமனிதனாக ஆக்குகிறது. இதனால், சிறந்த செவிக்குணவு கிடைத்தபோது, சான்றோர் தம் ஊணையும் மறந்து அதனையே பெரிதும் நாடுவர். செவிக்கு உணவில்லாத போதுதான்

தம் வயிற்றுப்பசியை உணர்ந்து அதற்கு உணவு தருவதற்கு அவர்கள் முனைபவராவர்.

> செவிக்குண வில்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கும் ஈயப் படும்.

'செவிக்கு உணவு இல்லாத சமயத்திலே சிறு அளவு வயிற்றுக்கும் உணவு தரப்படும்!'

இதனால், அறிவுத்திறன் என்ற சிறப்பான இயல்பினைப் பெற்றவனான மனிதனுக்கு, அந்த அறிவைப் பற்றிய பசியே அதிகமானதாக இருக்கும் என்பதும் வெளிப்படையாகிறது. இன்றும், சிறந்த பல பேச்சாளர்கள் பேசுவதை மணிக்கணக்காக இருந்து, தம்மை மறந்து மக்கள் கேட்டுக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோமல்லவா! அது இந்தக் கருத்தை அரண் செய்வதாகும்.

### 3. அவியுணவின் ஆன்றோர்

உணவுகளை மக்கள் இரண்டுவகையாக உண்பார்கள். பழங்காலத்திலே மக்கள் உணவைப் பச்சையாகவே உண்டார்களாம். இன்றோ, நாம் வேக வைத்தும்; பலபல சுவைகளினாலே பக்குவப்படுத்தியும் உண்கின்றோம்.

இதுவும் தவிர, உணவிலே, 'மனிதனுக்கு விலங்குச்சக்தியைத் தரும் உணவுவகை எனவும், சாந்தமான பண்பை வளர்க்கும் உணவு வகை' எனவும் இருவகை கூறப்படும்.

ஆன்றோர்கள், புலன்களைத் தம் போக்கிலே செல்லவிடாது அடக்கி ஆள்பவர். அதனால், அவர்கள் எப்போதும் புலனுணர்ச்சிகளை மிகுவிக்கும் உணவு

வகைகளை உண்பதில்லை, அவற்றை ஒதுக்கிச் சாத்துவிகமான குறிப்பிட்ட உணவுகளை உண்பதே அவர்களின் மரபாகும்.

ஆகவே, ஆன்றோர் புலனடக்கத்திற்கு உதவுவனவாகிய உணவுகளையே உண்பவர் என்று அறிதல் வேண்டும். அதனால், அவர்கள் உலகிலே பண்பாளராகவும் ஒழுக்க சீலராகவும் விளங்க, அவர்களுடைய மதிப்பும் புகழும் உலகில் அதிகமாகும்.

செவியுணவுகளிலும் நல்ல விஷயங்களையும் கேட்கலாம்; கெட்ட விஷயங்களையும் கேட்கலாம். ஆனால், புலன் உணர்ச்சிகளைத் தூண்டிவிடாத முறையிலே அறிவு விளக்கத்தைத் தெளிவாகவும், அமைதியாகவும் விளக்கும் உரைகளே கேட்போருக்குப் பயன்தரும். இத்தகைய நல்ல விஷயங்களைக் கேட்பவர் உளளங்களிலே நல்ல கருத்துக்கள் நிலைபெற, அவர்கள் வாழ்விலே ஒரு நியதியுடையவராகிச் சிறப்பும்பெறுவர். அவர்கள் இல்வாழ்வினராகப் போகவாழ்விலே திளைத்தாலுங்கூடப், புலன் அடக்கத்திற்கு ஏற்ற உணவை உண்டு தம்மை நேர்வழியிலே செலுத்திக் கொள்ளுகின்ற ஆன்றோரைப் போலவே, சிறந்த பேச்சுக்களால் தம்மைத் தீநெறிச் செல்லாது காத்துக்கொண்டவர்களாகவும் ஆவார்கள்.

செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றோரோ டொப்பர் நிலத்து.

'செவிக்கு உணவாகிய நல்ல கேள்விஞானத்தைப் பெற்றவர்கள், அவியுணவு நியதியினரான ஆன்றோரோடு ஒத்த சமநிலை யுடையவர்களாக உலகிலே சிறப்புற்று விளங்குவார்கள்.'

'அவியுணவு' என்பதற்கு, 'வேள்வியிலே ஆகுதி செய்யும் பொருள்களை ஏற்கும் கடவுள்கள்' என்பர் சிலர். அது பொருந்தாமை சிந்தித்து உணர்க. பொருந்துமேல், செவியுணவிற் கேள்வியுடையார் பூலோக தேவர்களாக இன்புறுவார் என்ருகும்.

## 4. கல்லாதிருந்தாலும் கேட்க

கல்வியின் சிறப்பையும் கல்லாமையால் வரும் இழிவையும் பலபடச் சொன்ேனம். இருந்தும், 'கற்க மனமில்லாதவனுக ஒருவன் இருந்தால், அவனை என்ன செய்வது? அவன் அழிந்தொழியட்டும் என்று கைவிட்டுவிடலாமா? சான்ருேர் அதற்கும் ஒரு போக்குக் காட்டவேண்டாமா?' என்று, நாம் நினைப் போம்.

கற்றவர் வீதாசாரம் மிகவும் குறைவாகவுள்ள நம் நாட்டிலே, இப்படிக் கேட்பது நியாயமும்கூட. கல்வி கற்கவேண்டுமென்ற ஆசையிருந்தும், பலர் அதற் கேற்ற வசதிகள் இன்மையால், அந்த ஆசைகள் அனைத்தும் நிராசைகளாகி நொந்த வரலாறுகளை நாள் தோறும் நாம் சொல்லக் கேட்கலாம்.

இந்த நிலையிலே, குறள் அதற்கும் ஒருவழி காட் டாமல் இல்லை. கல்வியறிவில்லாத ஒருவன், தனக் குத் தளர்ச்சிவந்த காலத்திலே, கல்வி யறிவில்லாத காரணத்தால் தான் அழிந்து போகவேண்டுமோ என்று அஞ்சிவிடக் கூடாது. அவன், கற்றறிந்தவரை நாடவேண்டும்; தன்னுடைய இக்கட்டான நிலைமை யினை அவர்களிடம் எடுத்துக்கூறி, அதனைப் போக்கிக் கொள்வதற்கு உரிய உபாயங்களை அவர்களிடம் கேட் டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படிக் கேட்டுத்

தெரிந்துகொள்வது அவனுக்குத் துணையாகி நின்று அவனைக் காப்பாற்றும். 'கேட்க' நாணங்கொண்டு அவன் வாளாதிருந்தால், அவன், அழியவேண்டியதே தான் என்கிறது குறள்.

கற்றிலன் ஆயினும் கேட்க; அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றும் துணை.

'படியாதவனுயிருந்தாலும், படித்தவர்களிடம் எதனையும் கேட்டுநடக்கும் இயல்பு உடையவனுகுக; அது அப்படிப்பட்டவனுக்கு ஒரு முட்டுப்பாடு வந்த காலத்திலே அவனைக் காக்கும் துணையாயிருக்கும்.'

படியாதவர்கள் சிலர் மிகவும் சிறந்த யோசனைகளைச் சொல்லும்போது, 'நீங்கள் இவ்வளவு சிறப்பாக எப்படிச் சொல்கின்றீர்கள் ?' என்று கேட்டால், 'உன்னைவிட நான் கேள்விஞானம் அதிகமாக உடையவன்' என்பார்கள். கேள்வி ஞானம் எவ்வளவு சிறந்தது என்பதனை இதனுலும் உணர்க.

## 5. ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்

எவ்வளவோ மனிதர்களுடைய உரைகளை நாம் கேட்கலாம். ஆனுல், அப்படி நாம் கேட்பவை அனைத்துமே நமக்குப் பயன்படுவதில்லை. பொழுது போக்கிற்காகவும், வேறுவகையான புலனுணர்வுகளுக்கும் ஆட்பட்டு நாம் கேட்டு அநுபவிக்கும் பலவும், நமக்கு ஆபத்துக்காலத்தில் உதவியாயிருப்பது இல்லை.

ஆனுல், ஒழுக்கம் உடையவர்களது வாய்ச்சொற்களைக் கேட்டு நடப்பதனை நாம் நம் இயல்பாக ஆக்கிக் கொண்டோமானுல், நமக்கு ஒருபோதும் தீமையே நேராது. அவர்கள் சொற்களால் நாமும் நாளடைவிலே ஒழுக்கசீலர்களாகி உயர்ந்து விடுவோம்.

சொல்லப்போனால், வழுக்கு நிலத்திலே நடப்ப வனுக்குப் பலமான ஊன்றுகோல் உதவுவதுபோல, பலவகையான தீய சூழல்கள் மலிந்த இவ்வுலகிலே வாழும் நமக்கு, ஒழுக்கம் உடையவரின் வாய்ச்சொற் களும் ஊன்று கோலைப் போல உதவி நம்மைப் பேணி நிற்கும் எனலாம்.

**இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.**

'வழுக்கிவிழ நேரும்போது ஊன்றுகோல் போன் றது, ஒழுக்கம் உடையவரின் வாய்ச் சொற்கள்.'

இதனால், 'தீயவர் வாய்ச் சொற்களுக்குச் செவி சாய்த்தலாகாது' என்பதும் பெறப்படும்.

**6. நல்லவை கேட்க**

கேள்வி ஞானம் வேண்டும் என்றதால், கண்டதை யெல்லாம் கேட்டுக்கொண்டே இருக்கலாமா? இந்தக் கேள்விக்குக் குறள் பதில் சொல்லவில்லையே ? இப்படி ஒரு சந்தேகம் நமக்கு வரலாம்.

குறள் அதற்கும் விடை சொல்லாமல் இல்லை. எவ் வளவு சிறிய அளவினதாயினும் நல்லவைகளை மட்டுமே கேட்கவேண்டும். தீயவைகள், எவ்வளவு இனிதாகவும் அதிகமாகவும் கவர்ச்சிகரமாகவும் வழங்கப்படினும் அவற்றைக் கேட்கலாகாது.

சிறிதளவு கேட்ட நல்லவிஷயங்களும் அந்த அள விற்கு ஒருவனுக்குச் சிறந்த பெருமையைத் தருவ தாகும்.

கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே அளவின் மிகுதியும் குறைவுமன்று நாம் கருதவேண்டியவை.

நல்லவை தீயவை என்ற பாகுபாட்டை நினைத்துச் சிறு அளவினதேனும் நல்லவற்றையே நாடிக் கொள்ளல் வேண்டும்.

**எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

'எத்துணைச் சிறு அளவினதாயினும் நல்லவைகளை மட்டுமே ஒருவன் கேட்பானாக, அந்த அளவிலே அது அவனுக்குச் சிறந்த பெருமையினைத் தரும்''

**7. பேதைமை சொல்லார்**

ஒன்றைப்பற்றி, எல்லாருமே சரியாக உணர்ந்து விட முடியாது. சிலரே தெளிவாக எதனையும் உணரக் கூடியவர்கள்; பலரோ பலவற்றையும் பிழையாக உணரக்கூடியவர்கள்.

இவ்வாறு, பிழையாக உணர்வது தவறன்று. அதனைப் பின்னர் கேள்வியால் திருத்திக் கொள்ளவும் முடியும். ஆனால், தாம் பிழைபட உணர்ந்தோம் என்பதையே அறியாது, தாம் கொண்ட பிழைக்கருத்தையே ஒருவர் வெளியே சொல்லவும் செய்தால், அது மிகவும் கவலைப்படவேண்டிய நிலைமையாகும். அப்படிச் சொன்னவருடைய அறிவீனம் பலராலும் வெளிப்படையாக உணரப்படுவதனால், அவருடைய தகுதியும் செல்வாக்கும் சமூகத்திலே குறைய, அவரும் நகைப்பிற்கு நாளடைவில் இடனாகிவிடுவர்.

ஒவ்வொன்றையும் நுட்பமாக ஆராய்ந்து உணர்ந்துள்ள கேள்விஞானத்தை உடையவர்கள், அவ்வாறு, அறிவீனமான சொற்களைப் பிறர் எதிரில் ஒருபோதும் சொல்லவே மாட்டார்கள்,

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர்.

'பிழையாக உணர்ந்தும் பேதைமை தோன்றச் சொல்லாட மாட்டார்கள், எதனையும் நன்கு ஆராய்ந்து உணர்ந்த கேள்விஞானத்தை உடையவர்கள்.'

## 8. தோட்கப்படாத செவி

காது கேளாதவனைச் செவிடன் என்போம். காது கேட்பதென்றால், அவன் நல்ல கேல்விஞானம் பெற்றவனாகவும் இருக்கவேண்டும். அப்படி, நல்ல கேள்வி ஞானத்தைப் பெற்றுப் பெற்றுத் தன் அறிவுக்குத் தராத செவிகள், கேட்கும் தகுதியுடையன வென்றே சொல்லத் தகுதியுடையனவாகா என்கிறது குறள்.

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

செவி தோட்கப் படுதலாவது, நல்ல விஷயங்களை அடிக்கடி கேட்டுக் கேட்டுப் பண்படுதல் செவித் துளைகளின் வழியாகவே கேள்வியால் பெறும் சொல்லொலிகள் மனத்தால் உணரப்படுகின்றன. நல்ல செய்திகளுக்குக் காதுகொடுக்கும் செவிகளே தோட்கப்பட்ட செவிகளெனவும், பிறவெல்லாம் தோட்கப் படாச் செவிகள் எனவும் கூறுகிறது குறள்.

அத்தச் செவிகள் ஒலியினை உணரத்தகும் தம் இயல்பினின்றும் குறைவுபடாத நிலையிலே உள்ளன வென்றாலும், செவியினால் பெறவேண்டிய முக்கிய பயனான கேள்வி இன்பத்தை உணர்ந்து அநுபவிக்க வகைசெய்யாது போதலின். 'துளையற்ற செவிகள்

என்றார். 'துளையிருந்தால்தான் கேள்வியில் ஈடுபடுமே?' என்பது கருத்து.

## 9. வணங்கிய வாயினர்

கேள்வி ஞானமானது, மனிதனுடைய பண்பாடுகளையும்கூடப் பெருமளவிற்குப் பாதிக்கிறது. நல்ல செய்திகளையே கேட்பவன் நல்லவனாகிறான்; கெட்ட செய்திகளையே கேட்பவன் கெட்டவனாகின்றான்.

ப்ராக்காக, ஏதோ கேட்டோம் போனோம் என்றிருப்பதும் ஒருவனுக்குப் பயன்தருவதில்லை. நம்மில் சிலரை நாம் பார்த்திருக்கிறோம். மணிக்கணக்காகச் சொற்பொழிவுகளைக் கேட்டுக்கொண்டு இருந்திருப்பார்கள். நல்ல பல கருத்துக்களைச் சொற்பொழிவாளர் உள்ளத்தைத் தொடும்வகையிலே பேசியும் இருப்பார். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, 'என்ன அண்ணா! சொற்பொழிவு எப்படி இருக்கிறது?' என்று கேட்டோமானால், 'ஆஹா! என்ன அற்புதமாகப் பேசினார் தெரியுமா?' என்பார்கள். அதற்குமேல் 'என்னென்ன விஷயங்களைப் பற்றிப் பேச்சு அமைந்திருந்தது?' என்று கேட்டுவிட்டோமோ, அவ்வளவுதான், அவாகள் திகைப்பார்கள். 'ஏதோ நன்றாகத்தான் பேசினார்' என்பதுடன் நம்மிடமிருந்து தப்பிபபோகவும் முயல்வார்கள்.

இப்படிக் கேட்டு அந்த நொடியிலேயே மறந்துவிடுவது பயனற்றது. கேள்வியிலே, எப்போதுமே நுண்மையாகக் கேட்டு உணரும் அநுபவம் நம்மிடம் வளரவேண்டும். அஃதின்றேல் எவ்விதப் பயனும் அக் கேள்வியாற் கிடையாது.

இப்படி, நுண்மையாக எதனையும் கேட்டுப் பழகிய வர்கள், தம்மைப்போலவே பிறரும் கேட்பார்கள், தம் சொற்களை நுண்மையாகக் கவனிப்பார்கள் என்று உணர்பவராகி விடுவார்கள். அதன் காரணமாக, அவர்கள் பேச்சிலே எப்பொழுதும் பணிவான மொழி களே காணப்படும். அத்தகைய நுண்மையான கேள்வி ஞானம் இல்லாதவரோ, சொற்களின் பயனைச் சரியாக அறியாதவராகிப் போய்விடுவதனால், அவர்கள் பேச்சிலே பணிவுடையவராகுதல் என்பதும் மிகவும் அரிதாகும்.

> **நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
> **வாயினர் ஆதல் அரிது.**

'நுண்மையான கேள்விஞானத்தைப் பெற்றிராத வர்கள், பணிவான சொல்லாட்சி உடையவராக அமைதல் மிகவும் அரிதாகும்' என்பது குறள்.

'பணிவான சொல்லாவது', பிறர் தம் கருத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பார்கள் என்ற விழிப்புடன் அளவாகப் பேசும் பேச்சு. இதனால், 'பிறர் பேசுபவை களைக் கேட்டு நம்மைப் பண்படுத்திக்கொள்ள நாம் முயலல் வேண்டுமேயல்லாது, நாம் கட்டவிழ்ந்து பேசிக்கொண்டே போதல் தவறு' என்பதையும் நாம் அறியவேண்டும்.

## 10. செத்தால்தான் என்ன?

இவ்வளவும் சொல்லிய பின்னர், குறளாசிரி யருக்குக் கேள்விஞானத்தைப் புறக்கணிக்கும் பேதை யாளரான மனிதர்களைக் காணும்போது, அடக்கவும் முடியாத சினம் வந்துவிடுகிறது.

'உலகத்தின் நல்வாழ்வுக்கு நாம் எவ்வளவோ முயன்றாலும், இந்தப் பேதைமக்களுக்கு எத்தனை தான் எடுத்துச் சொன்னாலும், இவர்கள் காதுகொடுத்துக் கேட்கக்கூட மாட்டேன் என்றுகிர்களே?' என்று அவர் மிகவும் வருந்தினார்போலும்!

ஆனால், அறவுரைகளுக்குக் காதுகொடுக்காத அதே மக்கள், சோறே சொர்க்கம் என்று வேளை தவறாது உண்பதும் உறங்குவதுமாக, வெறும் சோற்று மூட்டைகளாக வாழ்வதைக் காணும்போது, அவர்களும் நன்றாக உண்டு நன்றாக வாழவேண்டும் என்ற கருணையுள்ளம் கொண்ட அவருக்குங்கூடப் பொறுக்க முடியவில்லை.

செவியினால் நல்ல செய்திகளைக் கேட்டுச் சுவைக்க விரும்பாத, இந்த வாய்க்கே உணவு போட்டுக் கொண்டிருக்கும் மக்கள் அழிந்தால்தான் என்ன? வாழ்ந்தால்தான் என்ன? இரண்டும் உலகுக்கு ஒன்று தான்! என்கிறார் அவர்.

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்?**

அத்தகையோரை, 'மக்கள்' என்றுகூடச் சொல்ல விரும்பாது, 'மாக்கள்' என வெறுத்து உரைக்கும் ஆசிரியரின் உள்ளம், எவ்வளவுதூரம் புண்பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் உய்த்து உணர்தல் வேண்டும்.

# 5. அறிவு வளம்

மனித இனம் தோன்றிய நாளிலிருந்தே அதற்குப் பல பகைகளும் தோன்றிவிட்டன. காட்டின் கொடிய விலங்குகள், இயற்கையின் எதிர்பாராத நிகழ்ச்சிகள், இப்படிப் பலவும் அவன் பகையாயிருந்தன. இவையோடு, மனித இனத்துக்குள்ளேயே பற்பல கட்சிகள் தோன்றிப் பூசலும் பகைமையும் பொறுமையும் உருவாயின. இங்ஙனம் உருவான பகைகளால், 'மனிதன் என்றும் தன்னை எங்ஙனம் காத்துப் பத்திரப்படுத்திக் கொள்வது?' என்ற கவலையுடனேயே வாழ்பவனானான்.

அந்தக் கவலை, அவனுடைய அறிவைத் தற்பாதுகாப்பை நோக்கித் தூண்டிவிட்டது. அவன் தன்னைக் காத்துக்கொள்ளக் கருவிகள் பலவற்றையும் முயன்று முயன்று கண்டான். நேருக்கு நேராக வரும் பகைகளையே அக்கருவிகள் தடுக்க உதவின. சில சமயம், எதிரிகளின் கருவிகள் இவனுடையவையினும் சக்தி படைத்தனவாயிருந்துவிட, இவன் கருவிகள் பயன் தரவும் இயலாதனவாயின. ஆகவே, தான் கைக்கொண்டு போரிடும் கருவிகளினும், பகைவன் தன்னையும் தன் இனத்தாரையும் அண்மையில் நெருங்க முடியாதபடி ஒரு தடையை அமைத்துக்கொள்ள முடியுமா என்பதனை, மனிதன் தீவிரமாக நினைக்கத் தொடங்கினான். அந்த நினைவிலே தோன்றி வளர்ந்ததுதான்

கோட்டை கொத்தளங்கள். அவை, அவன் வாழ்ந்த வீடுகளைப் பகைவர் நெருங்கமுடியாதபடி ஓரளவிற்கு நல்ல பாதுகாப்பாயிருந்தன.

## 1. காக்கும் கருவி!

கோட்டை கொத்தளங்கள் அரண் எனவும் படும். இவ்வாறு கருவியும் அரணும் மனிதனுக்குப் பாதுகாப்புக்களாக விளங்கிவந்தாலும், அவற்றையும் கடந்ததும், அவற்றினும் சிறந்ததுமான மற்ருெரு காப்பும் அவனுக்கு இருக்கிறது. அதுதான் அவனுடைய அறிவு.

அறிவுதான் கருவிகளைக் காணவும், அரண்களை எழுப்பவும் உதவிற்று. அதுவே அவற்றினும் சிறப்புடையதாக, என்றும் மனிதனைக் காத்துநிற்கும் சக்தியும் உடையது.

கருவிகள் சில பொழுதுகளிலே எதிர்பார்த்த பயனைத் தராதும் போகலாம். அரண்கள் சில சமயங்களில் எளிதிலே பகைவர்க்கு வசமாகி, அதனுல் அழிவு நேர்ந்து விடவும் கூடும். ஆனுல், அறிவு ஒருவனுக்குச் சிறப்பாக இருந்தால், அவனுக்கு என்றும் எதனினும் தோல்வியே கிடையாது.

இறுதிவரை ஒருவனைக் காப்பாற்றும் 'கருவியாக அறிவுடைமை விளங்கும்.

பகைத்து வந்தவரும் ஊரினுட்புகுந்து அழிக்க முடியாத சிறந்த அரணுகவும் அது காத்து உதவும்.'

அறிவுடையோன் தன்முன் வரும் பகைவரையும் எளிதிலே வென்று விடுவான்; தன்னருகே பகை நாடி வரவிடாமலும் விழிப்புடன் பார்த்துக் கொள்வான். இதுவே அறிவுடைமை மனிதவாழ்வின் முதன்மையான பகுதி என்பதை நன்கு வலியுறுத்தும்.

அறிவு ஒருசமயம் காத்து நின்று, மற்றொருசமயம் தளர்ந்து போய்விடுவதன்று; இறுதி வெற்றி பெறும் வரை துணை நிற்கும் சிறந்த காப்புக் கருவியாகும். அதேபோலப் பகைவர் உள் அழிக்க இயலாது காக்கும் அரணும் அது ஆகும்.

அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

அற்றம் வரை காக்கும்; உள் அழிக்கலாகா அரணாகவும் உதவும் அறிவு, பகுத்தறிவு ஒன்றே. அதுவே, பகையின் திறனையறிந்து அதனை எளிதிலே வெல்லும் சக்தியுடையதாகும் என்க.

## 2. நன்மையிடத்திலே செலுத்துவது அறிவு

மனிதன், எல்லாவற்றையும இருவிதமான நோக்கத்தோடுதான் காண்கின்றான். ஒன்று, அவனுக்கு நன்மை தருவது; அதனை அவன் விரும்புகிறான். மற்றொன்று, தீமை விளைப்பது; அதனை அவன் வெறுக்கின்றான்.

நன்மை தருவன, தீமை விளைப்பன ஆகிய இரண்டனுள் நன்மை தருவனவற்றை நாடுவதே அறிவுடைமையாகும். தீமை விளைப்பனவற்றைத் தேடுவதோ பேதைமைச் செயலாகும்.

உடல் உள்ளம் இரண்டும் சேர்ந்தே மனிதனாக வேண்டும். உடல், ஐந்து புலன்களையும், அவற்றில் எழும் உணர்வுகளையும் கொண்டது. உள்ளம் உடலையும் அந்தப் புலன் எழுச்சிகளையும் அடக்கியாள்வது. அடக்கியாள வேண்டிய உள்ளம், தானே அவற்றுக்கு அடிமையானால் அதனால் விபரீதமே விளையும்.

புலன் எழுச்சிகள் அந்த ஆர்வத் துடிதுடிப்புக் களின் நிறைவை மட்டுமே நாடுகின்றன. அவற்றால் வரும் நன்மை தீமைகளைப்பற்றி அவை கவலைப்படு கின்ற ஆற்றல் உடையனவன்று. இதனால், அவற்றை நன்மைகளை நோக்கி மட்டுமே செலுத்த வேண்டிய கடமை உள்ளத்தினைச் சார்ந்ததாகி விடுகிறது. உள்ளம் அறிவுத்திறன் உடையதா யிருந்தால்தான், அதற்கு நன்மை தருவன எவை? தீமை விளைப்பன எவை? என வுணர்ந்து, புலன்களை ஒழுங்குபடுத்த இயலும்.

ஆகவே, மனம்போன போக்கில் எல்லாம் மனி தனைச் செல்ல விட்டுவிடாது, தீமைகளினின்றும் தடுத்து நிறுத்தி, நன்மைகளினிடத்து மட்டுமே கொண்டு செலுத்துவதே சிறந்த அறிவுடைமை என்க.

இதனால், அறிவுடையவன் தீமைதருங் காரியங் களிலே ஈடுபடான் என்பதும், நன்மை தருவனவற்றில் மட்டுமே உள்ளம் செலுத்துவான் என்பதும் அறிக.

சென்ற விடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

'பழக்கங் கொடியது' என்பர். முன்னோர் சென்ற வழி என்பதற்காக அப்படியே நாமும் செல்ல வேண்டும் என்பதன்று. அவற்றினுள்ளும் தீமை தரு வனவற்றை நீக்கி நன்றின்பால் செல்லுவதே சிறப்பு. அந்தச் சிறப்பைத் தருவதும் அறிவு ஒன்றேயாகும்.

'நன்றின் பால் உய்ப்பது' என்றதனால், நன்மை யின்பால் தானே கொண்டு சேர்ப்பது என்று பொருள் உரைக்கவும். இதுபற்றியே 'மனம் போன போக்கெல் லாம் போக வேண்டாம்' என்ற முதுமொழியும் எழுந் தது எனலாம்.

## 3. மெய்ப்பொருள் காண்பது அறிவு

வாழ்விலே நம்முடன் பழகுவோர் பலர். அவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வகையினராகவே இருப்பர். சிலர் நம்மோடு நெருங்கிப் பழகுவர். சிலர் நமக்கு மாறுபட்ட கருத்து உடையோராகவும் இருப்பர்.

இங்ஙனம், பலதிறப்பட்ட மக்களிடையே வாழும் நாம், பலர் கூறும் பலவிதமான பேச்சுக்களையும் கேட்கலாம். ஆனால், அவற்றை அப்படியப்படியே ஏற்றுக் கொள்வது தவறு. நன்கு ஆராய்ந்தே கொள்ளவோ தள்ளவோ செய்தல் வேண்டும்.

அவர்கள் பேசுவனவும், நமக்கு விருப்பந்தரும் பொருட்செழுமை கொண்டனவாக இல்லாதிருத்தலும் கூடும். அவற்றை நாம் கேட்டால், அதனால் நம் உள்ளமும் அதன்பால் மயங்கி மாறுபடலாம்.

ஆகவே, பேச்சுக்களை நிறுத்திவிட்டு, 'அவர்கள் கூறியதன்கண் உண்மை நிலவுகிறதா என, நாமே ஆராய்ந்து கண்டுபிடிக்கவேண்டும்.

உலகம் மிகவும் பொல்லாதது. பேச்சின் சுவாரசியத்திலே மனிதரில் பலர் எளிதாக மயங்கிவிடுகின்றனர். சொல்லப்படும் சொற்கள் எந்த உண்மையான நோக்கத்துடன் சொல்லப்படுகின்றன வென்பதை அவர்கள் சிந்திப்பதே இல்லை.

இன்னுஞ் சிலர் சொல்பவரின் தகுதியை நோக்கி மயங்கி, அவர்கள் சொல்வனவெல்லாமே வேத வாக்குகள் என ஏற்றுக்கொண்டு விடுகின்றனர்.

சொல்லப்பட்டதன் உண்மையான நோக்கத்தை உணர்ந்தே சொற்களை ஒவ்வொருவரும் மனங்

கொள்ளவேண்டுமே தவிர, மேற்போக்காக அப்படியே கொண்டுவிடுதல் கூடாது.

எத்தகைய பொருள்படுவதாயினும் சரி, அதனை எத்தகையவர் சொல்வதாயினும் சரி, அவர் சொற்களின்கண் விளங்கும் பொருள்களிலே மெய்யான பொருள் எதுவென அறிவதே சிறப்பாகும்.

அங்ஙனம் அறிந்தால், மனிதகுலம் கேள்வியினால் எளிதிலே பொய்ம்மைக் கூட்டத்தினர் வசமாகிக் சீரழிகின்ற நிலையும் மாறிவிடும். இவ்வாறு, உண்மையை உணர்வதற்கு உதவுவது அறிவுடைமையேயாகும். அறிவுடையவன் என்பவன் அவ்வாறு உணர்பவன் தான்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

'எவரிடமிருந்து ஒன்றை நாம் கேட்க நேர்ந்தாலும் சரி, அதன் மெய்யான தன்மையை அறிவதே அறிவுடைமை.'

எந்த ஒரு பொருளாயிருந்தாலும் சரி, அது எத்துணை இன்றியமையாததாயிருந்தாலும் சரி, அது மெய்ப்பொருள்தானா என்பதை அறிந்த பின்னரே அதனைக் காதுகொடுத்துக் கேட்பாயாக. அங்ஙனம் கேட்பதே அறிவுடைமையுமாகும்.

## 4. நுண்பொருள் காண்பது அறிவு

ஆன்றோர் நமக்காக வழங்கியிருக்கும் இலக்கிய இலக்கண நூல்களிலாயினும் சரி, அவர்கள் பேச்சுக்களிலாயினும் சரி, நுட்பமாக நம் மனத்தைச் செலுத்தி அநுபவிக்கும் போதுதான் நாம் அதனை அறிந்த இன்பத்தை அடைகின்றோம்.

உதாரணமாக,

அமிழ்தினும் ஆற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

என்ற குறளினைப் பாருங்கள்.

அளாவுவது பாற்சோறன்று, கூழ். அது அந்தக் குடும்பத்தின் பொருளியல் நிலையின் சீர்கேட்டை விளக்கவில்லையா?

'சிறு கை' என்றசொல், அந்த அளாவும் மக்களின் பருவத்தை நம் கண்முன் காட்டுகின்றதன்றோ?

ஏழைக்கும் கூடத், தன் கூழுணவை மக்கள் அளாவிப் பாழாக்கும்போது, அந்தக் குழந்தைக் குறும்பைக் கண்டு உள்ளம் பூரித்துவிடுகின்றதாம். அந்தக் காட்சி அமிழ்தினும் இனிதானதாகின்றதாம். பெற்றோர் குழந்தையிடம் கொள்ளும் பாசத்தை இதனினும் எங்ஙனம் திட்பமாகக் கூறமுடியும்!

தம் வறியநிலையிலே, அந்தக் கூழ் பாழாவதனைக் கண்டு மனக்கொதிப்பு அடைய வேண்டியதிருக்க, குழந்தைப் பாசத்தின் காரணமாக, அதுவே அவர் கட்கு அமுதினும் இனிதாகின்றது. 'ஆற்ற இனிதே' என்ற சொற்களிலே தோன்றும் உறுதிப்பாட்டைக் கவனியுங்கள்.

இங்ஙனம், எதனையும் நுட்பமாக அராய்ந்தால் தான் அதன் பயனை நாம் உணரமுடியும். அப்படி நுண்பொருள் காண நமக்கு உதவுவதே அறிவு ஆகும்.

கேட்பவர், அவர் எண்ணும் பொருள் நயமெல் லாம் கண்டு அனுபவிக்குமாறு, அவ்வளவு திட்ப

முடனும் செழுமையுடனும் தம்மிலிருந்து செல்லும் சொற்கள் அமையுமாறு பேசுதல் வேண்டும். பிறர் சொல்வதன்கண் நுண்மையானபொருள்யாது எனவும் உணர்தலும் வேண்டும். அறிவுடைமை என்பது இதுதான்.

எண்பொருளவாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.

பேசும்போது சொற்செட்டுடன் திட்பமாகப் பேசுதல் வேண்டும். கேட்கும்போது சொல்லப்பட்டவற்றிலேயுள்ள நுட்பமான பொருள் நயங்களைக் கண்டுகொள்ளுதலும் வேண்டும்.

இதனால் பேச்சு அமையவேண்டிய முறையும், விளங்கும். பேச்சாளர் மலிந்துள்ள இந்தக்காலத்திலே, பேச்சைக் கேட்டு அநுபவிக்கும் மக்களுக்கு இன்றியமையாத அறிவுரை இஃது அல்லவா?

## 5. ஒட்பமும் அறிவும்

'கல்லாத ஒருவனின் ஒட்பம் மிகவும் நன்றுகவே இருந்தபோதிலும், அதனை அறிவு உடையவர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று மற்றோரிடத்திலே கூறப் பட்டிருக்கிறது.

'ஒட்பம்' என்பது யாது? இதனை நாம் தெளிவு படுத்திக் கொள்ளுதல் வேண்டும். 'உலகம் தழீஇயது ஒட்பம்' என்கிறது குறள். அதாவது உலகத்தார் ஏற்றுக்கொண்டவற்றைத் தானும் ஏற்று நடப்பது தான் 'ஒட்பம்' எனக் கொள்ளலாம். உலகத்தார் என்றுற் சான்றோர்.

ஆகவே, இந்த ஒட்பம் உலகத்தின் நிலைக்கு ஏற்ப வெல்லாம் மலர்ந்தும் கூம்பியும் வேறுபடுதலும் இயல்

பாகும். ஆனால், அறிவு இதனைப் போன்றதன்று. அது எந்தச் சூழ்நிலையிலும் ஒருசீராகவே இருக்கும் நிலைத்த தன்மையினைக் கொண்டதாகும்.

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

இதனால் 'அறிவுடையோர் உலகத்தைத் தழுவி யும் தவறாக நடவாதவர்' என்பது பொருள்.

ஒட்பம் உலகந் தழீஇயது ஆதலால் அது மலர் தலும் கூம்புதலும் உடையதாக ஆகின்றது. அறிவோ மெய்ப்பொருளும், நுண்பொருளும் காண்பதாதலால் என்றும் எவ்விதமான சலனமும் இல்லாதிருக்கின்றது. நிரந்தர மலர்ச்சிக்கு அறிவே துணைசெய்வதாகும் என்பது இதன் கருத்து.

## 6. ஒட்டி வாழ்வது அறிவு

உலகம் எப்படி வாழ்கிறதோ, அதனை ஒட்டி அது போலவே வாழ்வதுதான் அறிவு உடைமையாகும்.

'உலகம்' என்றது உலகத்து ஆன்றோர்களைக் குறிக் கும். அவர்கள் ஆன்றவிந்தடங்கிய சான்றோர். ஆகவே அவர்கள் வாழ்வு தூய நல்வாழ்வாக இருக்கும். அதனை ஒட்டிப் பிறகும் வாழ்வது நன்மை தரும்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

நாட்டுக்குநாடு நடைஉடைபாவனைகள் வேறுபடும். பழக்க வழக்கங்கள் மாறுபடும். ஆசார அநுட்டானங் கள் வெவ்வேறாயிருக்கும். அந்தந்த நாட்டிற்குத் தக்க படி, அந்தந்த மக்களுக்கு ஒத்தவாறு, நாமும் நடந்து

கொள்ளவேண்டும். அவர்கள் மரபுக்கு மாருக நாம் நடப்பது முறையன்று,

உதாரணமாக, நாம் அமெரிக்காவுக்குச் சென்ருேமாஞல், அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைப் போக்கை அறிந்து, அவர்களுடன் கலந்தே வாழ வேண்டும். நமக்கெனத் தனி மரபினை அங்கும் கொள்வது அவர்கள் அன்பையும் நட்பையும் நமக்குத்தராது. நம்மை அயலாராகவே காட்டிவிடும்.

நாட்டுக்கு நாடு செல்வோர், 'தாம் செல்லும் அவ்வந்நாட்டு மக்களைத் தழுவியே வாழ்தல்வேண்டும்' என்ருற்போலவே, சமூகத்தின் ஓர் உறுப்பினஞக வாழுகின்ற மனிதனும், அந்த சமூகத்தைத் தழுவி, அதன் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு,' அதனை ஒட்டியே தானும் வாழவேண்டும்; வெட்டி வாழ முயலுதல் ஆகாது.

இங்ஙனம் உலகம் தழீஇ வாழ்வதுதான் ஒட்பம் எனப்படும். அது ஒருவனுக்குப் பெருமையையும் நல்ல வாழ்வையும் தரும். ஒட்பம் இவ்வாறு இடத்துக்கு இடம் மாறுபட்டுக் கொண்டே போவதுபோல, அறிவும் மாறுபடுவதன்று; அது என்றும் ஒரே சீராகவே இருப்பது என்ருேம்.

காலத்தை ஒட்டியோ, சூழ்நிலைகளை ஒட்டியோ விரிந்தும் சுருங்கியும் அறிவு தன் நிலை கெடாது. அதேபோன்று உணர்ச்சி வசப்பட்டும் அது உருச் சிதையாது. இதைப் பற்றியே, அறிவானது மலர்தலும் கூம்புதலும் உடையதன்று, அது திட்பமானது; சீரானது என்கிறது குறள்.

பகுத்தறிவு உடையவன் இப்படித்தான் தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். 'தனக்கு அங்ஙனமாதற்குரிய மனநிலை ஏற்படவில்லை' என்று ஒருவன் சொல்வது அவனுடைய அறிவு பண்படவில்லை என்பதையே குறிக்கும்.

கூம்புதல்-மொட்டுப்போலக் குவிதல்; மலர்தல்-இதழ் விரித்த மலராதல். மலர்ச்சிக் காலத்து அழகும் மணமும் மலருக்கு உளதாம். அது கூம்புதற் காலத்து அவை கிடையா. அறிவுடையவனும் சில சமயங்களில் தன் அறிவு சுடர்விட்டுப் பலரையும் கவரவும், சில சமயங்களில் மழுங்கி ஒழியவும் செயற்படான். 'உண்மையிலேயே அவன் அறிவு உடையவனானால், அது எப்போதும் அதன் ஒளியை வீசத் தவறுவதே இல்லை' என்க.

## 7. ஆவது அறிவது அறிவு

'ஆவது' என்பது, தனக்கு ஆகிவருவது' என்று பொருள்படும். அதாவது, ஒருவனுக்கு வந்து சேரும் பொன்னும் பொருளும் புகழும் எல்லாம் இதனுள் அடங்கும். இதற்கு எதிர்ச்சொல் 'போவது'

இன்னின்னவாறு தான் நடப்பதனால், தனக்கு இன்னின்னவெல்லாம் ஆகிவரும் என்று அறிந்து, அதன்படி நடந்து, அதனையும் பெற்று இன்புறுவதே சிறந்த நல்வாழ்வாகும். அறிவுடையவர்கள் மட்டுமே இங்ஙனம் ஆவதை அறியும் முன்னறிவுச் சக்தியினை உடையவராவர்.

காரண காரியங்களையும், சூழ்நிலைகளின் போக்கையும், நன்றாகத் துருவித் துருவி ஆராய்ந்தபின்

னரே அறிவுடையவன் ஒரு செயலிலே ஈடுபடுவான். அதனால், அவன் தன் வருங்காலத்து நலனையும் முன்னரே மனக் கண்ணால் அறிந்தவனாகிறான். அந்த அறிவுத் தெளிவு இல்லாதவரோ, பெரும்பாலும் நினைப்பது ஒன்றும் நடப்பது ஒன்றுமாகவே நாளும் நலிகின்றவராவர்.

இங்ஙனம், ஆவதுபற்றிய அறிவுத்திறன் இல்லாதவர், அதனைக் கல்லாதவர் அனைவருமே அறிவில்லாதவர் என்றே கொள்ளப்படுவர்.

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

'அறிவுடையாராவது எதனையும் நுணுகி ஆராய்ந்து ஆவது அறியும் வழியினைக் கற்றவர்கள்; அங்ஙனம் அறியும் வகையைக் கல்லாதவர் அறிவில்லாதவர்' எனவும் பொருள் கொள்ளலாம்.

## 8. அச்சமும் அறிவும்

அச்சமே கீழ்களது ஆசாரம்' என்ற தொடரைக் கவனியுங்கள். கீழான மன நிலை உடையவர்களது இயல்புதான் அச்சம் என்கிறது அது. ஆகவே, மனத்தெளிவு உடையவர் எதற்கும் அஞ்சுவதிலர் என்று நாம் முடிவுசெய்து விடலாமா ?

உதாரணமாகத் தொத்து நோய் மிகுதியாகப் பரவி யிருக்கின்ற ஒரு பகுதி. அங்கு போவதற்கு அஞ்சி ஒதுங்குகின்றான் ஒருவன். அவன் அறிவு உடையவனா? அல்லது, அவன் மேலே சொன்ன விதியின்படி கீழானவனா ? அவன்தான் அறிவு உடையவன்., அதற்கு அஞ்சாது சென்று, அதனால் நோய்

வாய்ப்பட்டு அவதியுறுகின்றானே. அவன் தான் பேதை.

அஞ்சவேண்டிய ஒன்றிற்கு அஞ்சாமல் இருப்பது பேதைமை; அஞ்சுவதற்கு அச்சப்பட்டு அதனின்றும் ஒதுங்குவதோ அறிவுடையவர்களின் செயலாகும். அவரை எவரும் பழிதூற்றார்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

ஆகவே, 'அறிவு தீயவகையிற் செல்லல் கூடாது என்ற அச்சத்தையும் ஒருவனுக்குத் தரவேண்டும்' என்று கருதலாம்.

இதனால், 'செயற்கரிய செய்தலை அஞ்சி ஒதுங்குவது அறிவுடைமை' என்று கருதி விடுதல் நன்றன்று. 'செயற்கரிய செய்வார் தாம் பெரியார்.' ஆனால், பயன் நன்மை தருவதாயிருக்கவேண்டும். 'பயனை ஒட்டியே செயல்கள் மதிக்கப்படும்' என்ற பொதுநியதியை எவரும் மறந்துவிடுதல் கூடாது.

## 9. அறிவினார்க்கு நோய் இல்லை

'நோய்' என்பது துயரம். அது உடல் நலக் குறைவு, மன நலக்கேடு ஆகியவற்றால் வரலாம். பகையாலும் நிகழலாம். இவற்றுட் சிலவற்றை எளிதாக நாம் வெற்றி கொள்ளலாம். சிலவோ நம்மை அதிரவைக்கும் கொடுமை உடையவாகவும் வந்து விடும்.

ஆனால், 'நோய் வந்தபின் காத்துக் கொள்ளலாமே?' என்று, வாளாவிருப்பது அறிவுடைமையன்று. அது வராததன் முன்னரே அங்ஙனம் வரா

மற் காத்துக்கொள்ளச் செய்யவேண்டுவன வற்றை நாம் தவறாது செய்துகொள்ளல் வேண்டும்.

இங்ஙனம், தம் நலத்தை முன்னரே காத்துப் பேணிக் கொள்வதே அறிவு உடைமையாகும். அத் தகைய அறிவினையுடைய ஒருவனுக்கு, அவனை நடுங்க வைக்குமாறு வரும் பெருந்துயரம் எதுவுமே இல்லை யாகும்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

'எதுவந்து எதிர்ப்பட்டாலும் அதனின்றும் தன்னைக் காத்துக்கொள்ளும் நுட்பமான அறிவு உடையவர்க்கு, என்றுமே அவர் அதிர வருவதோர் துயரம் இல்லை யாகும்' எனவும் கூறலாம்,

## 10. எல்லாம் உடையார்!

அறிஞர் மனத்திலே தெளிவு இருக்கும். தம் வசதி களுக்கு ஏற்பவே தம்மை அமைத்துக்கொண்டு அவர் மன அமைதியுடன் இருப்பர். தக்க காலம் வரும்போது தம்மை உயர்த்துக் கொள்வதற்கான திறனும் அறி வுடையவர்களிடம் உண்டு.

போதுமென்ற மனமும், வீணாசை கொள்ளாத தன்மையும், அறிவுடையோர் பால் இருப்பதனால், அவர் வாழ்விலே நிம்மதியுடன் வாழ்பவராவார். ஆனால், அறிவற்றுப் பிற செல்வ வளங்களைக் கூட்டிக் குவித்திருப்பவரோ என்றும் நிம்மதியாக வாழ முடிவதில்லை.

'உடைமை' என்பது, ஒரு மனிதனுக்கு நன்மை செய்வதன் பொருட்டே என்பர். அது உண்மை

யாயின், எல்லா நன்மைகளும் பெற்ற அறிவுடையோர் உடைமை என்ற ஒன்று தம்மிடம் இல்லாவிட்டாலும் தம் மனநிறைவினால் எல்லாம் உடையவர் போல ஆகிவிடுகின்றனர்.

ஆனால், அறிவற்றவரோ தமக்கு எத்துணைதான் செல்வ செல்வாக்குகள் இருந்தாலும் ஒன்றுமில்லாதவர் என்ற நிலையிலேயே இருப்பர். செல்வத்தின் பயனை முறையே அறிந்து துய்ப்பதற்கும் அறிவு வேண்டுமல்லவா? அது இல்லாதுபோகவே என்ன செல்வம் உடையவராயினும் அவர் ஏதும் இல்லாதவராயினர் என்க.

செல்வத்தின் பயன் துய்த்தல். துய்த்தல் நெறியினை அறியாதவர்பால் இருக்கும் செல்வம், இருந்தும் இல்லாததுபோலாயிற்று.

இது பற்றியே,

அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

என்ற குறளும் எழுந்ததுபோலும்!

அறிவு உடைமை பிற எல்லா உடைமைகளையும் பெற்றது போலாகும்; அதனால் அறிவு உடையவர் எல்லாம் உடையவரும் ஆவார்; அறிவில்லாதவரோ ஏது இருப்பினும் இல்லாதவரேயாவர்.

# 6. கீழ்த்தரமான அறிவு

அறிவுடைமை பற்றிய செய்திகளை இதுவரை ஆராய்ந்தோம். அறிவு சரிவர இல்லாத சிலர் தாமும் அறிவுடையவரே என எண்ணிக்கொண்டு. சில பல செயல்களைச் செய்வதற்கு முயல்கின்றனர். அங்ஙனம் முயல்பவர், 'எத்தகைய கேடுகளுக்கு ஆளாக நேரும் என்பதனை நாம் இங்கே காணலாம்.

'புல்' மிகவும் அற்பமான ஜீவன். 'ஓரறிவு உயிர் என்று கூறப்படுவது. மிகவும் தாழ்ந்த நிலையிலேயுள்ள இந்தப் புல்லினின்றும், தாழ்ந்த அறிவுடைமையைக் குறிக்கும் புல்லறிவு என்ற சொல்லும் எழுந்தது. 'புன்மை' என்ற சொல்லும் இதனை ஒட்டிப் பிறந்ததேயாம்.

புல்லறிவுடன் ஆண்மை என்ற சொல்லும் சேர்ந்து வழங்கப் பெறுதலால் இதன் நிலைமையை நாம் சரிவர உணர்தல் வேண்டும். புல்லறிவு உடையவர், தம் நிலைமையை உணராது தாம் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றால் அதன் தீமையை அவர்கள் அனுபவிக்கத்தான் வேண்டும். குறைகுடம் கூத்தாடும் என்றாற்போலப் புல்லறிவும் ஆண்மை பேசும்; அதன் பயனாக அவதியும் அடையும்.

அறிவுடையவன், எதனையும் ஆர அமர ஆராய்ந்து தெளிந்தபின்னரே செயலில் ஈடுபடுவான். ஆனால், புல்லறிவு உடையவனோ அமைதிக்குப் பதிலாக ஆர்ப்பாட்டம் மிகுந்தவனாகவே இருப்பான். இந்தப் போலி

நிலையினால், அவன் வேதனைப்பட நேரும். ஆதலினால், அறிவுடைமையின் சிறப்பைக் கூறியபின், அடுத்து இதுபற்றிக் கூறப்பெறுகின்றது.

## 1. இன்மையுள் இன்மை

ஒரு மனிதன், சாதாரணமாக வாழ்க்கை நடத்துவதற்கு இன்றியமையாதன சில வசதிகள். சமூகத்திற்குச் சமூகம், நாட்டிற்கு நாடு இந்த இன்றியமையாத தேவைகளின் அளவு கூடலாம்; குறையவும் செய்யலாம். ஆனால், இப்படி ஓர் அடிப்படைத் தேவை என்ற நிலைமை இருந்தே தீரும்.

நம் தமிழகத்திலே, ஒரு காலத்தில், 'உண்பது நாழி உடுப்பவை நான்கு முழம்' என்ற நியதியிலே அடிப்படைத் தேவை இருந்ததுண்டு. இந்நாள் அந்த அளவு மிகமிக மாறுதல் அடைந்துவிட்டது.

எது எப்படி இருந்தாலும், இத்தகைய குறைந்த பட்ச வாழ்க்கைத் தேவைகள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதவை என்பதில் எவர்க்கும் ஐயமில்லை. இவற்றைப் பெருமலிருக்கிறவர்களின் வாழ்க்கை இன்னல் பல சூழ்ந்ததாகவே இருக்கும். இந்த அவல நிலையைத் தான் 'இன்மை நிலை' என்று ஆன்றோர் சொல்லுவர்.

இன்மை நிலையின் தொல்லைகள் சகிக்க முடியாதவை. இவற்றுள்ளும் சில வசதிகளாவது இருப்பவர்களும் இருப்பார்கள். உயிர் உடலைவிட்டுப் பிரிந்து விடாதவாறு காத்துக்கொள்ளும் அற்ப வசதியாவது அவர்களிடம் காணப்படும், அதுவும் இல்லாத நிலையோ, நம்மால் எண்ணவும் முடியாத அளவுக்குப்

பெருந்துயர் நிறைந்ததாகும். இந்த நிலையினை 'இன்மையினுள்ளும் இன்மை நிலை' எனலாம்.

வாழ்க்கை வசதியற்றவர்கள் என்றொரு சாரார்; அவர்கள் இரங்கத்தக்கவர்கள். அவர்களுள்ளும், மிக மிக இரங்கத்தக்கவர்கள்தாம் இன்மையுள்ளும் இன்மை நிலையினர்.

'அறிவின்மை' இத்தகைய நிலையைத்தான் காட்டும். பிற வாழ்க்கைவசதிகள் இருக்கலாம். அவற்றைப் பயன்படுத்தவும் அறிவு வேண்டும். அதனால், அந்த அறிவற்றதன்மை, 'இன்மையுள் இன்மை' ஆகி வருத்தும் என்க.

அறிவின்மைக்கு மட்டும் இவ்வளவு முதன்மை தருவானேன்? பிறவற்றின் இன்மையாலும் மனித இனம் அவதிப்படுமே? இங்ஙனம் கேட்கத் தோன்றலாம்.

அவல நிலையிலும், அறிவுடைமை இருந்தால் அவன் எங்ஙனமேனும் முயன்று முன்னுக்கு வருவான் அல்லவா? அது இல்லாதுபோனால் அந்த வறுமை மிகக்கொடிதாக வருத்தத்தானே செய்யும்?

வறுமை காரணமாக மக்கள் துயரப்படுவதை அறிவுடைய உலகம் நெடுநாட்களுக்குச் சகித்துக் கொண்டிருக்காது. வயிற்றிலே தோன்றும் அந்தப் பசி என்னும் தீயானது, அவர்களைக் குமுறி எழச் செய்யும். சமுதாயத்திலே இத்தகைய நிலைமை நெடுங் காலத்திற்குச் செலலுபடியாகாது. சமதர்ம நிலைமை வந்தே தீரும். இதை எதிர்பார்த்தே, குறள் 'பிறிதின்மை இன்மையா வையாது உலகு' என்கிறது.

'பிறிதின்மையை இன்மையாக உலகம் கருதாது' என்பது, சிலர் காணும் பொருள். அதனிலும், அந்த இன்மைகளை மாற்றியமைக்க உலகம் முயலவேண்டும்; முயலும் என்பதே சிறப்பாதல் காண்க.

அறிவின்மை இன்மையுள் இன்மை; பிறிதின்மை
இன்மையா வையாது உலகு.

இந்நாளில், மக்கள் அனைவருக்கும் அடிப்படை வாழ்க்கை வசதிகள் உறுதியளிக்கப்பட வேண்டும் என்று பேசுகிறார்களே, அந்தச் சமதர்ம நீதியானது எவ்வளவு உறுதியாக இக்குறளிலே வற்புறுத்தப்பட்டிருக்கிறதென்று பாருங்கள்! 'உலகம் இன்மையாக வையாது' என்று குறளாசிரியர் எதிர்பார்த்தார். இன்றுவரை அது நிறைவேறாத நிலைக்கு நாம் வெட்கப் படத்தானே வேண்டும்!

2. பெறுவான் தவம் !

தனக்குத் தேவையானதற்குமேல் நாட்டுக்கு அவசியமான பொருள்களை ஒருவன் சேமித்துவைப்பது தவறான செயல். 'உலகம் பொதுச் சொத்து' என்ற இயற்கையின் நியதிக்கு அது மாறுபட்டது. பிற உயிரினங்கள் இப்படி உரிமை கொண்டாடவில்லை. ஆறறிவு படைத்த மனிதன் இருக்கிறானே, அவன்தான் இந்தத் தனிஉரிமையைக் கொண்டாடுகிறான். அடுத்தவனைவிடத் தான் அதிகமான நிலத்தை வளைத்துக் கொள்ளல்வேண்டும்; அடுத்தவனைவிடத் தான் அதிகமான பொருள்களைச் சேமித்து வைத்துக்கொள்ளல் வேண்டும்; இந்தப் பேராசை எப்படியோ மனித இனத்தின் தீராத நோயாகிவிட்டது.

'தனி மனிதன் இன்மையால் வாடும் நிலையினை உலகம் என்றும் வைத்துக்கொண்டிருக்காது' என்று

நம்பிய குறளாசிரியருக்கு, அந்தக் கருத்தை மனப் பூர்வமாக நம்ப முடியவில்லையோ என்னவோ, அவர், தனித்தனிப் பொருளினைச் சேர்த்தாலும் அதனை மனம் உவந்து இல்லாதோருக்கு வழங்கியாவது மகிழுங்கள் என்றொரு துணைவிதியையும் வகுக்கிறார். இப்படித் தன்னிடம் அதிகமாகச் சேர்ந்த பொருளைப் பிறருக்கு மனமுவந்து தருகின்ற பண்பு ஒவ்வொருவரிடமும், குறிப்பாக அறிவுடையவரிடம், கட்டாயம் வளர்தல் வேண்டுமாம்.

'பகுத்தறிவு உடைமை' என்றால் அது தெளிவான சிந்தனையும் முடிவும் ஆகும். இயற்கை பொதுச் சொத்து; அதன்கண் பிறரைப்போலவே தானும் பிறந்த ஒருவன்; தன் சூழ்ச்சியாலோ சூழ்நிலை யாலோ, பிறரினும் அதிகமான வளத்தைப் பெறுவது சமூகப் பொதுநீதி அன்று; என்ற உணர்வு வேண் டும். அந்த உணர்வு உள்ளவனே அறிவுடையவன்; அவனே பிறருக்கும் தந்து மகிழ்கின்றான்.

அறிவில்லாதவன் தருவதும் உண்டாகின்றதே? இப்படிச் சிலர் கேட்பர். ஒரொரு சமயம் இப்படி எதிர்பாராத அதிசயம் நிகழ்வதும் இயல்புதான். என் றாலும், அதனைப் 'பெறுவான் தவம்' என்றுதான் கருத வேண்டுமாம்.

அறிவு மழுங்கியவன், தன் சுயநலம் என்ற குட் டையிலேயே ஊறிக்கிடப்பானே யன்றி, அவன் 'செல் வத்தின் பயனே ஈதல்' என்ற நீதியை மதியான். அவன் ஈதலும், வேறு பல சூழ்நிலைகளில் நிகழலாமே யன்றி, மனமுவந்த நிலையிலே நிகழ்தல் இல்லை.

ஈத்து மனம் உவக்கின்ற அறிவுத்தெளிவு அவ னிடம் கிடையாதல்லவா? அதனால்தான், அதனைப்

பெறுபவன் செய்த தவமாக நாம் கருதவேண்டும் என்கிறது குறள்.

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம்.

'தவம்' என்பது, குறித்த எண்ணத்தோடு மனம் மொழி மெய்களை ஒருநிலைப்படுத்தி இடையறாது முயல்கின்ற உறுதி. நோன்பு-யோகம்-யாகம்-இவை வேறு; தவம் வேறு. வேறுபாடுகளை உய்த்து உணர்க.

'நெஞ்சு உவந்து ஈதல்' என்ற சிறப்பினைக் கவனிக்கவும். மனம் வாடியோ, அல்லது அஞ்சியோ, சுயநல விளம்பரம் கருதியோ ஈதல் இதன்கண் அடங்கா. அவை ஈதலும் ஆகா. கொடுக்கலாம் அவன்; கொடுப்பதிலே மனம் உவக்கும் இயல்பு அவனிடம் இருப்பதில்லை. கொடுத்தால், பெறுபவன் இடையறாது அதற்காக முயன்றிருக்கின்றான் என்றே கருதுக.

'அவன் ஈவது இயல்பன்று; பெறுவான் தவமே என்றதனால், தவமுயற்சிகளால் அடையும் பயனும் அங்ஙனம் எதிர்பாராத நிலையிலே வருவதுதானோ? இவ்வாறு மயங்கி விடாதீர்கள். சொந்த நலன் கருதிச் சமூகத்தை வெறுத்து ஒதுங்கி ஆற்றும் தவத்தை இங்கே ஆசிரியர் சுட்டவில்லை. உறுதியான, இடையறாத முயற்சிகளையே குறிக்கின்றார்.

அவர்கள் மனமுவந்து ஈதல், கொடுக்கும் தகையார்க்குக் கொடுத்ததாகவும் இருப்பதன்று என்ற கருத்தும் இக்குறளிலே எதிரொலிக்கக் காணலாம். இதனால், அறிவுடைமையே ஈதல் உடைமை என்க.

## 3. தமக்குத் தாமே கேடு !

துன்பம் புறத்திலிருந்து வரலாம். அதனை எதிர் பாராது வருவதென்றும் நாம் கருதலாம். அதனை முன்னரே அறிந்து தன்னைக் காத்துக்கொள்வதுதான் அறிவுடைமை.

ஆனால், தனக்குத்தானே கேட்டை வருவித்துக் கொள்ளலாமா ? அப்படி வருவித்தால் அது எவ்வளவு பேதைமை ? இப்படியும் சிலர் செய்தால், இவர்களைப் புல்லறிவாளர்கள் எனல் வேண்டும்.

அவர்கள், தம் அறியாமை காரணமாகத் தம்க்குக் கேடு தருவனவற்றையும் அதன் உண்மையுணராது பயன்தருவதே என மயங்கி, அதனில் ஈடுபட்டுப் பின் பெருந்துயர் அடைபவர். அறிவற்றோர்பால் நாளும் காணும் குறைபாடு இதுவாகும்.

பகுத்தறிவு உடையவன் தனக்குத் தீமை தரும் செயல்களிலே என்றும் ஈடுபடவேமாட்டான். எதனையும் தெளிவாக ஆராய்ந்தே செயற்படுவான்

அறிவில்லாதவனும், ஆனால் செருக்குள்ளவனுமாக ஒருவன் இருந்தால், அவன், 'யானை தன்தலையிலே தானே மண்ணைப் போட்டுக்கொள்வது' போலத் தனக்குத் தானே தீமைகளைச் செய்பவனாக இருப்பான்.

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

"அறிவற்றவர்கள் தாமே தம்மை வருத்திக் கொள்ளும் துயரம், அவர்களைப் பகைத்தவர்களுக்கும் கூடச் செய்வதற்கு அரியதாகும்."

'பீழை' நோயின் சின்னம், நோயையும் குறிக்கும். பகைவர் பொதுவாகவே கேட்டைச் செய்யும்வாய்ப்பை எதிர்பார்ப்பவர்கள். 'அவர்கள் செய்யும் கேட்டி னும் மிகுதி' என்றதால், அறிவற்ரோர், தம் அறியா மைச் செயல்களால், தமக்குத் தாமே பகையாகிப் பற்பல துன்பங்கட்கும் உட்படுவர் என்க.

புல்லறிவு ஆண்மையின் தீய விளைவுகளுள் இதுவும் ஒன்று. இது மிகக் கொடுமையானதும் ஆகும்.

## 4. வெண்மை எது ?

புல்லறிவாளர்கள் எதனையும் உணர்ந்து போற் றும் இயல்பு அற்றவர்கள்; அறிவற்றுப் போலியான ஆண்மை மட்டுமே உடையவர்களாதலால், அவர்கள் முரட்டுத்தனமாகத் தவருன பல காரியங்களைச் செய் தலும் செய்வர். அதனுல் வரும் விளைவுகள் விபரீத மாகவே இருக்கும் என்பதையும் சொல்லவேண்டிய தில்லை. அதற்காக, அவர்கள் கவலைப்படுவதும் இல்லை. அந்த அறிவும் அவர்களிடம் கிடையாது.

உலகத்து நல்ல வாழ்வு இது; அதனைக் கைக் கொள்ளல் வேண்டும். உலகத்துத் தீய விளைவுகள் தருபவை இவை; இவற்றை ஒதுக்கி வாழ்தல் வேண் டும். இந்த நினைவுகள் கூட அவர்கட்கு இருப்பதில்லை. நல்லவை பயனற்றனவாகவும்; தீயவை பயன் தருவன வாகவும் தோன்ற, அவர்கள் அவற்றின்கண் மயங்கு தலும் இயல்பு.

தம் உண்மையான ஆற்றலை அவர்கள் சரிவர உணராமல், தமக்குப் பேராற்றல் இருப்பதுபோலத் தம்முள் கற்பித்துக் கொள்வதனுல், அவர்கள் தம்

சக்திக்கும் மீறிய பலவற்றில் ஈடுபட்டுத் தளர்ந்து இடைக்கண் முறிதலும் கூடும்.

இவற்ருல், புல்லறிவாளர்களின் உள்ளத்தை அறிவின் எழுச்சியற்ற பாழாகவே கொள்ளல்வேண்டும். அறியாமையை உணர்ந்த நிலேயும் இல்லாமல், செருக்கும் சேரவே, அவர்கள் மிகவும் வெறுக்கப்படவேண்டியவரும் ஆகின்றனர்.

'கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்பர். கற்று அறிவுத்தெளிவு பெருமலே செருக்கு அடைந்தவரோ, போலிப் பெருமை கொண்டு அழிபவர்கள் ஆவார்கள்.

'வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.'

செருக்கு-அகந்தை; மனத்தைக் கவிந்து மூடியிருக்கும் மாயை எனவும் இதனைச் சொல்லுவர். 'அறிவுடையோம் யாம்' என்று செருக்குதல் அறிவு உடைமையின் இயல்பன்று. அறிவுடையோர் கற்றறிந்து அடங்கி ஒழுகுபவராகவே இருப்பர்.

'ஒண்மை உடையம் யாம்' என்று சொல்லுபவர் பாழ்மனத்தர் என்பது இது.

இந்நாளிலே சிலர் தமக்குத்தாமே அறிஞர் கலைஞர் போன்ற புனைவுகளைச் சூட்டிக் கொள்ளலைக் காண்கின்ருேமே, அதனை இந்தக் குறளோடு ஒப்பிட்டுக் காண்க.

5. சந்தேகம் உண்டாகும்!

இந்த உலகிலே அறிவின் விளக்கத்திற்காக நாம் கற்கவேண்டிய நூல்களும் துறைகளும் அளவற்றன

வாகும், அவற்றை முழுமையும் கற்றவர் எவருமே இலர். ஆயுள் முழுமையும் ஒருவர் கற்றுக்கொண்டே இருந்தாலும் கூட, 'எல்லாம் கற்றவர்' என்று ஆகிவிட முடியாது.

அறிவுவிளக்கம் பெறுவதற்கு மனத்தை மூடி யிருக்கின்ற மாசுகளை முதலில் அகற்றிவிடவேண்டும். 'மாசு அகற்றுவதற்காகவே கல்வி' என்று குறளும் வரையறுத்திருக்கிறது. 'கல்வி கரையில' என்ற ஆன்றோரின் வாக்கையும் இங்கே நினைக்கவும்

குறிப்பிட்ட சிலவற்றை மட்டுமே கற்றறிந்து, அந்தத் துறையிலே ஓரளவு திறமையும் பெற்றிருக் கின்ற நம்மவர்களுள் சிலர், அந்த ஒரு சிறு திறமை யின் காரணத்தால் தம்மை எல்லாம் அறிந்தவர் எனச் செருக்கித் திரிகின்றனர். அவர்கள் நினைவிலே மட்டும் இந்த ஆணவநினைவு இருந்தாலும் பாராட் டாமலிருக்கலாம். ஆனால், பேச்சிலும் எழுத்திலும் அது வெளிப்படும்போதுதான் நாம் கவலைப்பட வேண் டிய திருக்கிறது.

இத்தகையவர்களை வன்மையாக எச்சரிப்பது போலக் குறள் கூறும் நீதியைக் கவனியுங்கள். மனிதன் எந்த அளவோடு நடந்துகொள்ள வேண்டு மென்ற அந்த விதியை நன்றாக உணருங்கள்.

'தான் அறிந்தவற்றைப்பற்றியே ஒருவன் பேச லாம். அறியாத ஒன்றையும் அறிந்ததுபோலப் பேசு தற்கு முற்படுதல் மிகவும் தவறு. அப்படி அவன் முயன் றால், அவனுக்கு இருந்த பழைய மதிப்பும் இல்லாமற் போகும். அவனறிந்த துறையினும் அவன் அறியாமை யுடையவனே என்றுதான் உலகம் கருதும்.'

இதனால், 'அறிவுடையோர், தாம் அறியாத செய்திகள் பல இருப்பதனை உணர்ந்து, அவற்றைப் பற்றித் தெரிவதற்குமுன் பேசத்தொடங்குதல் கூடாது' என்பது தெளிவாகும்.

'கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.

'கல்லாத ஒன்றை மேற்கொண்டு நடத்தலால் கசடற வல்ல ஒன்றும் சந்தேகத்தைத் தந்துவிடும்' என்பது குறள்.

இனி, 'எந்த ஒரு வினையையும் தொடங்குவதற்கு முன்னர் அதனைப்பற்றிய எல்லா விவரங்களையும் கல்லாதே தொடங்குதல் கூடாது. அங்ஙனம் கல்லாத படி எதனையும் தலைமேற் போட்டுக்கொண்டு நடந்தால், அதன் விளைவாகக் கசடறத் தெரிந்தவையும் பலன்தருவதிற் சந்தேகமாகி விடும்' எனவும் பொருள் கொள்ளலாம்.

## 6. குற்றம் மறைதல் வேண்டும்

இயல்பாகப் புலன்களின் ஆர்வங்கட்கு ஆட்பட்டு விடுபவன்தான் மனிதன். அவற்றை அறவே கட்டுப் படுத்தி விடுதற்கோ எவராலுமே இயலாது. ஆனால், வாழ்வைக் கெடுக்காத எல்லையிலே ஒதுங்கி நிற்குமாறு அவற்றைச் செய்துகொள்ள முடியும். அப்படிச் செய்துகொள்பவனே சிறந்த அறிவுடைய மனிதனும் ஆவான்

புலன் உணர்வுகளின் காரணமாக உள்ளத்திலே பற்பல குற்றநினைவுகள் கால்கொள்ளத் தொடங்குகின்றன. அவற்றை முதற்கண் அகற்ற முயல்வது தான் அறிவுடைமையின் முதற்படியாகும். அஃதில்லா

மல், உள்ளத்திலே அவற்றை வளரவிட்டுக்கொண்டே, புறக்கோலத்தில் நல்ல அறிவுடையவர்போல வேட மிடுதல் கூடாது. அது பயனும் தராது.

சிலரைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய அந்தரங்க நடவடிக்கைகள் எல்லாம் மிகவும் பயங்கரமானவையாக இருக்கும். பொதுப் பணத்தைக் கையாடல், மற்றும் சொல்லவியலாத பலப்பல தீய செயல்களுக்கும், மிகமிக இழிந்த பண்பு களுக்கும் அவர்கள் உறைவிடமாயிருப்பர். ஆனால், அவர்களுடைய புறத்தோற்றமோ பக்திமான்களைப் போலவும், மிகவும் சிறந்த பொதுத்தொண்டர்களாக வும் காட்டும்.

இத்தகைய, ' பசுத்தோல் போர்த்த புலிகள் சமூகத்திலே பலர். இவர்களும் என்ன நினைக்கிறார்கள்? தங்கள் அறிவுத்திறமையினால் தாங்கள் தங்கள் தீய செயல்களை மிகச் சாமர்த்தியமாக மறைத்து விட்ட தாகவும், தங்களை எல்லாருமே உயர்ந்தோர் எனக் கருதி மதிப்பிடுவதாகவும் நினைக்கின்றனர்.

ஆனால், உண்மை அதுவன்று. அவர்களை எவரும் மனமுவந்து போற்றுவது கிடையாது. 'இவர் களோடு நமக்கேனடா வம்பு?' என்ற நிலையிலே, அவ ரைப் போற்றுவதுபோல நடக்கின்றனர். இதுவே உண்மையாகும்.

தீயவற்றிலே ஈடுபடுவோரிலே பலர் நல்ல அறிவுத் திறனும் நுட்பமும் உடையவர்களாகவும் இருக்கின்றனர். 'அவர்கள் தங்கள் உள்ளங்களை நல்ல வற்றிலே செலுத்தினால் எத்துணையோ நன்றாக இருக் கும்!

அற்றம் மறைத்தலோ புல்லறிவு; தம்வயின்
குற்றம் மறையா வழி.

"உள்ளத்திலே எழுகின்ற குற்றநினைவுகள் மறையுமாறு கற்று அறிவுவிளக்கம் பெறுதலே அறிவுடைமையாகும். இதனைவிட்டு இறுதிவரைக்கும் வெளியே தெரியாமல் மறைத்து விடுவேன் என்று நினைப்பது புல்லறிவுதான்."

இதனால் அறிவியக்கத் தலைவர்கள் பலர் தம் நடத்தைகளைப் பற்றிக் கவனியாமல், பேச்சினையே மக்கள் கவனிக்கவேண்டும் என்று கருதியவர்கள் போல வாழ்கின்றன ரென்றால், அது தவறு என்க. தம்வயின் குற்றம் மறையாத இடத்து, என்னதான் அவர் அற்றம் மறைத்துவாழினும் அந்தத் திறன் புல்லறிவே என்க.

## 7. மறைக்கவும் முடியாது

'அற்றம் மறைத்து வாழ்தல் புல்லறிவு' என்றது முன் குறள். அப்படியும் மறைத்து உலகை ஏமாற்றி வாழலாம் போலிருக்கிறதே என்று சிலர், சுயநலக்காரர்கள், மனப்பால் குடிக்கலாம் அல்லவா?

'அப்படி நெடுநாள் மறைத்து வாழ்வதும் உங்களால் முடியாத காரியமாகும். அந்தத் தீயசெயல்கள் தாமே உங்களை என்றாவது காட்டிக் கொடுத்துவிடும் என்கிறது இந்தக் குறள்.

உண்மை பேசுதல் எளிது. பொய் பேசுதலோ மனத்திற்கு எளிதன்று. மிகவும் கட்டுக்கோப்பாகப் பொய் பேசினாலும்கூட நெடுநாள் அது நிலைப்பதில்லை. 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்ற விதியை நினைவிற்கொண்டால் இது தெளிவாகும்.

இதனாலேயே குற்றத்துறை நிர்வாகிகள் எப்படியும் குற்றவாளிகளைப் பிடித்துவிடுகின்றனர் எனலாம்.

மேலும், மனிதனுடைய மூளையின் ஆற்றலைக் குறைக்கும் மருந்துகளை ஊட்டி, அவர்களைச் சில நொடிகள் அந்த அரைநினைவு நிலையிலே இருக்கச் செய்தால், அவர்களால் பொய்யே பேசமுடியாது என்பர் உளநூலார். இது உண்மையுமாகும். மனத்தின் இந்த அமைவுநிலையை வள்ளுவர் உணராதவர் அல்லரே! ஆகவே, அவர் இதனைத் தெளிவுப்டுத்துகின்றார்.

உள்ளத் திண்மை அறியாமையுடையவனிடம் இருத்தற்கில்லை. அதனால், அவனால் தன் செயலை மறைத்து வாழவே முடியாது. காலப்போக்கிலே எப்படியாவது அது அவன் வாயின்மூலமாகவே வெளிப்பட்டு விடும்.

இந்த நிலையைக் காட்டும் சம்பவம் ஒன்றை நாம் பார்க்கலாம்.

ஒரு நிலையத்திலே வேலைபார்த்து வந்த ஒருவன், அங்கிருந்தவோர் இருப்புப் பெட்டியை மிகவும் திறமையாகத் திறந்து, அதிலிருந்த பணம் முழுவதையும் களவாடிக் கொண்டான் அவன் மிகவும் நல்லவன்போல நடித்தான். அவன் செய்திருப்பான் என்றுகூட எவரும் சந்தேகப்படவில்லை. அவனும், நிம்மதியாக, வழக்கம் போலவே வாழ்ந்தும் வந்தான்.

பல வருடங்களுக்குப் பின்னர், ஒரு நாள், அவன் மற்றோர் நிலையத்திலே தற்செயலாக இருந்தபொழுது, அங்குள்ள இருப்புப்பெட்டியின் சாவியைத் தொலைத்துவிட்டு, அந்த நிலைய அதிபர் திண்டாடிக் கொண்டிருந்

தார். அன்று அவருக்கு ஒரு முதன்மையான வேலை. அதற்குரிய பத்திரங்கள் அந்தப் பெட்டியினுள் இருந்தன. பெட்டியை உடைத்தாவது அவற்றை எடுத்துவிட அவர் துடித்துக்கொண்டிருந்தார். அவர் நிலைமை மிகவும் பரிதாபகர மாயிருந்தது. நம் பழையமனிதனின் மனம் தளர்ச்சியடைந்தது.

'கொஞ்சம் பொறுங்கள். நான் திறந்து தருகிறேன். ஒரு சிறு கம்பி இருந்தால் தருகிறீர்களா?' என்றான்.

சொன்னபடியே பெட்டியைத் திறந்தும் விட்டான். அப்போது அந்த முதலாளிகொண்ட மகிழ்ச்சியைச் சொல்லிமுடியாது. தம் நண்பர்களிடம் எல்லாம் சொல்லித் தீர்த்தார். அப்போது, முன்னர்த் திருட்டுக் கொடுத்தவர் மனத்தில் திடீரெனச் சந்தேகம் ஏற்பட்டது. முடிவு, அவன் தண்டிக்கப்பட்டான்.

திருடன், என்னதான் தன்னை மிகவும் திறமையாகவே மறைத்துக்கொண்டிருந்த போதிலும் கூட, அவன் நல்லதென்று நினைத்துச் செய்த செயலே அவனுடைய பழைய குற்றத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டது பார்த்தீர்களா?

இப்படித்தான், அறிவற்றவன் செய்யும் அறிவற்ற செயல்கள், தாமாகவே, அவன் மூலமே வெளிப்பட்டுவிடும் என்க.

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

'அறிவற்றவன் செய்யும் பெரும்பிழைகள் தமக்குத்தாமே அந்த அரிய ரகசியங்களை வெளிப்படுத்தி, அவனையே அழித்துவிடும்.'

இதனால், அறிவுடையோர் என்றுமே பிழையாவன செய்யார் என்று அறிக. அப்படி நடப்பவர்களே அறிவுடையோர் என்றும் உணர்க.

இனி, இதற்கே, 'அரிய மறையாகிய ஒழுக்க விதிகளைக் கடைப்பிடியாது, அதன்கண் சோர்வு கொள்பவராகிய அறிவற்றோர், தமக்குப் பெரிய வருத்தத்தைத் தருவதான செயல்களைத் தாமே செய்பவராவார்' எனவும் பொருள் கொள்வர்.

இது, ஒழுக்க விதிகளை வற்புறுத்துவதாக அமையும். அவ்விதிகள் அறிவுடையோர் ஆய்ந்து செய்தவையேயாம். ஆதலின், இப்படிப் பொருள் கொள்வதும் தவறன்று. தன் ஆணவத்தால், அதனை மறுத்துத் தீத்தொழில் மேற்கொள்பவன் அறிவற்றவன் ஆவான் என்க.

## 8. போபளவும் நோய்!

சிலர் எதனையும் அலட்சியமாகவே பேசுவர். எதனையும் பொருட்படுத்தார். அவர்களைக் கலகலப்பாக இருப்பவர்கள், நெஞ்சுறுதி கொண்டவர்கள் என்று பலர் மயங்குவர். ஆனால், மேற்போக்காக அவரைக் கண்டு மதிப்பிட்டுவிடுவதுடன் அமையாது, அவர்தம் உள்ளத்தின் உண்மையான தன்மையை நாம் கருதுதல்வேண்டும்.

இதில் இன்னொருசெய்தி என்னவென்றால், பொதுவாக உள்ளத்திலே தெளிவுஉடையவர்கள எப்போதுமே அடக்கமாக இருப்பார்களே யன்றி மேற்குறித்தபடி பேசமாட்டார்கள் என்பதாம் அவர்கள் அறிவுத்திறன் உடையவர்களாதலால், தாம் செய்பவை பேசுபவைகளிலே எப்போதும் நிதானத்தையே கையாள்

வார்கள். அதனதன் சாதகபாதகங்களை ஆராய்ந்தே அவர்கள் முடிவுக்கும் வருவர். அவர்கள் மேற்குறித்த படி விளங்குதல் என்றும் இல்லை. அதேபோலச் செய் யக் கூடாதனவற்றை அவர்கள் ஒருபோதும் செய்யத் துணிவதும் இல்லை.

சிலருக்குத் தாமாகவே எதனையும் செய்யத் துணிவும், அறிவுத் திறனும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், வாய்ப்பான சூழ்நிலைகள் அமையும்போது, செய்யவேண்டிய செயல்களைச் செய்யாமலிருப்பது அறியாமையாகும். அதிலும், அறிவுடையோர் அவனி டம், 'இதனை இப்போது செய்தால் நல்ல பயன் உடை யதாம்' என்று அறிவுறுத்திய பின்னரும் அவன் செய் யாமலிருந்து, பின்னர் அப்படிச் செய்தோமில்லையே என வருந்தினால், அவனை என்ன சொல்வது?

தானும் தெளிவோடு எதனையும் செய்யாமல், தெளிவான சிந்தனையுடையவர் ஏவியும் அதனைக் கேட்டு நடவாமல் இருக்கும் அவனை, மனிதன் என்று எப்படிச் சொல்லுவது? அப்படி ஒருவன் சமூகத் திலே வாழ்வது, அவனுயிர் போமளவும் அந்தச் சமூ கத்திற்கே தீராத ஒரு நோயாகத்தான் இருக்கும்.

பகுத்தறிவு இல்லாதவனின் நிலைமை இதுதான். அவனுக்காக உருப்படியாக எதையும் செய்யவும் தெரி யாது; தெரிந்தவர் சொன்னால் அவன் கேட்கவும் மாட்டான்.

மனிதன் வாழ்வது எதற்காக? ஏதாவது நல்ல காரியங்களைச் செய்வதற்குத்தானே? அதைச் செய் யாதவன் வாழ்வு ஒரு வாழ்வாகுமா? அது தீராத நோய் என்றுதான் அறிவுடையோர் கருதுவர்.

**ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
**போஒ மளவுமோர் நோய்.**

'சான்றோர் ஏவினாலும் நல்ல செயல்களைச் செய்ய மாட்டாதவன்; தானும் அப்படிச் செய்யத் துணியாதவன்; அத்தகையவனின் உயிர் அவனுடலைவிட்டுப் போகுமளவும் அவனுக்கும், அவன் வாழும் சமூகத்திற்கும் தீராத நோயேயாகும்.''

அவன் இருப்பதைவிட இறப்பதே நல்லது. இது தான் கருத்து.

பேதை சொல்வதையாவது கேட்பான்; இவன் அதுவும் செய்யாததனால், 'புல்லறிவாளன்' எனப் பட்டனன்.

## 9. குருடன் கண்ட கதை

இந்த உலகிலே, இன்னொரு வகையைச் சார்ந்தவர்களையும் நாம் அடிக்கடி சந்திக்கலாம். இவர்கள் சில செய்திகளைப்பற்றி மிகவும் அழுத்தம் திருத்தமாகப் பேசுவார்கள். தாமே நேரிற்கண்டு ஆராய்ந்து தெளிந்தவர்களைப்போல அவ்வளவு உறுதியுடன் பேச்சுப் போய்க்கொண்டிருக்கும். அந்தப் பேச்சினாலே பலர் மயங்கவும் மயங்குவார்கள்.

மயங்கிய மக்கள் அதனை மறந்து விட்டாலும் பாதகமில்லை. தம் உள்ளத்திலே அதனைக்கொண்டு அதன்படி தாம் நடக்கவும் தொடங்கிவிடுவர். இவனைப் பெரிய அறிஞன் என்று போற்றவும் தொடங்கி விடுவர். அவனுக்கோ அதனால் உச்சி குளிர்ந்துவிடும். தன் பேச்சுக்கு ஆள் சேர்ந்தது என்று பூரித்துப் போவான். மீண்டும் மீண்டும் சரடுகளை அவிழ்த்து விட்டுக்கொண்டே போகவும்செய்வான்.

'தன்னைப்போலவே பலர் கருதுகிறார்களே? அவர்கள் அத்துணைபேரும் முட்டாள்களா ?' என்று, அவன் வாதாடவும் தயங்கமாட்டான்.

இப்படி உலகை ஏமாற்றித் திரிபவர்களை அறிவுடையவர் என்று கூறலாமா? அவர்கள் பேச்சுக்குத் திரண்டுவரும் கூட்டத்தைக் கண்டால், அப்படிச் சொல்லலாம் என்றுதான் தோன்றும். ஆனால், அது தவறு.

அறிவுள்ளவர்கள் அல்லர் அவர்கள். தான் உண்மையென்று தெளியாத ஒன்றைப் பிறருக்கு உண்மையென்று காட்ட முயல்பவன் எவனுமே அறிவுடையவன் அல்லன். அத்தகையவன், புல்லறிவினன்; போலி அறிவினன் என்க.

காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானும் தான்கண்ட வாறு.

"தானே உண்மை காணாத ஒருவன்; அதனைத் தான் கண்டுணர்ந்ததைப் போலப் பிறருக்கும் காட்டிக் கொண்டிருப்பது எப்படிப்பட்டது? தானே குருடனாகக் காணும் சக்தியற்றுப்போன ஒருவன், தன்னைப்போலப் பிறரையும் குருடாகக்கருதித், தான் அளப்பதுபோன்ற மூடத்தனமானதே அதுவாகும்."

அறிவு உடையவர் இங்ஙனம் செய்யார். அவர் தாம் அறிந்து தெளிதல் மட்டுமன்றி, அப்படித் தெரியாத எதனையும் எவரிடமும் உரைப்பதும் இலர்.

"கண், தான் காண்பதில்லை; ஆனால், தான் காணக் காட்டும் இயல்பினை உடையது. இதேபோன்று, தான் உண்மை காணாத ஒருவனும், பிறர்க்கு உண்மை காணக்காட்டுதல் கூடுமோ? எனில், கூடாது. அப்படிக்

காட்டப்படுபவனும் உண்மை காணுதவனே யாவான். அவன் கண்டது, அவனுக்குக் காட்டியவன் கண்டதைப் போன்று பொய்ம்மையாகவே இருக்கும்."

இப்படியும் பொருள் சொல்லலாம். இது புல்லறி வாண்மைச் செயலின் விளேவே என்க,

## 10. பேயாக வைக்கப்படுவான்

நன்மை தருவன தெய்வங்கள்; தீமை விளேப்பன பல்வகைப் பேய்கள்; இவற்றுள் அலகையும் ஒன்று. மனிதர்களிற் சிலரை உலகம் தன்னேப் பிடித்த பேயாகக் கருதும் என்கிறது இக்குறள். அந்தப் பேயர்கள் யார்? அவர்தம் தன்மைகள் யாவை? இவைபற்றி நாம் ஆராய்வோம். 'அலகையா வைக்கப்படும்' என்றதனேயே, முதலில் நாம் கருதவேண்டும். துஷ்ட தேவதைகள் என்று சில; அவை தம்மைக் கொன்று விடும் என்று மக்கள் அஞ்சுவர். அந்த அச்சத்தினுல் அவற்றிற்கு நைவேத்தியங்கள் படைப்பர். மனிதர்களிலும் இப்படி முரண்பட்டவர்கள் இருக்கிருர்கள். அவர்களேயும் அலகைகளாகவே சமூகம் கருதும். யார் அவர்கள்?

உலகம், சமூக வாழ்வியலே அடிப்படையாகக் கொண்டது. சமூக ஒழுக்கமுறைகளே ஒட்டி இயங்குவது. அதனே ஏற்று நடப்பதே சமூகத்தின் உறுப்பினுக இருக்கும் மனிதனின் கடமை. இந்தக் கடமையிலிருந்து அவன் தவறினுல் அவன் சமூக விரோதியாகி விடுகிருன். அவனேச் சமூகம் தன்னே யழிக்க வந்த பேயாகவே கருதும்.

> உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
> அலகையா வைக்கப் படும்.

உலகத்தார் என்பவர், உயர்ந்த அறிவினர் ஆவர். அவர் உண்டென்பது பெரும்பாலும் உண்மையாகவும் அறிவுக்குப் பொருத்தமுடையதாகவும் இருக்கும்.

அதனை 'இல்லை' என்பவன் மிகவும் துணிச்சல் காரன். அவன் அறியாமை உடையவன் என்றுமட்டும் நாம் சொல்லமுடியாது. அவன் சான்றோரை எதிர்ப் பவன் மட்டும் அல்லன். அறிவுக்கே அவன் எதிரான வன். அறிவை எதிர்ப்பவனாதலின், அவனை, அலகை யாகக் கருதி ஒதுக்குவர் உலகத்தார் என்க.

**இதனால் அறிந்தவை :**

(1) அறிவில்லாத தன்மை வறுமையினும் வறுமையாகக் கொள்ளப்பெறும்.

(2) பிற இல்லாமைகளை உலகம் இல்லாமையாக வையாது.

(3) அறிவற்றவன் மணமுவந்து கொடுத்தலைப் பெறுவனுடைய தவம் என்றுதான் கருதவேண்டும்.

(4) அறிவற்றவர், தமக்குத்தாமே பெருங் கெடுதல்களை வருவித்துக்கொள்ளுவர்.

(5) செருக்குக் கொள்ளுதல் அறிவற்றவன் என்றே காட்டும்.

(6) தெரியாத விஷயங்களிலே எவரும் தலை யிடக் கூடாது.

(7) மனக்குற்றத்தைப் போக்காத வரையில் மனிதன் எவ்விதப் பயனும் அற்றவனாவன்.

(8) அறிவற்றவனின் இரகசியங்கள் அவன் வாயாலேயே வெளிவந்துவிடும்.

(9) ஏவினாலும் செய்யாது, தானாகவும் செய்யாதிருப்பவன் உயிர்போமளவும் தீராத ஒரு நோயிருப்பதைப் போன்றவன்.

(10) தான் தெளியாத ஒன்றைப்பற்றிப் பிறருக்கு உபதேசிப்பவன் முட்டாள்.

(11) உலகத்தவர்க்கு எதிராகவே பேசுபவன் உலகத்தைப் பிடித்த அலகையாகவே கருதப்படுவான்.

இவற்றால், புல்லறிவாண்மை என்பது, எத்துணையளவு மனிதனைக் கேட்டுக்கு உள்ளாக்குவது என்று உணர்ந்து, அறிவுடைமைபெற்று, நல்வாழ்வு வாழ நாம் அனைவரும் முயலல் வேண்டும்.

★

# 7. குற்றத்தை நீக்குதல்

'கசடறக் கற்க' என்று முதலிலே சொன்ன குறளின் கருத்தை இதனுடன் நினைத்துப் பார்க்கவேண்டும். 'மன மாசுகள் நீங்குவதற்காகவே ஒருவன் கற்க வேண்டும் என்று, அப்போது சொன்னோம். ஆனால்; அத்தகைய மன மாசுகள் யாவை என்று கூறவில்லை. அது, தனியாக விளக்கப்படவேண்டிய அளவு விரிவானது என்பதனால்தான் அதனை முதலில் சொல்லாதிருந்தோம். இந்தப் பகுதியில் மனமாசுகளின் பல வேறு சாயைகளையும் காண்போம். இவை அறவே நீங்கவேண்டும். அப்படி நீக்கிக்கொள்பவரே அறிவுத் திறனை உடையவர். இதனை மனத்திலே கொண்டு அடுத்துவரும் பகுதியைப் படியுங்கள்.

## 1. செருக்கும் சினமும்

மனத்தைப் பற்றியிருக்கும் குற்றங்களிலே முதலாவதும், மிகவும் ஆபத்தானதும், செருக்கு எனப்படுவதாம். செருக்கு என்றால், ஆணவம் என்று பொருள். அதாவது 'தான்' என்னும் மமதை.' தானே சிறந்தவன்; தானே எல்லாம் அறிந்தவன்; தானே சகலத்தினும் வல்லவன்; இப்படித் தான் தான் என்று ஒருவன் கொள்ளுகின்ற மனத்திமிர்தான் செருக்கு. இது பகுத்தறிவுக்கே பரம வைரியாகும். இதனை உடை

யவன், 'எதனையும் நுட்பமாகத்தெளிவுபடும் வகையிலே நன்றாக ஆராயவேண்டும்' என்ற பகுத்தறிவுப் பண்புக்கே மதிப்புத்தருபவன் ஆகான்.

இதனை அடுத்தபடி, பகுத்தறிவிற்குப் பெரிய விரோதி, 'சினம்' ஆகும். சினம், உணர்ச்சியைக் கைப்பற்றி, ஒருவனைத் தன் ஆதிக்க சக்தியினுள்ளே அடிமையாக்கி விடும்போது, அவன் சிந்திக்கும் தன் இயல்பையே இழந்துவிடுகிறான். அவனுடைய அறிவு அப்படியே மறையச், சினத்தின் தூண்டுதலால் அவன் அறிவற்ற கொடுஞ்செயல்களிலே ஈடுபடவும் செய்கின்றான்.

மூன்றாவதாகச், சிறுமைக் குணம். இதுவும் பகுத்தறிவுக்கு எதிரிதான். சிறுமைக் குணமாவது, தாழ்ந்த இழிவான அபிலாசைகள். மனிதன், அறிவுள்ள மனிதன், உயர்ந்த குறிக்கோள் உடையவனாக வாழ எண்ணவேண்டுமே தவிரச், சான்றோர் இழிந்த அபிலாசைகள் என்று வெறுத்தவற்றிலே மறந்தும் ஈடுபடுவது தவறாகும். இந்தச் சிறுமை, தன் புலன் உணர்ச்சிகளுக்கு மனிதன் அடிமையாகித், தன்னையும் தன்னைச் சார்ந்தாரையும் மறந்து, அந்தப் புலன்களின் பசிகளை நிறைவேற்ற முயலுதல் ஆகும். இதுவும் அறிவுடையோர் நிலையன்று.

செருக்கு இல்லாதவர்கள்; சினத்தை அடக்கியவர்கள்; சிறுமை அற்றவர்கள்; இப்படிப் பட்டவர்களின் பெருக்கம் ஒரு நாட்டிற்கே பெருமிதமான நிலையைத்தரும் இயல்பினதாகும். எனவே, அறிவுப்பாதையிலே செல்பவர், இக் குற்றங்கள் தம்மை ஆக்கிரமிக்க இடங்கொடுத்துவிட லாகாது.

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

'அகந்தையும், கோபமும், சிறுமைக் குணமும் இல்லாதவர்களின் பெருக்கமானது, ஒரு நாட்டுக்கே பெருமிதநிலையைத் தருவதாகும்.'

''பெருக்கம்' என்பதைச் செல்வம் எனக் கொண்டு அம்மூன்று குற்றங்களும் இல்லாதவர்களின் செல்வமானது சான்றோரால் மதிக்கப்படும் பெருந்தன்மையை உடையது' எனவும் உரைப்பர்.

இந்தக் குற்றக்குணங்களை உடையவர்பால் செல்வம் பெருக்கமாயிருப்பதே அரிதாதலால், முதலில் உரைத்ததே கருத்தாகக் கொள்க.

## 2. பொருந்தாத மகிழ்ச்சி

ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய மூன்று முதன்மையான குணங்கள் இவையிவை என்று நாம் காணலாம். அந்த மூன்றும், தலைவன் அறிவு இயக்கத்தின் தலைவன் என்றபோது கட்டாயமாக இருக்கவேண்டிய பண்புகள். அவை இல்லை எனில், அவன் பகுத்தறிவற்றவனாகிவிட, அவன் அறிவாளர் தலைவன் என்ற நிலையே நகைப்பிற்கிடமாகிவிடும்.

செலவு செய்யவேண்டிய சூழ்நிலைகளிலே கட்டாயமாக அவன் செலவு செய்துதான் ஆகவேண்டும். சிக்கனம் கருதியோ, கஞ்சத்தனமாகவோ, அப்புறம் பார்த்துக் கொள்ளலாமென்ற அலட்சிய பாவத்துடனோ, அவன் கையை இருக்கிகொண்டான் என்றால், அவன் முயற்சிகள் அத்துணையுமே பாழ்பட்டுப் போகும்.

மானவுணர்ச்சி வேண்டியதுதான். ஆனால், நல்ல விஷயங்களிலே தலையிடும்போது அந்த உணர்ச்சி தலைதூக்கவேண்டுமே தவிரத் தீயவழிகளைக் காக்க அது பயன்படுத்தப்படக் கூடாது. நல்ல முயற்சிகளிலே தன்மானத்தைக் காட்டி அதற்காக அவன் போராடலாம். அவனைப்பலரும் பின்பற்றுவார்கள். மானத்தைக் காக்கப்பலரும் முன்வருவார்கள் தீயவழிகளிலே அவன் மானத்தை முன்வைத்துப் போராடத் துணிந்தானென்றால், அவனுடைய மானம் பறிபோகுமே தவிர, ஏதும் நடைபெறாது. இதை அவன் நினைவிலே கொள்ள வேண்டும்.

அடுத்தது, அவன் அற்பசந்தோஷியாக என்றுமே விளங்கக் கூடாது என்பது. முழு லட்சியமும் நிறைவேறினாற்கூட அளவோடுதான் தன் மகிழ்ச்சியைக் காட்டவேண்டும், அற்பவெற்றியைக் கண்டு அளவு கடந்த மகிழ்ச்சியடைகிற ஒருவன், காலப்போக்கிலே தன் லட்சியத்தையே காற்றில் பறக்கவிட்டு விடுவான்.

எனவே, செலவு செய்யவேண்டிய இடத்திலே தயங்காது தன் செல்வத்தையும் ஆற்றலையும் செலவு செய்தலும், நன்னெறியைக் கடந்த மானவுணர்ச்சிகளைத் தூண்டிவிடாத தன்மையும், அளவோடு மகிழ்ச்சியை வைத்துவிட்டு மேலும் முன்னேறும் அடக்கமும் உடைய தலைவனே வெற்றிபெறுவான்; இவைகள் இல்லாதவனோ, லட்சியமும் நிறைவேறாமல், தன் தலைமைப் பொறுப்பையும் இழந்து துன்பப்படுவான் என்க.

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

'ஒரு தலைவனுக்குச் செலவழிக்க வேண்டியகாலத்துச் செலவு செய்யாமையும், மாண்பற்றவிடத்தே காட்டும் மானமும், மாட்சியற்ற உவகையும் துன்பந்தருவனவாகும்.'

மாட்சியற்ற உவகை—அளவு கடந்த மகிழ்ச்சி; அல்லது, தீய செயல்களைச் செய்து பெறுகின்ற மகிழ்ச்சி எனவும் கூறலாம்.

அறிவுத்திறன் உடைய தலைவனானவன், எதனையும் நன்றாக ஆராய்ந்தே தன் திட்டங்களை வகுப்பவனாக இருப்பான். ஆதலினால், இந்த மூன்று குற்றங்களிலும் அவன் ஈடுபடான் என்பது கருத்து.

## 3. நினையும் பனையும்

'குற்றம் செய்வது மனித இயல்பு. அதனால், அதனை மறந்து வாழ்க்கையிலே முன்னேறவேண்டும்' என்று இந்தக் காலத்திலே சிலர் உபதேசிக்கிறார்கள். குழந்தைகள் தவறுசெய்தால் மன்னித்து விடலாம். அறிவற்றவர் குற்றம் செய்தால் மறந்து விடலாம். ஆனால், பொறுப்புள்ள ஒருவன், ஒரு தலைவன், அப்படிப் பொறுப்பின்றிக் குற்றம் செய்துவிடலாமா?

'அறிவுடைமை' என்பது, பழி ஏற்படுமோ என்று அஞ்சி, அதனின்று விலகுவது அல்லவோ? அங்ஙனமிருக்கவும், ஒருவன் குற்றம் புரிந்தானென்றால் அவனை என்ன சொல்வது'?

தலைவன் புகழுடையவன்; பலருக்கும் தெரிந்தவன்; அதனால், அவன் செய்த குற்றங்கள் எளிதிலே மக்களிடையே பரவிவிடும். அதனால், அவனுடைய புகழின் எல்லை அளவிற்குப் பழியும் எழும். இப்படிப்

பழி எழுவதற்கு அவன் வெட்கப்படவேண்டும் அல்லவோ ?

அதனால், நல்ல தலைவர்கள், 'நாட்டிலே தம்மீது பழிச்சொல் ஏற்பட்டால் தலைகுனிய நேருமே?' என்ற அச்சம் உள்ளத்திலே உள்ளவர்கள், தினையளவு சிறிய குற்றம் தம்மிடையே தோன்றினாலும், அதனைப் பனையளவாகக் கருதி, அதன் உடனே நீக்கித் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவே முயல்வார்கள்.

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

'தினையளவான குற்றம் தம்மீது வந்தாலும், அதனைப் பனையளவாகக் கொண்டு, அதனால் எழும் பழிக்கு நாணுபவர்களே சிறந்த நாட்டுத்தலைவர்கள். அறிவுடையோர் இயல்பும் இதுவே.'

## 4. காப்பது கடன்

வாழ்க்கையிலே எத்தனையோ குறிக்கோள்கள் மனிதனுக்கு இருக்கவேண்டும் என்பர் சான்றோர். அவற்றுள், மிகவும் முக்கியமான குறிக்கோள் தன் உள்ளத்தினுள்ளே எவ்விதமான தவறான நினைவுகளும் எழாதவாறு தன்னைக் காத்துக்கொள்வதே யாகும். இந்தக் குற்றமான மனவுணர்வுதான் ஒருவனுக்கு அழிவைத்தருகின்ற கொடிய பகையாகும்.

குற்றமே காக்க பொருளாக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை.

'மனத்திலே படிகின்ற குற்றங்களையே குறியாகக் கொண்டு அவை எழாமல் ஒருவன் காப்பானாக. ஏனெனில், அவையே அவனுக்கு அழிவைத் தருகின்ற பகையாகும் ஆதலால்.'

குற்றம் ஒருவனுக்குப் பகையாவது எப்படி? அவனுடைய குற்றங்கள் அவனுடைய புலன் இச்சைகளைத் தூண்டிவிட, அவை கட்டுமீறிச் செயற்படத் தொடங்க, அதனால் அவனுக்கு நேரும் துன்பங்கள் மிகப்பலவாகும். இதுபற்றியே, குற்றம் பகை எனப் பட்டது. பகுத்தறிவு என்பதும் இந்தக் குற்றம் சாராத தெளிவான தூய அறிவுஉடைமையே யாகும்.

## 5. வருமுன்னர்க் காவாதான்

'அறிவுடையார் ஆவது அறிவார்' என்று முன்னரே சொல்லப்பட்டது. அப்படி ஆவது அறிந்தவர்கள் என்ன செய்யவேண்டும்? ஆவது பயனுடையதாயிருந்தால் மேற்கொள்ளல் வேண்டும்; பயனற்றதாயிருந்தால் விட்டுவிடவேண்டும்.

இதே போல, அறிவுடையார், தம் பேச்சையும் எண்ணி அளவோடுதான் பேசவேண்டுமேதவிர, எவ்விதமான ஒரு கட்டுப்பாடுமற்றுக் கண்டபடி பேசுதல் ஆகாது. இன்னின்னவாறு பேசினால், மக்கள் அதனை இன்னின்னவாறு ஏற்றுக் கொள்வார்கள்; அதனால் இன்னின்ன விளைவுகள் ஏற்படும்; என்று, நன்றாக ஆராய்ந்து அறிந்தபின்னரே, ஒருவன் தன் கருத்தை வெளியிடுதல் வேண்டும்.

அங்ஙனமின்றி, ஆத்திரப்பட்டோ அவசரப் பட்டோ, சொற்குற்றம் வரும் வகையிலே பேசினால், அதன் விளைவுகள் விபரீதமாகப் போய்விடும். இவன் ஒன்றை நினைத்துப் பேச, மக்கள் அதனை வேறு விதமாகப் புரிந்து கொண்டு செயலாற்ற, பலவிதத் தொல்லைகட்கு ஆளாகி, அவனுடைய பேச்சினையே வெறுத்து, அவனையும் முடிவில் ஒதுக்கிவிடுவார்கள்.

இதனால், தன் அறிவுடைமையிலே, குற்றம் ஏற்படுவதற்குமுன்னர், அப்படி ஏற்பட்டு விடாதவாறு தன்னைக் காததுக்கொள்ள முடியாத ஒருவனின் வாழ்வு மிகவும் கேவலமாகிவிடும். உதாரணமாகச் சொல்வோமானால், நெருப்பின் முன்னாக வைத்த வைக்கோல்போல அவனுடைய வாழ்வை அது அழித்துவிடும்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

'குற்றமானது தன்மீது வருவதற்கு முன்னர்' அவ்வாறு வராமல் தன் நாவைக் காத்துக்கொள்ள முடியாதவனுடைய வாழ்க்கையானது, தீயின்முன்னர் வைத்த வைக்கோற்போரினைப் போலப் பற்றி எரிந்து அழியும்.'

'குற்றம் வருமுன்னர்' என்பதைப் போலவே, தனக்கு ஆபத்து வருமுன்னர் எனவும் சொல்வாரும் உளர்.

## 6. பிறர் குற்றம் காண்பவன்

அறிவுடையவன் முதலிலே செய்யவேண்டியது தன்னிடத்தே எவ்விதமானவொரு குற்றமும் இல்லாமல் தன்னைத் தூயவனாக ஆக்கிக்கொள்வது ஆகும்.

இதனையடுத்துப், பிறர் செய்யுங் குற்றங்குறைகளையும் கண்டு, அவற்றை அவர்கள் மனம் புண்படாத வகையிலே நிவர்த்திக்க முற்படுவதும் ஆகும்.

இந்த இரண்டு திறனும் உடையவனாக ஒரு தலைவன் விளங்கினான் என்றால், அவனுக்கு எவ்விதக் குறைவுமே ஏற்படாது.

ஆனால், இன்றைய உலகத்திலே இந்த விதமான ஒரு பண்பை நம்மால் காணவே முடியவில்லை. ஒரு

தலைவன். தன் கட்சியின்மீது உள்ள மாபெருங் குற்றங் களையுங்கூட மூடிமறைக்கவே முயல்கின்றான்; ஆனால், எதிர்க்கட்சிகள் சிறுதவறுகள் செய்தபோது, அதனால், எல்லாமே குடிமுழுகி விட்டதைப் போலக் குமுறு கின்றான். இது, அறிவுடையோர் செயலன்றே?

முதலிலே, தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் குற்றமற்றவர்களாக இருக்க வேண்டியதிலேதான் ஒரு தலைவன் கவனஞ் செலுத்தவேண்டும். அப்படி அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் தூயவர்களா யிருந்தால், எதிர்க் கட்சியினரும் தவறு செய்யத் தாமே நாணுவார்கள்.'

ஏசுநாதர் சொன்னதுபோல, 'உன் கண்ணிலே இருக்கிற உத்தரத்தை மறந்துவிட்டு அடுத்தவன் கண்ணிலிருக்கிற துரும்பை நீ பார்க்கிறதென்ன?' என்றுதான் இவர்களைக் கேட்கத் தோன்றுகின்றது.

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு?

தன் குற்றத்தை முதலிலே நீக்கிவிட்டுப், பிறர் குற் றத்தைக் காணமுனைகின்ற ஒரு தலைவனுக்கு,எவ்விதக் குறைபாடுமே வராது.

இதனையே, 'தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் என்? குற்றமாகும் இறைக்கு' என்று கொண்டு கூட்டித், தன் 'குற்றத்தைப் பிறர் அறியாது மறைத்து விட்டுப், பிறர் செய்யும் குற்றங்களையே காண்பதனால், ஒரு தலைவனுக்கு என்ன நன்மை? அப்படிச் செய்வதே தலைவன் என்ற தகுதிக்குக் குற்றம் உடையதாகுமே!' என்றும் பொருள் கொள்ளலாம்.

அறிவு உடைய உள்ளத்திற்கு மாறுபட்ட இயல்பு இது. ஏனெனில், பகுத்தறிவு உடையவன் உள்ளத் தூய்மையிலேயே முதன்மையான அக்கறை காட்டு பவன் ஆவான்.

## 7. செல்வம் கெடும்

செல்வம் ஒருவனிடம் சேர்ந்துவிட்டால் மட்டும் போதாது; அவன், அந்தச் செல்வத்தைச் செலவு செய்யவேண்டிய வழிகளிலே பயன் படுத்தவும் வேண்டும். அப்போதுதான் செல்வம் அவனுக்கு உயர்வையும் புகழையும் தரும். இஃதன்றி, அவன் செல்வத்தை மேலும்மேலும் சேர்த்துக் கொண்டே போவதன்றி, யாதும் நல்லவழிகளிலே பயன்படுத் தாது இருந்தனனென்றால், அவனுக்கு அச்செல்வம் யாதொருவிதத்திலும் பயன்பட்டதாகாது. சுருக்க மாகச் சொல்வதென்றால், பணஞ் சேமித்துவைக்கப் பயன்படுகின்ற இருப்புப்பெட்டிக்கும் அவனுக்கும் எவ்வித வித்தியாசம் இல்லை என்று சொல்லலாம்.

இப்படி இருக்கும் செல்வமாவது அவனிடம் நிலைத்திருக்குமா என்றால் அதுவுமில்லை. அவன் அறி யாமையானது என்றாவது ஒருநாள் அவ்வளவு செல் வத்தையும் அழிவுநிலைக்குக் கொண்டு விட்டாலும் விட்டுவிடும். செல்வம் சென்றுகொண்டே யிருப்பது தான். அது தேங்கி இருந்தால், அதன் இயல்பே மறைந்துவிடும் அல்லவா ?

ஆகவே, பொருள் உடையவன், அதனால் தனக்கு ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வசதிகளை எல்லாம் முறையாக ஏற்படுத்திக் கொள்வதே அறிவுடைமை யாகும் என்க.

**செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.**

செய்யக்கூடியவைகளைச் செய்யாது தவறினவனுடைய செல்வமானது எவ்விதமான உயர்ச்சியும் இன்றி நாளடைவிலே கெட்டும் ஒழியும். 'செல்வம்' என்று பொதுப்படவே சொல்லப்பட்டுள்ளதனுல், இது பொருட்செல்வத்தை மட்டுமல்லாது பிற செல்வங்களையும் குறிக்கும் எனலாம். உதாரணமாக, ஒருவனிடம் நல்ல • ஓவியத்திறனோ, இசைத்திறனோ, நடிப்புத் திறனோ இருந்ததென்ருல், அவன் அவற்றையும் அவ்வவற்றிற்கு உரிய வழிகளிலே பயன்படுத்திஞல் தான் அவன் பயனடைவான்; அவன் திறனை நுகர்ந்த மக்களும் இன்புறுவர் என்க

## 8. பற்றுள்ளம்

சிலர் சொல்லுவார்கள், 'செல்வத்தை வாரி இறைத்துச் செலவழித்து விடலாம் ஐயா; அதனைப் பின்னர் நம்மால் நமக்கு வேண்டும்போது தேடிப் பெறுவதற்கு முடியுமா ? மேலும், நமக்குப் பின்வரும் சந்ததியினர்க்கு நாம் வசதியாக ஏதாவது வைத்துப் போகவேண்டாமா ?' என்று.

இப்படிச் சொல்பவர்கள், அச் செல்வத்தின்மீது அளவுகடந்த பற்று உடையவர்களாக, அது தம்மை விட்டுப் போவதை விரும்பாதவர்களாக இருப்பவர்கள் என்று வேண்டுமாஞல் சொல்லலாமே தவிர, இவர்களைப் பாராட்டமுடியாது.

இதனை மனமாசுகளுள் ஒன்று என்று கருத வேண்டும். அதிலும், மனத்தைப் பற்றியுள்ள பிற குற்றங்களுள் இதுவும் ஒன்றெனக் கருதாது, அவை

அனைத்தினும் மிகவும் கெடுதலானது இது எனவும் உணர்தல் வேண்டும். சான்றோர் இவ்வாறே கருது வார்கள்.

'செல்வத்துப் பயனே துய்த்தல்' என்ற ஆன்றோரின் வாக்கு இங்கே எண்ணத் தக்கதாகும். துய்த்தல் இல்லாத செல்வம், செல்வப் பயனைத் தருவ தல்லவாதலால், அது பயனற்ற செல்வமே என்றும், அவ்வாறு செல்வத்தைப் பயனற்றதாக்கும் பேதைமை அதனைப் பெற்றவரின் உள்ளக் குறைபாடே யெனவும் கொள்க.

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

செல்வத்தின்மீது பற்றுடைய உள்ளம் என்று சொல்லப்படுவதாகிய, செலவழிக்க வேண்டிய விடத்துச் செலவிடாத தன்மையானது, பிற மனக்குறைபாடு களோடு சேர்த்து எண்ணப்படுவதன்று; அவற்றினும் மிகுதியான குறைபாடு உடையதாகும்.

## 9. நன்றி தராத செயல்!

அறிவுத்திறன் உடையவர்கள் தம் செயலிலும் பேச்சிலும் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? அதைப்பற்றிய சட்டத்தை வகுக்கிறது இந்தக் குறள்

எந்தக்காலத்திலும் அறிவுடையவன் தன்னைத் தானே வியந்து போற்றிக் கொள்ளும் தற்புகழ்ச்சி யிலே ஈடுபடுதல் கூடாது. அப்படித் தற்புகழ்ச்சி யிலே ஈடுபட்டனனென்றால், அதன் காரணமாக வளர் கின்ற மமதை, நாளடைவிலே, அவனுடைய அறிவுத் திட்பத்தையே அடியோடு சாய்த்துவிடும்.

இரண்டாவதாக, அவன் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான அறவுரை யாதெனில், அவன் ஒரு போதும் சுயநல இச்சை உடையவனாக இருத்தல் கூடாது. சுயநல மனோபாவத்தைவிட அறிவை அழிக்கின்ற பெரிய பகை வேறெதுவுமே கிடையாது. தன்னையே விரும்பும் இந்த எண்ணத்தினால், ஒருவன் பலப்பல இன்னல்களுக்கு ஆட்படநேரும் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

இந்த இரண்டு செயல்களும், அதாவது தற்பெருமையும் தன் இச்சையும், இவ்வுலகிலே அறிவுள்ள ஒருவனுக்கு என்றும் நன்மைதராத செயல்களாகும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து இவற்றைத் தம் உள்ளத்திலிருந்து அகற்றிவிட வேண்டும்.

வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை

"தன்னை என்றும் வியந்துகொள்ளாதிருக்க; தன்னை என்றும் விரும்பும் குணம் இல்லாதிருக்க; இவ்விரண்டு குறைபாடுகளும் வாழ்விலே நன்மை தராத செயல்களாம்."

'இனி, வியவற்க எஞ்ஞான்றும் தன்னை, என்றும் நயவற்க நன்றி பயவா வினை.' எனக் கூட்டி, "ஒருவன், எந்நாளும் தன்னை வியந்து போற்றாதிருப்பானாக; தனக்கு நன்மை தராதசெயல்களிலே ஈடுபடாதிருப்பானாக" எனவும் பொருள் கொள்வர்.

தன்னை வியத்தலோடு தொடர்பு உடைய செயல் தன்னிச்சையை உடையவனாயிருத்தலே; இவை அறிவுடையவனுக்கு இருக்கக்கூடாத குறைபாடுகள்.

எனவே, முன்னர்க் கூறிய பொருளே மிகவும் பொருத்தம் உடைத்தாயிருப்பது காண்க.

## 10. காதல காதல்!

மனிதன் எதன்மீதாவது இச்சை கொள்வதென்றால், அப்படித் தான் இச்சைகொள்வதைப் பிறர் அறியாமல் அடக்கமாகவே கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான், அவனுடைய முயற்சி முறையாகக் கைகூடிவர, இச்சித்த ஒன்றை அவனும் அடைந்து பயன்பெற முடியும்.

இஃதன்றித் தான் கொண்ட இச்சைகளைப்பற்றிப் பறையறைய அவன் தொடங்கினான் என்றால், அது பலர்பாலும் அதே சிந்தனையைக் கிளப்பிவிட, அவனுக்குப் பல எதிரிகள் தோன்ற, அவன் இச்சையும் நிறைவேறாது கெடும்.

அப்படி அது நிறைவேறினாலும், அவனோடு போட்டியிட்ட பலரும் அவனுக்குப் பகையாகிவிட, அதனால் பெறுகிற இன்பத்திற்குப் பதிலாகத் துன்பமே பெரிதாக அமையும்.

இந்தக் கருத்தின் உள்நோக்கத்தை நாம் பன்முறை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒன்றை ஒருவன் விரும்புவது, அவனுடைய தளர்ச்சித் தன்மையே யாகும். ஆகவே, 'அறிவுடைய ஒருவன், தன்னுடைய தளர்ச்சியைப் பிறர் அறியுமாறு காட்டிக்கொள்வது தவறு.' இது நன்றாகவே விளங்கும்.

> காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
> ஏதில ஏதிலார் நூல்.

'தான் காதல் கொள்வதைப் பிறர் அறியாதவகையிலேயே கொள்க; அஃதன்றிப் பிறர் அறியக் காதல் கொள்வதாயின் அது பயனற்றது; பகைவர்க்கு ஏற்ற தருணத்தைத் தருவதாகவும் அது அமையும்.'

'நேசத்தின் இயல்பினை அறியாதவரோடு ஒருவன் நேசங் கொள்ளாதிருப்பானாக; அவ்வாறு அவன் நேசங்கொண்டு, அவரும் நேசராயினாலும், அந்த நேசமானது பயனற்றதாகும்; அது பகைவரைக் கூடிக் கொண்டதற்குச் சமானமே யாகும்' எனவும் உரைப்பர்.

'ஒரு தலைவன், தான் விரும்பும் பொருள்களின் கண் தனக்குள்ள விருப்பத்தைப் பகைவர் அறியாத வகையிலே அநுபவிக்க வல்லவனாயிருப்பானாயின், அவை வாயிலாகத் தன்னை வசப்படுத்தக் கருதித் திட்டமிடும் பகைவரின் முயற்சிகள் பயன்படாது போகும்' என்பது மற்றொரு பொருளாகும்.

இவை எல்லாவற்றினூடும், 'ஒருவன் தன் தளர்ச்சியைப் பிறர் அறியக் காட்டாதிருப்பானாக!' என்ற ஒரே உண்மை நிலவுவது காண்க.

★

# 8. பேதைமையின் இயல்பு

'அறிவுடைமை' என்ற பகுதியிலே, ஒருவன், எதனையும் பகுத்தறிந்து, அதனதன் நன்மை தீமைகளை உண்மையாக உணர்ந்து தெளிவுகொள்ளுகின்ற அறிவுத்திறன் உடையவனுவதலின் சிறப்பும், பிறவும் பற்றி நாம் ஒருவாறுக அறிந்தோம்.

அடுத்துப், 'புல்லறிவாண்மை' என்ற பகுதியிலே, கீழ்த்தரமான அறிவுடையவன், அதன்காரணமாக அநுபவிக்க நேருகின்ற பற்பலவகையான இன்னல்களையும் பற்றிக் கண்டோம்.

இந்தப் பகுதி, அந்த இரண்டு நிலையையும் கடந்தது; பேதைமைக் குணத்தால் வரும் இன்னல்களைப் பற்றிக் கூறுவது; அதனை ஒழித்து ஒவ்வொருவரும் தெளிவான அறிவுடையவராக வேண்டும் என்று வற்புறுத்துவது.

இதனுல், இதுவும் பகுத்தறிவோடு ஒருவகையிலே தொடர்புடையதே. இதனைப் புரிந்துகொள்வது பகுத்தறிவின் செழுமையினை நன்கு விளங்கிக்கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

'பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்' எனப், பேதைமை ஒரு சிறந்த பண்பாகவும் பேசப்பட்டிருக்

கின்றதே? அங்ஙனமிருக்கவும் அதனை ஒதுக்கவேண்டிய இயல்பு என்று இவ்விடத்தே கூறுவது எங்ஙனம் பொருந்தும்?' இந்த ஐயம் எழுவது இயல்புதான்.

'பேதைமை' என்பது என்னவென்று முதலிலே நாம் சரிவரப் புரிந்து கொண்டால்தான் இதுபற்றிச் சொல்வனவற்றைப் புரிந்துகொள்ள முடியும்.

'கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.' எனப் பேதைமையின் இலக்கணத்தை நம் முன்னோர் தெளிவாக வரையறுத்திருக்கின்றனர். அதாவது, மதிப்பிற்குரிய ஆன்றோர் ஒருவர் ஏதாவது ஒன்றை ஒருமுறை சொல்லிவிட்டால், அதனை அப்படியே எவ்வித ஆராய்ச்சியும் தெளிவும் இல்லாமல் பலமாகப் பற்றிக்கொண்டு, பின்னர்த் தான்கொண்ட அந்த அறிவுரையினையே எப்போதும் கைவிடாமல் இருக்கின்ற பிடிவாதமான ஒரு தன்மை இது.

பெண்கள், பழந்தமிழ் ஆசிரியன்மார்களின் கருத்துப்படி, பெரியவர்களுக்கும் கணவன்மார்க்கும் அடங்கியே நடக்கும் கடமையினர் ஆவர். அதுபற்றியே, ஒழுக்கமுறையிலே இந்தப் பேதைமைக்குணம் அவர்கள்பால் நம் முன்னோரால் வற்புறுத்தப்பெற்றது. காலப்போக்கிலே, பெண்மையின் சிறப்பியல்பாகவும் அது கருதப்பட்டு வலியுறவே, பெண்கள்பால் நாளடைவில் அது அவர்தம் இயல்பாகவும் ஊறி வளர்வதும் ஆயிற்று.

ஆனால், இந்தப் பேதைமைத் தன்மையானது, பகுத்தறிவு உடைமைக்கு முற்றிலுமே மாறுபட்டது. பொதுவாகச் சொல்லப்போனால், காரண காரியங்களை ஆராய்ந்து செயற்படவேண்டிய மனிதப் பண்புக்கே

அறவும் மாறுபட்டது. இந்த அளவிலே இதனை நிறுத்தி, இனி மேற்கொண்டு பேதைமையின் தன்மைகளை நாம் ஆராய்வோம்.

### 1. நஷ்டம் சம்பாதித்தல்

ஒருகாரியத்தைச் செய்பவரின் நோக்கம், அதனைச் செய்வதன்மூலம் தமக்கு நன்மையினை விரும்புவதாகத்தான் இருக்கவேண்டும். ஒருவன், தான் செய்கிற காரியங்களிலே எல்லாம், தனக்கு நன்மை தரக்கூடிய செயல்களைச் செய்யாமல் விட்டுவிடுகிறான்; அவன் விரும்பிச்செய்கின்ற காரியங்களால் அவனுக்குக் கேடுகளே சம்பவிக்கின்றன; எதனையும் செய்யும்போது அதனால் வரும் லாபநஷ்டங்களை ஆராய்ந்து, லாபம் வருவனவற்றையே செய்யவேண்டியதிருக்க, இவனோ, லாபம் வருவனவற்றை எல்லாம் அறியாமையால் உணராது கைநழுவ விட்டுவிட்டு, நட்டம் வருவனவற்றைச் செய்வதிலேயே ஈடுபடுகிறான்; இவனுடைய அறிவு நிலைமையை என்னென்பது ?

இப்படிப்பட்ட நிலைமையுடைய மனப்போக்குத்தான் பேதைமை. அது, தனக்கு நன்மை தராமலிருந்தாற்கூடப் பரவாயில்லை; தீமையையும் அல்லவோ வலியக்கொண்டு சேர்க்கிறது!

பேதைமை என்பதொன்று யாதெனின் •ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்.

'அறியாமை' என்று சொல்லப்படுவதொன்று யாதென்றால், கெடுதியானவற்றைக் கைக்கொண்டு, ஊதியமானவற்றைக் கைவிடுதல்.'

## 2. பேதைமையுள் பேதைமை

'இப்படிப்பட்ட அறியாமையுள் எல்லாம் மிகவும் அறியாமை யாதென்றால், தன் கைக்கு எட்டாத பொருள்களின்மேல் ஆசை கொண்டு அலைதலே யாகும்' என்கிறது அடுத்த குறள்.

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

'காதன்மை கையல்ல தன்கட் செயல்' என்பதற்கு, 'ஒழுங்கல்லாதனவற்றிலே ஆசைவைத்தல்' எனவும் சொல்லலாம்.

## 3. பேதையின் தொழில்

'ஒரு விஷயத்திலே, ஒருவன் வெட்கப் படவேண்டும்' என்ற நிலைமை ஏற்பட்டால், அவன் வெட்கப் பட்டுத் தான் ஆகவேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால், அவனையும் அறியாமை உடையவன் என்றே சான்றோர் கருதுவார்கள்.

அதேபோலத், தேடியடைய வேண்டியவைகளைச், சோம்பியிராது தேடி அடைய முயற்சிசெய்யாத ஒருவனும் அறியாமை உடையவன்தான்.

அன்பு செய்ய வேண்டியதன்பால் அன்பு செய்யாமலிருப்பதும் அறியாமைதான். பேணவேண்டியவைகளைப் பேணுதிருப்பதும் அறியாமைதான்,

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

'வெட்கப்படவேண்டிய இடத்திலே வெட்கப்படாமையும், தேடவேண்டியவைகளைத் தேடாமையும், அன்பு கொள்ளவேண்டிய இடத்திலே அன்பு கொள்ளாமையும், பேண வேண்டியவைகளைப் பேணுமையும்,

ஆகிய எல்லாம் அறியாமை உடையவர்களின் செயல்களாகும்.

## 4. பேதையில் பெரியவன்!

சிலரை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நல்ல கல்விமான்களாக இருப்பார்கள். நல்ல முறையிலே மக்களுக்கு நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்லும் ஆற்றலும் பெற்றிருப்பார்கள். ஆனால், அவர்களுடைய சொந்த வாழ்வோ முற்றிலும் வேறு விதமாயிருக்கும்.

இதைப் பற்றி, ஓர் உவமானத்தை அடிக்கடி கூறுவது வழக்கம். பிறர்மனை நயவாமை பற்றியும், பரத்தையர் ஒழுக்கம்பற்றியும், சிறந்த ஆதாரங்களுடன் அவற்றை நீக்கவேண்டுமென வற்புறுத்திப் பேசினான் ஒருவன். அந்தக் கூட்டத்திலே ஒரு விலைமாதும் இருந்தாள். இந்தப் பேச்சு அவள் மனத்தை மிகவும் கவர்ச்சித்தது. 'இனிமேல், பரத்தைமைத் தொழிலை மேற்கொண்டு பல குடும்பங்களின் அழிவுக்குத் தான் காரணமாயிருப்பதில்லை' என்று, அவள் உறுதிசெய்து கொண்டாள்;

சொற்பொழிவு முடிந்ததும், தனக்கு ஞானோதயம் ஏற்படச் செய்த அந்தப் பெரிய மனிதனைக் கண்டு தன் வணக்கத்தைக கூற, ஆவலுடன சென்றாள் அந்தப் பெண். ஆனால், அவனோ, அவள்மீது அடங்காத மையல் கொண்டான். தன்னை ஏற்று அவள் மகிழ்விக்கவேண்டும் என்று கெஞ்சினான். அவள் கேட்டாள், 'நீங்கள் இன்று இது தவறு என்று உபதேசித்தீர்களே? இப்போது நீங்களே ......?' என்று.

சொற்பொழிவாளன் சிரித்தான்! 'உபதேசம் ஊருக்கடி பெண்ணே! உனக்கும் எனக்கும் இல்லையடி

கண்ணே!' என்றான். அந்தப் பெண்ணின்பால் ஏற்பட்ட மலர்ச்சி அழிய, அந்தப் பேச்சாளனே காரணமாகி விட்டான்.

இப்படிப்பட்ட ஊருக்கு உபதேசிகள் பலரை நாம் காண்கின்றோம். இதுவரை இவர்கள் வஞ்சகர்கள்; ஊரை ஏமாற்றுபவர்கள் என்று நாம் நினைத்திருக்கலாம். ஆனால், குறள், இவர்களைவிடப் பெரிய அறிவீனர்களே கிடையாது என்கிறது.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்.

'பல நூற்களையும் கற்று அவை கூறும் உண்மைப் பொருள்களை உணர்ந்தும், அவற்றைத் தானே பிறர்க்கு எடுத்துரைத்தும் வருகின்ற ஒருவன், தானும் அந்த நெறிகளின்படியே அடங்கி நடக்காதிருப்பானேயாயின், அந்த அறிவற்றவனைப் பார்க்கிலும் அறிவற்றவர்கள் வேறு யாருமே கிடையாது.'

### 5. சேற்றில் அழுந்துவான்

'ஏதோ, ஒரு தடவை அறிவீனமாகக்காரியத்தைச் செய்து விட்டால் குடியா முழுகிவிடும்?' என்று, அதற்கு ஒரு போக்குவிடச் சிலர் முயற்சிப்பார்கள். அது தவறு.

ஒருமுறை முட்டாள் தனமாக காரியத்தைச் செய்கின்ற ஒருவனை, அதற்காகவே காலமெல்லாம் தூற்றலாமா? அல்லது, அவன் செயலை மறந்து விடலாமா? நாம் மறந்து விடலாம்; ஆனால், 'அந்த முதல் முட்டாள் தனத்தால் அவன்படும் அவத்தைகள் அவனை என்றென்றைக்கும் விடாது அழுத்திக் கொண்டிருக்குமே?' என்கிறது குறள்.

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு.

'எந்தக் காலத்திலும் தான் கிடந்து உழல்கின்ற தான பெருந்துன்பத்தைத், தான் ஒருமுறை செய்கின்ற அறிவற்ற செயலின் காரணமாகவே, அறிவற்றவன் தனக்குத் தேடிக் கொள்வான்.'

அறிவற்ற செயலால் விளைகின்ற பெருங்கேட்டினை வற்புறுத்துவது இது. ஒருமுறை செய்தாற் கூட அதன் பயனான கேடு என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதன் மூலம், 'என்றும் அறிவற்ற செயலிலே ஈடுபடுதலே கூடாது' என்று எச்சரிக்கின்றது குறள்.

இதன் கொடுமையைச் சரிவர நாம் உணர வேண்டுமானால், ஓர் இளங்கன்னி தகுதியற்ற ஒருவனைத் தன் அறியாமையால் காதலித்து, அவனையே நம்பிக் களவிலே உறவாடிப், பின் அவன் கைவிட்டுப் போகக், காலமெல்லாம் கிடந்து நொந்துபோவதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

இதே போலத், தொழில் துறைகளிலும், பிற சமுதாய வாழ்வியல் துறைகளிலும், ஒருமுறை செய்து விடுகின்ற அறிவற்ற செயலால், வாழ்நாளெல்லாம் துன்புறுகின்றவர் பலராவர். இது பற்றியே, அறியாமையைக் களைவதன் அவசியத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து, கற்று, அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்கிறது குறள்.

### 6. பொய்படும் ஒன்றோ?

எந்தக் காரியத்தையானாலும், அதனைச் செய்யும் வகை துறைகளை முற்றவும் தெளிவாக அறிந்து தெளிந்தபின்னர்ச் செய்தலே சிறப்பாகும். அப்படித்

தெளிவோடும் திட்டத்துடனும் செய்யவேண்டுமானல் அதற்கேற்ற அறிவுத்திறனும் வேண்டும் அஃதின்றேல், அறிந்தோர்வாய்க் கேட்டு ஒழுகும் கேள்வி யாவது வேண்டும்.

இவை யாவும் இல்லாத அறிவற்ற ஒருவன், 'தன்னால் முடியும் என்ற மனச்செருக்குடன், தன்னுடைய தளர்ந்த நிலையை மனத்திலே எண்ணுதவனுகத் தானே செய்து முடித்துவிட முயன்றால், என்னவாகும்?

அதனால் பெறலாம், என நினைக்கும் பயனும் பொய்ப்பட்டுப்போக, : அவன் குற்றத்தைப் பொருத சமூகம் அவனைத் தண்டிக்கவும் முன்வரும். அவன் விலங்குபூணுகிற நிலைக்கும் சென்றாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

'ஒன்றைச் செய்யும் வகையறியாத பேதைமைக் குணமுடையவன், ஒரு காரியத்தை மேற்கொண்டால், அவன் முயற்சிகளும் பொய்பட்டுப்போக, அவனும் விலங்கு பூண்கின்ற நிலைவரைக்கும் அல்லற் படவும் நேரும்.'

'ஒன்றோ? புனைபூணும் பொய்படும்!' எனக் கூட்டி, 'அவன் அநுபவிக்கும் தொல்லைகள்தாம் ஒன்றிரண்டோ? அவனுடைய ஒப்பனைகள் அத்துணையுமே பொய்பட்டுப் போகும்!' எனவும் உரைக்கலாம்.

அதாவது, அந்தச் செயலால் வரும் தீய விளைவுகள், அவனுடைய ஏனைய முயற்சிகளையும் பாழ்படுத்தி விடும் என்பது கருத்து.

## 7. பேதையின் செல்வம்

பேதைமைக் குணம் உடையவனிடம் எவ்வகை யினாலோ பெருஞ்செல்வம் சேர்ந்து விடுகிறதென்றே வைத்துக் கொள்வோம். அது எவ்வாறு பயன்படும்?

அவனுக்கு எவ்விதமான தொடர்பும் நன்மையும் இல்லாத வேற்றார் பலரும் அதனை அநுபவிக்க, அவனைச் சேர்ந்தவர்கள் பசியோடு கிடந்து அல்லற் படுவார்கள்.

ஏனென்றால், தன்னவரை முதலிற் பேணவேண் டும் என்ற அறிவுதான் அவனிடம் இருக்கக் காரணம் இல்லையே!

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

'மூடன் பெருஞ்செல்வம் பெற்ற விடத்து, ஏது மற்ற பிறர் அதனை அநுபவிக்க, அவனைச் சார்ந்தவர் பசியோடிருப்பார்கள்.'

இது எப்படிச் சாத்தியமாகும்?

தமர் அவன்மீது அன்புடையவர். அவனுக்கு நல்ல யோசனைகளையே சொல்வார்கள். இவை அவன் மனத்தில் ஏறுவது மட்டுமல்ல, அவர்களை அவன் வெறுத்து ஒதுக்குமாறும் செய்துவிடும்.

பிறர் அவன் செல்வத்தை இச்சித்தே அவனிடம் வருபவர். அவன் மனப்போக்கிற்கு இசைய அவனைத் தீயவழிகளிலே தூண்டிவிட்டுத் தாம் லாபம் பெறுவ திலேயே அவர்கள் கண்ணுயிருப்பார்கள்.

சூதாடிகளிலே பலருடைய சோகக் கதைகள், இந்தத், 'தமர் பசிக்க ஏதிலார் துய்க்கும்' நிலைக்கு, நல்ல உதாரணங்களாகும்.

## 8. உடைமை பெறின்

போதையினுல், அறிவுமயங்கிய ஒருவன் களி வெறி கொள்வதை நாம் பார்த்திருக்கிறோ மல்லவா! அது உண்மையான மகிழ்ச்சியாகுமா? அல்லது, அதனுல் அவனுக்குத்தான் ஏதாவது நன்மைகள் ஏற் படுமா?

இதே நிலைமைதான், அறிவற்றவன் கையிலே செல்வங் குவிந்தாலும் ஏற்படும்

கண்மூடித்தனமாக அவற்றை வாரி இறைத்து விட்டுக், கடைசியில், அவனும் அவனைச் சேர்ந்தவர் களும் சோகத்திலே கிடந்து உழலவேண்டியதுதான்

மையல் ஒருவன் களித்தற்ருல் பேதைதன்
கையொன் றுடைமை பென்றி.

'அறிவற்றவன், தன் கையிடமாகப் பொருள் ஒன்றைப் பெற்ருன் என்ருல், அது இயற்கையாகவே மயக்கநிலையிலே இருக்கும் ஒருவன், மேலும் கள்ளைக் குடித்தது போலாகும்.'

## 9. பேதையர் தொடர்பு

அர வற்றவர் தொடர்பு ஒருவகையிலே நமக்கு மிகவும் நல்லதுதான். ஏனென்ருல் அவரைப் பிரியும் போது நமக்கு எவ்விதமான வருத்தமும் ஏற்படா தல்லவா?

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்.

இதன்மூலம், பேதையார் தொடர்பையே எள்ளி நகையாடுகிறது குறள். அவர் தொடர்பு பயனற்றது என்பதே கருத்தாகும்.

## 10. பேதை புகுந்தால்

சான்றோர் அவையானது மனிதனின் உள்ளத்திலே தூய்மைகளைச் சேர்க்கின்ற புனிதமான இடம். அறிவின் செழுமையும், தூய்மையின் செறிவும், அன்பின் நெருக்கமும், பண்பின் பெருக்கமும் அங்கே நிலவும்.

அந்த இடத்திலே செல்வோர் தூய்மையுடனேயே செல்லல் வேண்டும். ஏனென்றால் அதனால் சென்ற அந்த இடம் மாசுபட்டு விடுதல் கூடாதல்லவா! முட்டாள் ஒருவனை இருக்க இடங்கொடுத்த சான்றோர் மன்றம், தன் தகுதியையுமன்றோ இழந்துவிடும்!

மாசுபடிந்த தன் காலைக் கழுவாதவன், தூயவிடங்களிலே சென்று மிதித்து அவற்றையும், மாசுபடுத்துவது போன்றதையே, அறிவற்றவன், சான்றோர் அவையிலே செல்வதற்கும் ஒப்பிடலாம்.

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

'சான்றோர் அவையிலே அறிவற்றவன் புகுதலானது, தூய்மையற்றதை மிதித்துக் காலை மாசுபடுத்திக் கொண்ட ஒருவன் பள்ளியுள்ளும் காலடி எடுத்து வைத்து அதனையும் பாழ்படுத்தியது போலாகும்.'

'பள்ளி' என்பதற்குச் சமணர் தொழுகை இடங்கள் என்பர். இறையை நினைக்கும் இடங்களைப் 'பள்ளி வாசல்' என்பது தென்னாட்டு முஸ்லீம்களின் இயல்பு. பௌத்தரும், 'பள்ளி' என்றே சொல்வர். அறிவை வளர்க்கும் நிலையங்கள் பலவும் 'பள்ளி' என்றே வழங்கப்படுகின்றன.

இதனால், 'கழா அக்கால்' என்பதைக் காலைக் கழுவாது என்று பொருள் கொள்வதினும், மனமாசுகளை அகற்றாத ஒருவனைப் புனிதமான இடங்களிலே சேர்த்துக் கொண்டாற் போல்வது, சான்றோர் அவையிலே பேதையைப் புகவிடுவது' என உரைப்பதே பொருத்தமாகும்.

பேதைமையால் வரும் விபரீத விளைவுகளை உணர்ந்து, அதனை ஒழித்து, அறிவுபெற்று, வாழ்வில் உயர்வதற்கு அனைவரும் முயலல் வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

★

கற்பகாம்பிகை
பதிப்பகம்